# வணிக தீபம்

# VANIHA THEEPAM

## *1991 - 1992*

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No 3612

## யா/யூனியன் கல்லூரி தெல்லிப்பளை

### J/UNION COLLEGE TELLIPPALAI.

தீபம் 3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments from

**AGRO Industrial Engineering Works**

COURTS ROAD,
MALLAKAM.

AND

**THAVAM Engineering Works**

PALALY ROAD,
KONDAVIL.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வணிக தீபம்

# VANIHA THEEPAM

## 1991 - 1992

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No. 3612

இதழாசிரியர்

**செல்வன் பாலசுப்பிரமணியம் பாலேந்திரன்**

**வணிக மாணவர் ஒன்றியம்**
*யா / யூனியன் கல்லூரி,*
**தெல்லிப்பழை.**

*Commerce Student's Union,*
*J / Union College,*
*Tellippalai.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1990 ஆம் ஆண்டு பல்கலைக்கழக அனுமதி பெற்றோர்

### முகாமைத்துவத்துறை

A. J. G. ஜெயச்சந்திரா

### வணிகத்துறை

K. ரவிகரன்
R. சிவகரன்
S. சோமாஸ்கந்தர்
R. சிவரூபன்
T. ராகினி
T. ரஜனி
P. நளினி
T. வித்தியா
S. றோகிணி

## 1990 ஆம் ஆண்டு அடிப்படை புள்ளிகள் பெற்றோர்

A. ஜெயக்குமார்
C. S. C. குலேந்திரன்
M. ஜெயச்சந்திரன்
K. மனோகரன்
R. நவகேதீஸ்வரன்
T. வாமதேவன்
R. ராதாகிருஷ்ணா
M. பரமேஷ்வரன்
T. அனுஷியா
C. எமல்டா
M. கீதாஞ்சலி
V. கஜனி
K. கிரிஜா
K. நிகேதினி
M. புவனராணி
N. சாந்தாதேவி
R. சாந்தினி
N. சிவகௌரி
S. சுஜிர்தா
S. திருமகள்
S. வனிதா
S. கலைமகள்
M. சுபாஜினி
B. வாசுகி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிர்வாக சபை ஒழுங்கு

யாழ் / யூனியன் கல்லூரியின்

# உயர்தர வணிக மாணவர் ஒன்றியம் - 1992

| | | |
|---|---|---|
| காப்பாளர் | : | திரு. N. கந்தசாமி |
| பொறுப்பாசிரியர் | : | திரு. P. கமலநாதன் |
| உப பொறுப்பாசிரியர் | : | செல்வி P. நாகரட்ணம் |
| | : | செல்வி J. செந்தில்வேல் |
| | : | செல்வி J. சின்னையா |
| | : | திருமதி J. ஜெயசீலன் |
| தலைவர் | : | செல்வன் A. J. பற்றிக்ஜெயக்குமார் |
| உப தலைவர் | : | செல்வன் S. சூரியகுமார் |
| செயலாளர் | : | செல்வி V. செல்வகௌரி |
| உப செயலாளர் | : | செல்வி T. நித்தியா |
| பொருளாளர் | : | செல்வன் P. கலைக்குமாரன் |
| பத்திராதிபர் | : | செல்வன் B. பாலேந்திரன் |
| உப பத்திராதிபர் | : | செல்வன் K. விமலன் |
| கணக்குப் பரிசோதகர் | : | செல்வன் S. சுகிர்தன் |
| நிர்வாக சபை உறுப்பினர்கள் | : | செல்வன் சுகிர்ததாஸ் |
| | : | செல்வி K. மஞ்சுளா |
| | : | செல்வன் S. சிவனேசன் |
| | : | செல்வி K. பாமினி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லூரி அதிபர் அவர்களின் ஆசிச் செய்தி

யா/யூனியன் கல்லூரி வணிக மாணவர் மன்றத்தினால் வெளியிடப்படும் மூன்றாவது இதழான ''வணிகதீபம்' எனும் மலருக்கு இக்கல்லூரி அதிபர், மன்றத்தின் போஷகர் என்ற முறையில் ஆசிச்செய்தி வழங்குவதையிட்டு பெருமகிழ்வு அடைகிறேன். மாணவர்கள் இடப்பெயர்ந்து பல இன்னல்களுக்கு இடையிலும் தங்களின் விடா முயற்சியினால் இம் மலரை வெளியிடுவதையிட்டு நான் மனநிறைவு கொள்கின்றேன். இன்றைய காலகட்டத்தில் கல்வி வளர்ச்சி குன்றிய நிலையிலும் எமது மாணவர்கள் கட்டுரைகளை எழுதி ஒரு மலராக வெளியிட்டுள்ளனர். இதை நாம் பாராட்டுகிறோம் அத்துடன் தமிழில் குறைந்த அளவிலேயே நூல்கள் கிடைக்கும் இவ்வேளையில் வர்த்தக மாணவர்களுக்கு இம் மலர் ஒரு வரப்பிரசாதமாக அமையும் என்பதைக் குறிப்பிட வேண்டியதில்லை.

இம் மலரை வெளிக்கொணர ஆக்கமும் ஊக்கமும் அளித்த எமது ஆசிரியர்களுக்கும், பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்கும், ஏனைய நலன் விரும்பிகளுக்கும் எனது மனப்பூர்வமான நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன். இன்னமும் பல வெளியீடுகளை இம்மன்றம் வெளிக்கொணர வேண்டும் என்றும் வாழ்த்துகிறேன்.

யூனியன் கல்லூரி,
தெல்லிப்பழை,
93 - 03 - 13.

நா. கந்தசாமி (அதிபர்)
யூனியன் கல்லூரி,
தெல்லிப்பழை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் அதிபர்



திரு. N. கந்தசாமி B. Sc ( Madras )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரதிக் கல்விப் பணிப்பாளர் (வர்த்தகம்) அவர்களின்

# ஆசிச் செய்தி



யா/யூனியன் கல்லூரியின் வணிக மாணவர் மன்றத்தினால் வெளியிடப்படும் மூன்றாவது 'வணிகதீபம்' மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் பெருமிதமும், பெருமகிழ்ச்சியும் அடைகின்றேன். மாணவர்களின் சிந்தனை வளர்ச்சிக்கு, பரந்த மனப்பான்மை பெறுவதற்கு இவ்வகையான மலர் வெளியிடும் முயற்சி உதவியாக அமையும். மேலும் மாணவர்கள் பொருளியல், வர்த்தகம் கணக்கியல் ஆகிய துறைகளில் யதார்த்த ரீதியான கருத்துக்களைப் பெறுவதற்கு இம்மலர் முற்று முழுதாக துணைபோகும் என்பதில் எனக்குப் பூரண நம்பிக்கை உண்டு.

இன்றைய காலகட்டத்திலும் மாணவர்களின் விடா முயற்சிக்கு ஊக்கமும் ஆக்கமும் கொடுத்துவரும் அதிபர், ஆசிரியர்கள், நலன்விரும்பிகளைப் பாராட்டுவதோடு எனது நன்றியையும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். வாழ்க, வளர்க என வணிக தீபத்தை வாழ்த்துகிறேன்.

கல்வித்திணைக்களம்,
யாழ்ப்பாணம்.
93 - 03 - 01

சி. சிவராசா
பிரதிக்கல்விப்பணிப்பாளர்
( வர்த்தகம் )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்றப் பொறுப்பாசிரியரின்

# ஆசிச் செய்தி

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி வணிக மாணவர் மன்றத்தினால் வெளியிடப் படும் 'வணிகதீபம்' சஞ்சிகைக்கு எனது ஆசிச்செய்தியை வழங்குவதில் மிகுந்த மகிழ்ச்சி யடைகின்றேன்.

தற்போது தமிழ்மொழியில் நவீன வணிக நடைமுறைகள் கருத்துக்கள், தகவல் கள், கட்டுரைகள் ஆகியவை வெளிவருவது மிகக் குறைவாகவேயுள்ளன. இக்குறை யைப் போக்கத்தக்க வகையில் இன்று பாடசாலைகள் மட்டத்தில் வணிக மாணவர் மன்றத்தினால் வணிக சஞ்சிகைகள் வெளியிடும் யுகம் ஒன்று பிறந்துள்ளது. இதற் கமைய எமது கல்லூரி வணிக மாணவர் மன்றமும் தனது மூன்றாவது 'வணிகதீபம்' சஞ்சிகையைப் பெருமுயற்சியுடன் வெளியிடுவது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

இச் சஞ்சிகையில் மாணவர்களினாலும், பல்கலைக்கழக விரிவுரையாளர்களினா லும் எழுதப்பட்ட கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. இவை உயர்தர வகுப்பிற் கல்வி கற்கும் கலை, வர்த்தகப் பிரிவு மாணவர்களுக்கு பயனளிக்கத்தக்க முறையில் அமைந் திருப்பது மாணவ உலகிற்கு பெரும் பயனுடையதாக அமையுமென நம்புகிறேன்.

இச் சஞ்சிகை வெளிவருவதற்கு பல்வேறு வகையிலும் உதவியவர்களுக்கு மன் றப் பொறுப்பாசிரியர் என்றவகையில் நன்றி கூறுகிறேன்.

இச் சஞ்சிகையை வெளியிடுவதற்கு அயராது உழைத்த வணிக மன்ற மாண வர்களையும் இச்சந்தர்ப்பத்திற் பாராட்டுவதுடன், அவர்களின் இம்முயற்சி வருங்கா லத்திலும் சிறப்புடன் தொடரவேண்டுமெனவும் வாழ்த்துகின்றேன்.

பொ. கமலநாதன்
வணிக மன்றப் பொறுப்பாசிரியர்

யூனியன் கல்லூரி,
தெல்லிப்பழை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதழாசிரியர் இதயமதிலிருந்து...

175 ஆண்டுகளைக் கடந்துவிட்ட நிலையிலே யாழ்/இராமநாதன் கல்லூரியில் தற்காலிகமாக இயங்கிக் கொண்டிருக்கும் யாழ்/யூனியன் கல்லூரியின் வர்த்தக மாணவர் ஒன்றியத்தால் வருடா வருடம் வெளியிடப்படும் ''வணிகதீபம்'' சஞ்சிகையின் மூன்றாவது மலரை வெளியிட்டு வைப்பதிலே நான் பெரு மகிழ்ச்சியடைகின்றேன். ஆனாலும் தவிர்க்க முடியாத நாட்டு சூழ்நிலைகள் காரணமாக இம் மலரை வெளிக்கொணர்வதில் ஏற்பட்ட தாமதத்திற்கு மனம் வருந்துகிறேன்.

இம் மலரானது வர்த்தக கலைப்பிரிவு மாணவர்களிற்கு அரியதொரு பொக்கிஷமாக இருக்கும் என்பதிலே எந்த ஒரு ஐயப்பாடுகளும் இல்லை. மன்ற மாணவர்கள் இம் மலரிற்கு சிறந்த ஒளியூட்ட வேண்டும் என்ற எண்ணத்திலே சிந்தனை என்னும் எரு போட்டு அறிவு என்னும் நீர் வார்த்து செழிப்புறச் செய்துள்ளமை அவர்களின் ஒளிமயமான எதிர்காலத்தை புடம் போட்டுக் காட்டுகின்றது.

இம் மலரை வெளிக் கொணரும் முயற்சியிலே என்னோடும், மன்ற உறுப்பினர்களோடும் இணைந்து செயற்பட்ட அனைத்து ஆசிரியர்க்கும், பெரியோர்களிற்கும் புத்தி ஜீவிகளிற்கும் நன்றி கூறி யூனியன் தாயின் பாதங்களில் இம் மலரை சமர்ப்பணம் செய்கிறேன்.

நன்றி

இதழாசிரியர்:-
பாலசுப்பிரமணியம் பாலேந்திரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லூரிக் கீதம்

இராகம்: ஆனந்தபைரவி தாளம்: ஆதி

பல்லவி

வாழ்த்தி வணங்கி மகிழ்வோம் - உவந்துதலை
தாழ்த்திப் பணிந்து தொழுவோம் - யூனியன் தாயை — வாழ்

அநுபல்லவி

தெல்லி மணிநகர்க்கோர் திலகமெனத் திகழ்ந்தே
செல்வங் கொழிக்குங் கலைக் கோயிற் பணிபுகழ்ந்து — வாழ்

சரணங்கள்

ஆதி பகவன் வழி அறிவுச் சுடர்விரித்தே
நீதி நெறியில் நெஞ்ச நிறைவுக் கருளளித்து
சாதி சமய இன சமரச ஞான மொளிர்
சோதிச் சுடரி லிசன் சுருதிப் பொருளுணர்ந்தே — வாழ்

வாழ்வுக் கிலக்கியமாய் வளர்ச்சிக் கிலக்கணமாய்
ஆழ்கட லுக்குயிரை அர்ப்பணித் திங்குயிர்த்தே
சூழிருள் கொய்தேயன்று சுடரொளி ஏற்ற வந்த
ஊழிய ருள்ளமென உயர்ந்தன்னை வாழ்கவென்றே — வாழ்

அன்பின் வழியறிந்தும் அறனின் திறமுணர்ந்தும்
பண்பின் பயனறிந்தும் பாவித் தளித்து நின்றே
இன்ப நினைவலைகள் இதயத் தொலிக்கு வென்று
நண்புக் கினிய தாயை நாடி யணைந்து நின்றே — வாழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட ஒழுங்கு

இருப்பவர்கள் (இ—> வ)

திருமதி. த. ஜெயசீலன் (உதவி பொறுப்பாசிரியர்) செல்வி. ஜெ. செந்தில்வேல் (உதவி பொறுப்பாசிரியர்), செல்வி. வெ. செல்வகௌரி (செயலாளர்), திரு. ந. கந்தசாமி (அதிபர்), செல்வன். அ. ஜெ. பற்றிக் ஜெயக்குமார் (தலைவர்), திரு. பொ. கமலநாதன் (பொறுப்பாசிரியர்), செல்வி. ப. நாகரத்தினம் (உதவி பொறுப்பாசிரியர்)

நிற்பவர்கள் 1ம் வரிசை (இ—> வ)

**செல்வன். B. பாலேந்திரன்** (பத்திராதிபர்) **செல்வி. தி. நித்தியா** (உப செயலாளர்) **செல்வி. க. மஞ்சுளா** (நிர்வாக சபை உறுப்பினர்), **செல்வி. ச. சுபாங்கி** (விளம்பரப் பொறுப்பாளர்) **செல்வி. கு. பாமினி** (நிர்வாக சபை உறுப்பினர்) **செல்வன். வ. கலைக்குமரன்** (பொருளாளர்)

நிற்பவர்கள் 2ம் வரிசை (இ—> வ)


**செல்வன். சோ. சுகிர்தன்** (கணக்காய்வாளர்), **செல்வன். க. விமலன்** (உப பத்திராதிபர்), **செல்வன். சு. சுகிர்ததாஸ்** (நிர்வாக சபை உறுப்பினர்), **செல்வன். வே. துஷ்யந்தன்**(விளம்பர பொறுப்பாளர்), **செல்வன். சி. சூரியகுமாரன்** (உப தலைவர்), **செல்வன். ச. சிவநேசன்** (நிர்வாக சபை உறுப்பினர்), **செல்வன். வே. முரளீதரன்** (விளம்பரப்பொறுப்பாளர்)

சமூகமளிக்காதோர் **செல்வி. M. வினோதா** (விளம்பரப் பொறுப்பாளர்)

செல்வி. J. சின்னையா (உதவி பொறுப்பாசிரியர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீபத்தின் ஒளியிலே......

பக்கம்


1. வர்த்தக அபிவிருத்தியில் தொடர்பாடலின் பங்கு — 1
— திரு. க. தேவராஜா
(சிரேஷ்ட விரிவுரையாளர்
வணிகத்துறை
யாழ். பல்கலைக்கழகம்)

2. இலங்கையின் உலக வர்த்தக நிலையம் — 7
— செல்வன். M. குணநிதி
(ஆண்டு 13, வர்த்தகப் பிரிவு)

3. கூட்டுறவு வங்கிச் செயற்பாடுகளும் தற்காலப் போக்குகளும் — 13
— செல்வன். S. சுகிர்தன்
(ஆண்டு 13, வர்த்தகப் பிரிவு)

4. பங்குச் சந்தை நடவடிக்கைகள் — 21
— செல்வன். G. தேமதுரன்
(ஆண்டு 13, வர்த்தகப் பிரிவு)

5. அலுவலகச் சாதனங்கள் — 25
— செல்வன் A. J. பற்றிக் ஜெயகுமார்
(ஆண்டு 13, வர்த்தகப் பிரிவு)

6. நிலையான சொத்துக்களின் கணக்கீடும் கணக்கீட்டு நியமம் 18 — 29
— செல்வி. யோ. ரதிராணி
(சிரேஷ்ட விரிவுரையாளர்
முகாமைத்துறை
யாழ். பல்கலைக்கழகம்)

7. வாடகைக் கொள்வனவு — 38
— செல்வி. V. செல்வகௌரி
(ஆண்டு 13, வர்த்தகப்பிரிவு)

8. விவசாயப் பொருட்களின் விலைத் தளம்பலும் அரசாங்க நடவடிக்கைகளும் — 52
— திரு. ப. சிவநாதன்
(சிரேஷ்ட விரிவுரையாளர்
பொருளியல்துறை
யாழ். பல்கலைக்கழகம்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. ஜனசக்தி நம்பிக்கை பொறுப்பு நிதியம் 58
— செல்வன். சுகிர்ததாஸ்
(ஆண்டு 13, வர்த்தகப் பிரிவு)

10. இலங்கையின் திறந்த பொருளாதார கொள்கையும் மரபு ரீதியற்ற ஏற்றுமதிகளும் 64
— செல்வன். V. கலைக்குமரன்
(ஆண்டு 13, வர்த்தகப் பிரிவு)

11. சர்வதேச உலகும் சோவியத் யூனியனின் வீழ்ச்சியும் 69
— செல்வன். பா. மணிவண்ணன்
(ஆண்டு 13, கலைப் பிரிவு)

12. இந்துப் பண்பாட்டில் பெண்களின் நிலைப்பாடு 77
— செல்வி K. பிரேமரஜனி
(ஆண்டு 13, கலைப்பிரிவு)

13. தமிழில் பிறமொழிச் சொற்கள் 80
— செல்வி M. சாந்திமலர்
(ஆண்டு 13, கலைப் பிரிவு)

14. புள்ளி விபரவியல் 84
— செல்வன். B. ஜெயகரன்
(ஆண்டு 13, வர்த்தகப் பிரிவு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வர்த்தக அபிவிருத்தியில் தொடர்பாடலின் பங்கு

க. தேவராஜா
*(சிரேஷ்ட விரிவுரையாளர்)*
யாழ். பல்கலைக்கழகம்.

## 1.0 அறிமுகம்

ஒருவரிடமிருந்து இன்னொருவருக்குத் தகவல் பரிமாற்றப்படும் நடவடிக்கையினைத் தொடர்பாடல் என்பர். வர்த்தகத்தில் எந்தவொரு நடவடிக்கையினையும் மேற்கொள்ளும் பொழுது பெருமளவான தகவல்கள் பரிமாற்றப்பட வேண்டும் என்பதனால் தொடர்பாடல் மிக முக்கியம் பெறுகின்றது. நிறுவனமொன்று உள்நாட்டு வியாபார நடவடிக்கைகளிலும் வெளிநாட்டு வியாபார நடவடிக்கைகளிலும் பெருமளவான தகவல்களைப் பரிமாற்ற வேண்டியிருக்கும். குறிப்பாக ஏனைய நிறுவனங்கள், பொதுமக்கள், வாடிக்கையாளர் பொருள் விநியோகிப்போர், ஊழியர் போன்றோருக்குத் தேவைப்படும் தகவல்களைப் பரிமாற்ற தொடர்பாடலே அவசியமாகின்றது.

நிறுவனமொன்றின் தொடர்பாடல் கருமத்துடன் செய்தியை அளிப்பவன் (Sender) செய்தியை ஏற்பவன் (Receiver) என இருவர் சம்பந்தப்படுவர். இத்தகைய இருவருக்குமிடையே நடைபெறுகின்ற தகவல் பரிமாற்றங்களே தொடர்பாடலாக கொள்ளப்படும். ஆயினும் இத் தொடர்பாடல் இக்காலத்தில் பின்னூட்டி (Feed - Back) என்பதனையும் இணைத்திருக்க வேண்டுமெனக் கருதுகின்றனர். இதன்படி பரிமாற்றப்பட்ட செய்தி சரிவர விளங்கப்பட்டிருக்கின்றதா என்பதனை மீளப்பெற்று சரிபார்த்துக் கொள்ள முடியும். இச்சந்தர்ப்பத்திலேயே மேலிருந்து கீழும், கீழிருந்து மேலுமாக இருதிசைகளில் செய்திகள் பரிமாற்றப்படுவதனை கண்டு கொள்ள முடியும். அதேபோல் கிடைத் தொடர்பாடலும் நிறுவனங்களில் காணப்படும்.

## 2.0 தொடர்பாடலின் வகைகள்

நிறுவனங்களிலே இடம் பெற்றுவரும் செய்திப் பரிமாற்றமானது உள்ளகத் தொடர்பாடல் என்ற வகையிலும் வெளித் தொடர்பாடல் என்ற வகையிலும் இடம் பெற முடியும். உள்ளகத் தொடர்பாடல் நிறுவனத்திற்கு உள்ளேயும் வெளித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்பாடல் என்பது நிறுவனத்திற்கு வெளியேயும் தகவலைப் பரிமாற்ற உதவும். இவற்றுக்கு வழியாகவே,

(i) எழுத்து மூலத் தொடர்பாடல்
(ii) வாய்மொழிமூலத்தொடர்பாடல்
(iii) சைகை மூலத் தொடர்பாடல்

எனும் மூன்று வழிகள் பாவிக்கப்படுகின்றன. எழுத்து மூலத் தொடர்பாடலும் வாய் மொழி மூலத் தொடர்பாடலும் பெருமளவில் செய்திகளைப் பரிமாற்றப் பயன்படுத்தப்படும். ஆனால் சைகை மூலத் தொடர்பாடலோ அங்கவீனர்களையும், மொழியறிவற்றவர்களையும், வேலைக்கமர்த்தியிருக்கும்போது பயன்படுத்தப்படுவதாகும். இதற்கென அங்க அசைவுகளே பயன்படுத்தப்படுவதனால் உடற்பாஷையினால் (Body Language) இடம் பெறும் தொடர்பாடலென இதனைக் கொள்வர்.

தொடர்பாடலின் செய்தியை அடிப்படையில் கொண்டு அவற்றை,

(i) முறைசார்ந்த தொடர்பாடல்
(ii) முறைசாராத தொடர்பாடல்

என இரண்டாக வகுப்பர். உத்தியோகப் பற்றுள்ள வகையில் இடம் பெறுகின்ற செய்திப் பரிமாற்றங்களை முறைசார்ந்த தொடர்பாடல் என்பர். இதற்கு உத்தியோக பூர்வமான அங்கிகாரம் இருப்பதுடன் இதனை ஏற்றுக் கொள்வது கட்டாயமாகும். முறைசாராத தொடர்பாடல் என்பது உத்தியோகப் பற்றற்ற வகையில் இடம் பெறும் தொடர்பாடலைக் குறிக்கும். இத்தகைய தொடர்பாடலுக்கு சட்டபூர்வமான அங்கிகாரம் இருப்பதில்லை என்பதனால் அதனை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற நிர்ப்பந்தம் இருப்பதில்லை. எனவே தான் முறைசாராத தொடர்பாடலில் வழங்கப்படும் தகவல் கட்டாயம் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. எனவே முறைசார்ந்த தகவல்கள் நிறுவனங்களிலே முக்கியம் பெறும்.

தற்காலத்து நிறுவனங்கள் உள்ளகத்திலே தகவல்களை பரிமாற்ற பல முறைகளைப் பயன்படுத்தி வரும். குறிப்பாக,

கூட்டங்கள்
கருத்தரங்குகள்
கலந்துரையாடல்கள்
தொலைபேசி
இன்ரர் கொம்

ஒலிபெருக்கி போன்ற வாய்மொழி மூலமான முறைகளும்,

கடிதங்கள்
சுற்றறிக்கைகள்
அறிவித்தல்கள்
குறிப்பு
ஆண்டறிக்கை
பொதுக் கூட்ட நிகழ்ச்சி நிரல்

போன்ற எழுத்து மூல வழிகளும் தொடர்பாடலுக்கென பயன்படுத்தப்படுகின்றன. இவற்றிலே பெருமளவான ஊழியர்களுக்கு ஒலிபெருக்கியும் அறிவித்தலுமே தகவல் பரிமாற்றத்திற்கு விரும்பப்படும்.

## 3.0 வெளித்தொடர்பாடல்

நிறுவனம் அதே நாட்டினுள் அல்லது வெளிநாட்டுடன் மேற்கொள்ளும் எல்லாத் தகவல் பரிமாற்றங்களும் வெளித் தொடர்பாடல் என அமைந்து விடும். இதற்கு தபால் திணைக்களமும் தொலைத் தொடர்பு திணைக்களமுமே பொறுப்பாக அமையும். இதில் தொலை தொடர்புத் திணைக்களமானது 1991ம் ஆண்டில்,

(i) சிறீலங்கா ரெலிக் கொம்
(ii) தொலை தொடர்பு இயக்குனர் நாயகத்தின் அலுவலகம்

எனும் இரு அமைப்புகளாக பிரிக்கப்பட்டு தொலைத்தொடர்பு சேவைகளுக்கு பொறுப்பாக சிறீலங்கா ரெலிக்கொம் நியமிக்கப்பட்டது. அதே நேரம் தொலை தொடர்பு சம்பந்தமான சட்ட வேலைகளுக்கு பொறுப்பாக தொலை தொடர்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயக்குனர் நாயகத்தின் அலுவலகம் இயங்கி வருகின்றது.

ஒரு நாட்டிற்குள்ளே தகவல்களைப் பரிமாற்ற பல முறைகள் பயன்படுத்தப் படுவதுடன் அவற்றில் பல வெகுஜன தொடர்பு சாதனங்களாக அமைந்திருக்கும். குறிப்பாக,

கடிதங்கள்
தபால் அட்டை
தொலைபேசி
தந்தி
வோக்கி ரோக்கி
வானொலி
திரைப்படம்
புதினப்பத்திரிகை
தொலைக்காட்சி

போன்றன முக்கியம் பெறும். இத் தொடர்பாடல் முறைகளை திறம்பட மேற்கொள்வதற்காகவே தபால் அலுவலகம், உப தபால் அலுவலகம், முகவர் தபால் நிலையம் போன்றன உருவாக்கப் பட்டுள்ளன. அத்துடன் இவற்றின் திறமையான இயக்கத்திற்காக தபால் பெட்டி இலக்கம், முத்திரையிடும் பொறி, தந்தி விலாசம், நாணயத் தொலைபேசி போன்ற பல நடைமுறைக்கும் அறிமுகத்துக்கு வந்துள்ளன. மற்றும் தொலைபேசி சேவையிலே நேரடித் தொலைபேசி முறை கணணி மயப்படுத்தப்பட்ட பரிவர்த்தனை நிலையம் என்பனவும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

வர்த்தக நடவடிக்கைகளுக்கு பெரிதும் உதவுகின்ற மேம்படுத்தல் நடவடிக்கைக்கும் சந்தைப்படுத்தல் ஆராய்ச்சிக்கும் தொடர்பாடல் அவசியமாகின்றது. விளம்பரம் எனும் மேம்படுத்தல் நடவடிக்கையினால் வாடிக்கையாளரான பொது மக்களுக்கு பல தகவல்களை வழங்கக்கூடியதாக உள்ளது. அத்துடன் ''இலத்திரனியல் தரவு செய்முறைப்படுத்தல்'' எனும் நடவடிக்கைக்கும் தொடர்பாடல் அவசியமாகின்றது. இதன்படி சந்தைப்படுத்தல் ஆராய்ச்சிக்கான பல்வேறு தரவுகளும் கணணியில் சேமிக்கப்படும். பின்னர் எத்தகைய தரவுகளையும் வேண்டிய நேரத்தில் பெறுவதற்கான தொடர்பாடல் முறையாக இலத்திரனியல் தரவு செய்முறைப்படுத்தல் காணப்படுகின்றது. இதில் முதலாம் தர தரவுகளும் இரண்டாம்தர தரவுகளும் சேமிக்கப்பட முடிவதுடன் வேண்டிய நேரத்தில் பெறக் கூடியதாகவும் இருக்கும்.

## 4.0 வெளிநாட்டுத் தொடர்பாடல்

உலக நாடுகளுக்கிடையே நடைபெறும் தகவல் பரிமாற்றங்களை வெளிநாட்டு தொடர்பாடல் என்பர். இது சர்வதேச வர்த்தகத்திற்காக இடம்பெறும் தகவல் பரிமாற்றங்களாகும். இங்கு இறக்குமதியாளருக்கும் ஏற்றுமதியாளருக்குமிடையே தகவல் பரிமாறப்படும். இலங்கையின் வெளிநாட்டுத் தொடர்பாடலுக்கு உதவுவதாக தொலைதொடர்பு திணைக்களத்தின் ''கடல் கடந்த தொலை தொடர்பு சேவை'' (O. T. S.) எனும் பகுதி பொறுப்பாக உள்ளது. இதன் பணிகளை உள்ளடக்கிய வகையில் வெளிநாட்டுத் தொடர்பாடல் பின்வரும் முறைகளை அடக்கியுள்ளது.

## 4.1 ரெலெக்ஸ் (Telex)

வெளிநாட்டுத் தொடர்பாடலில் வியாபாரிகள் பயன்படுத்தும் முக்கிய முறையாக இது கொள்ளப்படும். ஒரு இயந்திரத்தினால்செய்தி பரிமாற்றப்பட்டு இன்னொரு இயந்திரத்தினால் செய்தி ஏற்கப்படுவதுடன் செய்திகளைவானொலி அலைகள் காவிச் செல்லும். இந்த முறையில் செய்திகளைப் பரிமாற்றும் பொழுது அறவிட வேண்டிய கட்டணத்தை தீர்மானிக்க ''நிறுத்தல் கடிகாரம்'' என்பது பயன்படுத்தப்படும். ரெலெக்ஸ் செய்திப் பரிமாற்றம்,

1. சிக்கனமாக இருத்தல்
2. விரைவானதாக இருத்தல்
3. காலதாமதமற்ற பதிலைப் பெறுதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. எந்நேரத்திலும் செய்தியினை அனுப்ப முடிதல்

என்ற நன்மைகளைப் பெற்றுத் தரும். இதன் காரணமாகவே வியாபாரிகள் பெருமளவில் ரெலெக்ஸ் முறையினைப் பாவிக்கின்றனர். ஆனாலும் பொதுமக்களின் செய்திப் பரிமாற்றத்திற்கு இது பொருந்துவதாக இல்லை.

## 4.2 வைக்ஸ் (Fax)

வெளிநாட்டு செய்திப் பரிமாற்றத்தில் முக்கியம் பெற்றுவரும் முறையே இதுவாகும். இது ரெலெக்ஸ் முறை போன்றே ஒரு இயந்திரத்தால் செய்தி அனுப்பப்பட்டு இன்னொரு இயந்திரத்தால் செய்தி ஏற்கப்படுவதுடன் அச் செய்திகளை வனொலி அலைகளே எடுத்துச் செல்லும். பெரும்பாலும் ரெலெக்ஸ் ''தொலையச்சு'' என்ற அடிப்படையில் எழுத்து வடிவத்திலேயே செய்திகளைக் கொண்டு செல்லும். ஆனால் வைக்ஸ் முறையிலோ விரும்பிய வடிவங்களில் செய்திகளைக் கொண்டு செல்ல முடியும். பெரும்பாலும் ஆவணங்கள், வரைவுகள், படங்கள் ஆகியவற்றை வெளிநாடுகளுக்கு அனுப்பிவைக்க வைக்ஸ் பயன்படுத்தப்படும். வைக்ஸ் முறையைப் பயன்படுத்துவதனால்,

1. ஆவணங்களின் பிரதிகளை வெளிநாடுகளில் பெற முடிதல்
2. விரைவான செய்திகளை வழங்குதல்
3. விரும்பிய மொழிகளில் கிடைக்கச் செய்தல்

போன்ற நன்மைகளைப் பெறலாம். ரெலெக்ஸ் முறைபோல் வைக்ஸ் பல ஒற்றுமைகளைக் கொண்டிருந்தாலும் விரும்பிய வடிவத்தில் செய்தியைப் பெறலாம் என்பதும் கூடிய செலவை ஏற்படுத்தும் என்பதும் வேறுபாடாகும்.

## 4.3 கடல் வழித் தந்தி (Cable)

வெளிநாட்டுத் தொடர்பாடலில் முன்னர் முக்கியம் பெற்றிருந்த முறையே இதுவாகும். இங்கு கடலுக்கு அடியில் அமைக்கப்பட்ட கம்பிகள் ஊடாக செய்தி நகர்த்தப்படும். இதனால் இங்கு செய்திப் பரிமாற்றம் காலதாமதமாக இருப்பதுடன் செய்திக்கான கட்டணமும் அதிகமாக இருக்கும். இத்தகைய குறைபாடுகளால் கடல்வழி தந்தி முறை இப்பொழுது பெரிதும் பின்பற்றப்படுவதில்லை.

## 4.4 பல்கூரியர் சேவை (Courier Service)

வெளிநாட்டுக்கு கடிதங்கள், பொதிகள் என்பவற்றை விரைவாக நகர்த்தி செல்லும் முறையே இதுவாகும். விமான தபால்களை விரைவாகக் காவிச் செல்ல கூரியர் சேவை பாவிக்கப்படும். இந்த சேவை முறையுடன் சர்வதேச விமானப் போக்குவரத்து தொடர்புபட்டுள்ளது. இதன் காரணமாக வெளிநாட்டு கடிதங்களும், பொதிகளும் பாதுகாப்பாகவும் விரைவாகவும் எடுத்துச் செல்லப்படுகின்றன. இதனை ''D. H. L. சேவை'' என்பது குறிப்பதாக அமைந்துள்ளது. வெளிநாட்டிற்கான ஆவணங்கள், பொதிகள், கடிதங்கள் என்பன ஓரிரு தினங்களுக்குள் எடுத்துச் சென்று ஒப்படைக்கப்படுவதற்கு கூரியர் சேவை வழிவகுத்துள்ளது.

## 4.5 செய்மதி (Satelite)

தொழில் நுட்பம் சார்ந்த வகையில் இடம்பெறும் ஒரு வெளிநாட்டுத் தொடர்பாடல் முறையே இதுவாகும். இத்தொடர்பாடலுக்காகவே நிலையான செய்மதிகளும் உபகோள்களும் பாவிக்கப்படுகின்றன. இலங்கையின் செய்மதி நிலையமும் ''பாதுக்க'' எனும் இடத்தில் அமைந்துள்ளது. இத்தகைய செய்மதியின் முனையிலிருந்து வான் வெளியிலுள்ள உபகோளுக்கு செய்திகள் பரிமாற்றப்படுவதன் மூலமாக விரும்பிய நாடுகள் செய்தியைப் பெற்றுக் கொள்கின்றன. இத்தகைய செய்திப் பரிமாற்றத்தில் செய்திகளையும் விபரணப் படங்களையும் பெறும் சாத்தியம் இருப்பதனால் அவற்றைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரட்டுவதற்காகவே ''ஆசிய விஷன்'' (A. V. N.) எனும் அமைப்பு உருவாக்கப் பட்டுள்ளது.

## 4.6 தொலை பேசி (Telephone)

பொது மக்களால் பெருமளவில் பயன் படுத்தப்படும் தொடர்பாடல் முறை இது வாகும். இந்த முறையிலே செய்தியை அனுப்பவும் ஏற்கவும் இயந்திரம் தேவை யில்லை என்பதனால் பொதுமக்களில் பெருமளவில் பாவிக்கப்படும் தொடர் பாடல் முறையாக தொலைபேசி காணப் படுகிறது. இந்த முறையிலே கூடிய கட்ட ணம் அறவிடப்பட்ட போதும் நேருக்கு நேராக செய்தியைப் பரிமாற்றலாம் என் பதனால் பல பொது மக்கள் இந்த முறை யைப் பயன்படுத்த முன்வந்துள்ளனர். மேலும் பல நாடுகளுக்கிடையே நேரடித் தொலைபேசி சேவை நடைமுறைக்கு வந்திருப்பதாலும் இப்சோ (IPSO) தொலைபேசி, தொலைக்காட்சித் தொலை பேசி என்பன அறிமுகத்திற்கு வந்திருப்ப தனாலும் பெருமளவு பொது மக்கள் தொலைபேசியை விரும்பி வருகின்றனர்.

## 5.0 தொடர்பாடல் சேவையின் அபி விருத்திக்கு அரசினால் எடுக்கப் பட்ட நடவடிக்கைகள்.

இலங்கையின் தொடர்பாடல் சேவை யினை விருத்தி செய்வதற்காக அரசினால் எடுக்கப்பட்ட முக்கிய நடவடிக்கையாக ''சிறீலங்கா ரெலிக்கொம்'' எனும் கூட்டுத் தாபனமாக தொலைத் தொடர்பு திணைக் களமானது மாற்றப்பட்டுள்ளது. இக் கூட்டுதாபனத்தால் பின்வரும் பணிகள் ஆற்றப்படும்.

1. 1995ம் ஆண்டுக்குள் இலங்கை முழு வதற்கும் தொலைபேசி சேவை யினை வழங்குதல்.
2. நடமாடும் தொலைதொடர்பு சேவைகளை அறிமுகப்படுத்தல்.
3. வழங்கப்படும் தொலைதொடர்பு சேவைகளின் தரத்தை உயர்த்துதல்
4. நெருக்கடியற்ற நேரங்களில் குறைந்த கட்டணத்தை அறவிட வசதியாக கட்டணங்களை சீர மைப்புச் செய்தல்.
5. தொழிலாளர் பயிற்சி திட்டங்கள் ஊடாக வாடிக்கையாளர் நல் லுறவை வளர்த்தல்.
6. பரிவர்த்தனை நிலையத்தை கணணி மயப்படுத்தல்.

என்ற வகையிலே பணியாற்றுவதற் காக உலகவங்கி, சர்வதேச தொலைத் தொடர்பு சங்கம், யூ. என். டி. பி. ஆகிய அமைப்புகளுடன் சிறீலங்கா ரெலிக் கொம் கூட்டுச் சேர்ந்துள்ளது.

தொடர்பாடல் சேவைக்கென அரசு உருவாக்கியிருக்கும் இரண்டாவது நிறுவன மான ''தொலை தொடர்பு இயக்குனர் நாயகத்தின் அலுவலகம்'' காணப்படு கின்றது. இந்த அமைப்பினால்

1. தொலைத் தொடர்புசேவை இயக்கு வோருக்கு அனுமதி வழங்கல்.
2. தொலைத் தொடர்பு சாதனங் களை பயன்படுத்துவோருக்கு அனுமதி வழங்கல்.
3. துறைமுகங்களும் விமான நிலையங் களும் அமைக்கப்பட அனுமதி வழங் குதல்.
4. வானொலி இயக்குவோருக்கு அனு மதி பத்திரம் வழங்கல்.
5. தொலை தொடர்பு சேவை வழங் கும் நிறுவனங்களுக்கும் பாவனை யாளருக்கு மிடையேயான பிணக்கு களைத் தீர்த்து வைத்தல்.

என்ற வகையிலே சட்டத்துடன் தொடர்புடைய பணிகளை இது மேற் கொண்டு வருகின்றது.

அரசின் தொலைக்காட்சி அமைப்புக் கள் மட்டுமன்றி தனியார் தொலைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்சி சேவைகள் ஆரம்பிக்கப்படுவதற்கும் அரசு அனுமதித்துள்ளது. இதன்படி,

1. சண்பவர் சிஸ்ரம்ஸ் நிறுவனமும் சிங்கப்பூர் சர்வதேச தொலைத் தொடர்பு நிறுவனமும் இணைந்து தொலைக்காட்சி சேவை வழங்குதல்

2. மகாராஜா நிறுவனமும் சிங்கப்பூர் சர்வதேச தொலைத்தொடர்பு நிறுவனமும் இணைந்து தொலைக் காட்சி சேவை வழங்குதல்.

என்ற வகையிலே இரண்டு தனியார் தொலைக்காட்சி சேவைகள் அறிமுகத்திற்கு வந்துள்ளன.

## 6.0 முடிவுரை

தற்காலத்திலே தொடர்பாடல் நடவடிக்கையானது வர்த்தகத்தின் ஒவ்வொரு நடவடிக்கையிலும் தொடர்புபடுகின்றது. உள்நாட்டு வியாபார நடவடிக்கையிலும் வெளிநாட்டு வியாபார நடவடிக்கையிலும் இத்தொடர்பாடல் ஈடுபாடு கொண்டுள்ளது. எனவே தான் வர்த்தகத்தின் பொது அபிவிருத்திக்கு உதவும் துணைச் சேவையாக தொடர்பாடல் கொள்ளப்பட்டு அரசாங்கம் பல வழிகளிலும் அதன் வளர்ச்சிக்காக நடவடிக்கையெடுத்து வருவதனைக் காண முடிகின்றது.


திருமணம், பிறந்தநாள், மற்றும் ஏதேனும் சுப காரியங்களுக்கு வருகைதரும் உங்கள் விருந்தினர்களை அன்புடன் உணவளித்து உபசரிக்க அன்னபூரனாவிடம் ஒப்படையுங்கள்.

Hotel Annapooranaa

Vegetarian Foods Suppliers of Wedding & Parties

ஹோட்டல் அன்னபூரனா

159 A, செட்டியார் தெரு, கொழும்பு – 11.

159A, Sea Street, Colombo – 11.

Phone : 330621




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.........

# இலங்கையின் உலக வர்த்தக நிலையம்

## SRI LANKA'S WORLD TRADE CENTRE

எம். குணநிதி
ஆண்டு 13
வர்த்தகப் பிரிவு.

**உலக வர்த்தக நிலையம் பற்றிய எண்ணக்கரு**

சர்வதேச வர்த்தகத்தினை வளர்க்கும் நோக்குடன் உருவாக்கப்பட்ட ஒரு அமைப்பே உலக வர்த்தக நிலையமாகும். சர்வதேச வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள பொதுத்துறை, தனியார்துறை நிறுவனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு அமைப்பாக உலக வர்த்தக நிலையம் காணப்படும். இந்த அமைப்பானது ஏற்றுமதி தகவல்கள், இறக்குமதி மூலகங்கள், வர்த்தக முன்னணி சந்தை வாய்ப்புக்கள், ஏற்றுமதிக்கான கல்விப்பயிற்சி திட்டங்கள் போன்ற மேலதிக சேவைகளை வழங்குவதற்காக உருவாக்கப்பட்டதாகும். எனவேதான் உலக வர்த்தக நிலையத்தை ஒரு சேவை நோக்குடைய நிறுவனம் என்பர். இதன் நோக்கம் எல்லாம் சர்வதேச வர்த்தக நடவடிக்கையினைத் தூண்டுவதும் கடல் கடந்த கொடுக்கல் வாங்கலை செய்வதற்கு வசதிகளை வழங்குவதும் நாட்டின் சர்வதேச வர்த்தகத்தினை விருத்தி செய்வதற்காக அரசாங்க முகவர்களினதும் தனியார் சேவை நிறுவனங்களினதும் வர்த்தக நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதுமே ஆகும்.

ஒவ்வொரு உலக வர்த்தக நிலையமும் தத்தமது நாட்டின் தனித்துவமான தேவைகளை பூர்த்தி செய்கின்றமையால் அவற்றிற்கிடையே பாரிய வேறுபாடு காணப்படுகின்றது. ஒருசில கல்வி நோக்கம் கொண்டவையாக உள்ளன. ஒருசில வர்த்தக தொடர்பு முறைகளில் கவனம் செலுத்துகின்றன. ஒருசில அரசாங்க உத்தரவாதத்தின் கீழ் இயங்குகின்றன. ஒருசில முற்றிலுமே தனியார்துறையால் நிர்வகிக்கப்படுகின்றன.

**இலங்கையில் உள்ள உலக வர்த்தக நிலையத்தின் குறிக்கோள்களும் திட்டங்களும்**

இலங்கையில் அமைக்கப்படுகின்ற உலக வர்த்தக நிலையமானது ஒரு திடமான அக கட்டமைப்பிற்கு வழிவகுப்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டன் பின்வருவனவற்றை வழங்கக்கூடிய தாகவும் காணப்படுகின்றது.

1. வெளிநாடுகளிற்கும், வெளிநாடுகளி லிருந்தும் வருகின்ற வர்த்தக பிரதி நிதிகள், இலங்கையின் வர்த்தகர்கள், உற்பத்தியாளர்கள் ஆகியோரிற்கு நேரடியான வியாபார தொடர்பு வசதி களை வழங்குதல்.

2. இலங்கையின் கைத்தொழில் வளர்ச் சிக்கு அவசியமான சர்வதேச வர்த்த கத்தினை விருத்தி செய்வதற்காக சர்வதேச அரச, வர்த்தக பிரதிநிதி களை கொண்ட வர்த்தக மகாநாடு களை நடாத்துதல்.

3. பட்டப்பின் முகாமை கற்கை நிறு வனம் (PIM), ஏற்றுமதி அபிவிருத்தி சபை (EDB), தேசிய வணிக முகா மைத்துவ நிறுவகம், இலங்கை அபி விருத்தி நிர்வாக நிறுவகம், ஏனைய முகவர்கள் ஆகியவற்றின் ஒத்துழைப் புடன் மேற்கொள்ளப்படும் சர்வதேச வர்த்தக கல்வி திட்டமானது உலக சந்தையில் இலங்கை உற்பத்தியாளர் கள் வெற்றியுடன் போட்டியிடுவதற்கு வேண்டிய புலமை, திறன் ஆகியவற் றினை வழங்கும்.

4. இலங்கையின் தொழில் முயற்சியாளர் களிற்கு வேண்டியதான வர்த்தக சந்தை வாய்ப்புக்களை இனங்காண் பதற்கும், கடல்கடந்த கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வதற்கும் சர்வதேச வர்த்தக தொடர்புகளை யும், செய்தி தகவல்களையும் பரிமாற் றிக் கொள்ள ஒரு அமைப்பு இருத்தல் (தொடர்பாடல் சேவைகளை வழங் குதல்).

5. இலங்கை நிறுவனங்கள் தங்கள் சர்வ தேச வர்த்தக நடவடிக்கையினை திட்டமிடுவதற்கு தேவையான உலக வர்த்தக தகவல்கள், எதிர் வர்த்தக நடவடிக்கைகளின் அண்மைக்கால முன்னேற்றங்கள் போன்றவற்றினை அறிந்துகொள்ள (வர்த்தக பிரசுரங் கள், சஞ்சிகைகள், பட்டியல்கள், கணணி மயப்படுத்தப்பட்ட ஒரு தரவு வங்கி நிலையம் இருத்தல்.

6. புதிய ஏற்றுமதியாளர்களுக்கு வெளி நாட்டு சந்தை வாய்ப்புகள் பற்றி விபரிப்பதற்கு வேண்டிய விரிவான வெளியீட்டுத் திட்டம் இருத்தல் (வர்த்தக சஞ்சிகைகள், பிரசுரங்கள்) இலங்கையின் உற்பத்திகள், சேவை கள் என்பனவற்றை விருத்தி செய்வ தற்கு வெளிநாடுகளில் உள்ள உலக வர்த்தக நிலையங்களினூடாக உலகம் பூராவும் பல்வேறு மொழிகளில் வர்த் தக பிரசுரங்கள் விநியோகிக்கப்படு தல்.

7. இலங்கையின் சுதந்திர வர்த்தக வல யங்களில் உள்ள வசதிகள் அனுகூலங் கள் என்பனவற்றை பிரதிபலிக்ககூடிய தாலும், வெளிநாட்டு கைத்தொழில் உற்பத்தி முதலீட்டினை ஊக்குவிக்க கூடியதாலும் சந்தைப்படுத்தும் திட்ட மிருத்தல்.

8. சர்வதேச வர்த்தகத்தின் பரவலான அபிவிருத்தியை பெற்றுக்கொள்ளும் நோக்குடன் உலக வர்த்தக கவுன்சிலு டன் நெருங்கிய உறவை வைத்திருத் தல்.

**ஒரு உலக வர்த்தக நிலையத்திற்கான தேவை**

சந்தைகள் உற்பத்தி, நிதி முறைகள் ஆகியன உலக மயமாக்கப்பட்ட ஒரு சர்வ தேச பொருளாதாரத்தில் நாம் வாழ்கின் றோம். இலங்கையின் வாழ்க்கைத்தரத்தை விருத்தி செய்யவும், வேலை வாய்ப்பு, வருமானம் என்பவற்றை உயர்த்துவதற் கும், தேர்ச்சி பெற்ற தொழில்களுக்கும் முழு அளவிலான பொருளாதார அபி விருத்திக்கும், ஒரு முன்னேற்பாடாக விளங்குகின்ற சர்வதேச வர்த்தக தொழிற் பாடு அடிப்படையாகவுள்ளது. கடந்த தசாப்தத்தில் சர்வதேச வர்த்தகமானது மிகவும் துரிதமாக வளர்ச்சியடைந்து வரு கிறது. சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்களும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்த்தக தாராளமாக்கல் முறைகளும் மூன்றாம் உலக வர்த்தக செயற்பாடுகளை அதிகரிக்க செய்துள்ளன. போட்டியின் அனுகூலத்தை பெற்று கொள்ளவும், ஏற்றுமதி, திறமை, உற்பத்தியின் தரம் ஆகியன வற்றை விருத்திசெய்யவும், பின்வருவன வற்றிற்காகவும் இது இன்றியமையாத ஒன்றாகும்.

i. உற்பத்திக் கைத்தொழிலின் ஏற்றுமதி விரிவாக்கத்திற்கு வேண்டிய ஊழிய உள்ளீட்டினை பெறுவதற்கு இளமை யான கல்வி கற்ற இலகுவில் பயிற்று விக்கக்கூடிய ஒரு வகுப்பினர் இலங்கை யில் உள்ளனர்.

ii. ஒரு நீண்டகால வர்த்தக முயற்சி களை கட்டி எழுப்ப கூடியவாறு முயற்சியுள்ள சிறு உற்பத்தியாளர் களும், சிறு தயாரிப்பாளர்களும் சிறு நகர வியாபாரியும் தங்களின் உற் பத்தி திறன் ஏற்றுமதி தரம் சந்தை கள் என்பவற்றை அதிகரிப்பதற்கு வேண்டிய ஊக்குவிப்பினை ஜனசக்தி திட்டங்கள் போன்றன அரசின் தற் போதைய கொள்கைத் திட்டங்கள் வழங்குகின்றன.

iii ஏற்றுமதி நோக்குடைய உற்பத்தி துறை, விவசாய வர்த்தக துறை ஆகியவற்றின் ஒன்றிய வளர்ச்சியினால் சர்வதேச வர்த்தக துணைச்சேவைகள் துறையிலொரு கணிசமான அதி கரிப்பை இலங்கை பெறக்கூடியதாக இருக்கும்.

(உதாரணம்:- வங்கித்தொழில், காப் புறுதி, பொதி அனுப்புதல், போக்கு வரத்து ஆகியவற்றில் வேலை வாய்ப்பு களும் ஏனைய இறங்குதுறை வர்த்தக விரிவாக்கத்திலும் ஈடுபட கூடியதாக இருக்கும்.)

iv. அந்நிய செலாவணியை உழைப்பதற்கு விவசாயத்தில் தங்கியிருக்கும் ஓர் சர்வ தேச மயமாக்கப்பட்ட பொருளா தாரம் இலங்கையில் உள்ளது. சுய பூர்த்தியினை அடைவதற்கு விவசாய கைத்தொழில் ஒரு முக்கிய காரணி யாகும். நுகர்விற்கான உணவுப் பொருட்களின் இறக்குமதியை குறைப் பது முக்கியமான அனுகூலமாகும். சனசக்தி போன்ற திட்டங்கள் மூல மாக விவசாய வர்த்தக துறையானது நுகர்வுத் தேவைகளை பூர்த்தியாக்கக் கூடிய வகையிலும் ஏற்றுமதி மிகை யினை உருவாக்க கூடிய வகையிலும் விருத்தி செய்யப்படலாம்.

v. இலங்கையின் ஏற்றுமதி கட்டமைப்பு அண்மையில் மாற்றமடைந்துள்ளது. கடந்த தசாப்தத்தில் பாரம்பரியமற்ற பொருட்களின் ஏற்றுமதிகள் வருடாந் தம் அண்ணளவாக 7% அளவில் வளர்ச்சியடைந்துள்ளது. தற்போது இது இலங்கையில் ஏற்றுமதிகளில் பெரிய பங்கினை வகிக்கிறது.

vi. அந்நிய செலாவணியை மீதப்படுத்தக் கூடிய வகையில் செலவு குறைந்த மூலப்பொருட்களையும் தரமான இடைத்தரப் பொருட்களையும் கண்டு கொள்வதற்கு இறக்குமதி வள உபா யங்களும் நிபுணத்துவமும் அவசிய மானதாகும்.

vii. கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழுவின் பங்களிப்பு சுதந்திர வர்த்தக வலயங்களின் ஏற்றுமதி நட வடிக்கை ஆகியவற்றோடு இணைந்த சுற்றுலா கைத்தொழிலின் 25வது வருட நிறைவு ஜனாதிபதி அவர் களால் பிரகடனம் செய்யப்பட்ட ''ஏற்றுமதி ஆண்டு 1992'' ஆகியவை இலங்கையின் சர்வதேச மயப்படுத்த லுக்கான வாய்ப்புகளாகவுள்ளன.

viii. ஏற்றுமதி விரிவாக்கமானது இலங்கை யின் பொருளாதார அபிவிருத்திக் கான அரசாங்கத்தின் கைத்தொழில் மயமாக்கல் உபாயத்திலும் ஏற்றுமதி நோக்கிய வளர்ச்சியிலும் முக்கியமாக தங்கியிருப்பதால் வர்த்தக நாடுகளின் அமைப்பு சேர்த்துக் கொள்வதற்கும் உலக வர்த்தக நிலையம் இன்றியமை யாத ஒன்றாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சர்வதேச வர்த்தகத்திற்கும் ஏற்றுமதியாளர்களுக்கும் இலங்கையிலுள்ள உலக வர்த்தக நிலையத்தினால் வழங்கப்படும் சேவைகள்**

ஏற்றுமதி சந்தைப்படுத்தலின் இறக்குமதி (மூலப்பொருட்கள், இடைத்தரப் பொருட்கள்)வளச் சேவைகளுமே இலாபகரமான சர்வதேச வர்த்தகத்திற்கான மூலாதாரமாகும். ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகத்தினை இலகுபடுத்துவதற்கான முழு அளவிலான சேவைகளை உலக வர்த்தக நிலையம் வழங்குகின்றது.

i. குறிக்கப்பட்ட உற்பத்திப் பொருட்களான சர்வதேச சந்தைப்படுத்தல் திட்டத்தினை விருத்தி செய்தல்.

ii. விற்பனையாளர்கள், கொள்வனவாளர்கள், முகவர்கள், விநியோகத்தர்கள் ஆகியோரை இனங் காணல்.

iii. தீர்வைகளையும் இறக்குமதி/ஏற்றுமதி கட்டுப்பாடுகள்/உத்தரவு பத்திரங்கள் என்பவையை இனங்காணுதல்.

iv. ஏற்றுமதியாளர்களுக்கும் அவர்களது வெளிநாட்டு பிரதிநிதிகளுக்கும் இடையில் பேச்சுவார்த்தை வசதிகளை ஒழுங்குசெய்தல்.

v. உற்பத்திப் பொருளை சமர்ப்பிப்பதில் உதவுதல் (தரம், வடிவம், பொதிகள்).

கொள்வனவுக் கட்டளை / ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்ட பின்பு உற்பத்திப் பொருட்களை கப்பலில் இட்டு பாதுகாப்பாக உரிய நேரத்தில் போக்குவரத்து செய்ய வேண்டியது சர்வதேச வர்த்தகத்தின் வெற்றிக்கான ஒரு தொடர்ச்சியின் ஒரு தேவையாக உள்ளது. உலக வர்த்தக நிலையம் பின்வரும் சேவைகளை வழங்கி இந்த நடைமுறையைத் துரிதப்படுத்துகின்றது.

i. பொதி அனுப்புபவர்களையும் சுங்க தரகர்களையும் இனம் காணுதல்.

ii. திறமையானதும் செலவு குறைந்ததுமான கப்பல் போக்குவரத்து வசதிகளைப் பெற்றுக்கொள்ளல்.

iii. பொருத்தமான கொடுப்பனவு நியதிகளையும் கொடுப்பனவு முறைகளையும் ஒழுங்குபடுத்தல்.

iv. பொருத்தமான சடற்பொதி காப்புறுதியினைப் பெற்றுக்கொள்ளல்.

v. சரியான பொதி அடைத்தலையும் பட்டியல் இடுவதையும் மேற்கொள்ளல்.

வர்த்தக கண்காட்சிகளை ஏற்றுமதியாளர்களும் இறக்குமதியாளர்களும் நன்கு அறிந்தவர்களாவர், இதனால் ஒரே விடயத்தினைக் கொண்ட கொள்வனவாளர்களையும் விற்பனையாளர்களையும் அமைத்து இரண்டு நாட்களில் இருந்து இரண்டு வாரங்கள் வரை நீடிக்கின்ற வர்த்தக கண்காட்சிகளில் பங்குபற்றும் வாய்ப்பு அளிக்கப்படுகின்றது. தமது உற்பத்திப் பொருட்களை விருப்பமுள்ள விருந்தினருக்கு காண்பிக்கவும், போட்டியில் என்ன நடக்கின்றது என்பதை அறிந்து கொள்ளவும் இவ்வர்த்தக கண்காட்சிகள் நல்ல சந்தர்ப்பமாக அமைகின்றது. தனது நடவடிக்கையாளரின் நன்மை கருதி உலக வர்த்தக நிலையமானது இவ்வர்த்தக கண்காட்சிகளின் பெறுமதியினை பல்வேறு வழிகளில் ஊக்கப்படுத்துகிறது.

1. வர்த்தக கண்காட்சிகளில் பங்குபற்றும் வர்த்தக முயற்சியாளர்களுக்கு மானியங்களை வழங்கும் வகையில் அரசுடன் ஒத்துழைத்தல்.

2. ஏற்றுமதியாளர்களுக்கு இலாபகரமான நல்ல ஏற்றுமதி வாய்ப்புக்களை தரும் வர்த்தக பிரதிநிதிகளையும் வர்த்தக கண்காட்சிகளையும் இனங்காணுதல்.

3. தெரிந்தெடுக்கப்பட்ட சர்வதேச வர்த்தக கண்காட்சிகளில் ஏற்றுமதியாளர்கள் தமது உற்பத்தி பொருட்களை பிரதிநிதித்துவம் செய்து காட்சிப்படுத்த கூடியவாறு அவர்களுக்கு கல்வி ஊட்டுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. கலாச்சாரம் பற்றியதும் வியாபார நடைமுறைகள் பற்றியதுமான தரவுகளை வாடிக்கையாளர்களுக்கு வழங்குதல்.

5. வர்த்தக கண்காட்சிகளில் தெரிந்தெடுக்கப்பட்ட ஏற்றுமதியாளர்களை பிரதிநிதித்துவம் செய்தல்.

சர்வதேச வர்த்தக கொடுக்கல் வாங்கல்களின் வெற்றிக்கு சட்டம், வரி, நிதி ஆகிய விடயங்களை பொருத்தமாக கையாள வேண்டியது அவசியமாகின்றது. உள்ளூர் சந்தைகளில் நிர்வகிப்பதைவிட வர்த்தக நிலையமானது ஒரு சட்ட வரி நிதி ஆலோசகர் அல்ல. ஆனால் அது அனுகூலமான சட்ட வரி நிதி ஒழுங்குகளை கண்டுகொள்வது வாடிக்கையாளர்களுக்கு உதவி புரியலாம்.

1. ஏற்றுமதியாளர்கள் ஏற்றுக்கொள்ளக் கூடிய கூட்டு முயற்சி வாய்ப்புக்களை தேடுதல்,

2. வெளிநாட்டு மூலதன வாய்ப்புக்களை விருத்தி செய்தல்.

3. இறக்குமதிக்காக நிதி உதவி வழங்கும் தாபனங்களுக்கு ஏற்றுமதியாளர்களை சிபார்சுபடுத்தல்.

4. வர்த்தக சின்னத்தையும் உரிமை பாதுகாப்பினையும் பெற்றுக்கொள்வதற்காக ஏற்றுமதியாளர்களை நெறிப்படுத்தல்.

5. சங்கம் தொடர்பான விளக்கங்களைத் தெளிவுபடுத்தல்.

வெளிநாடுகளில் இருக்கும்போது தற்காலிக அலுவலக இடத்தினையும் இதர துணைச்சேவைகளையும் ஒன்றிணைத்தல். எல்லாச் சேவைகளும் பரஸ்பரத் தன்மை கொண்டவை. ஒரு அங்கத்தவர் உலக வர்த்தக நிலையத்திலுள்ள வசதிகளின் அனுகூலங்களை உலகம் யாவும் பெறலாம்.

1. வாடிக்கையாளர்கள் கடவுச் சீட்டுகளையும். விசாகளையும் பெறுவதற்கான ஆலோசனை வழங்குதல்.

2. சர்வதேச தொடர்பு முறைகளை ஏற்படுத்திக் கொடுத்தல் (வைக்ஸ், தொலைபேசி).

3. நடவடிக்கையாளர்களுக்கு மொழி பெயர்ப்புச் சேவைகளை ஒழுங்கு பண்ணுதல்.

4. பொருத்தமான வாகன விளம்பரங்களையும் செய்திகளையும் சிபார்சு செய்தல்.

**ஆசியாவிலுள்ள பிரதான உலக வர்த்தக நிலையங்களின் அமைவிடங்கள் சில :**

1. ஷாங்கை
2. சிங்கப்பூர்
3. டோக்கியோ
4. பெய்ஜீங்
5. ஹொங்கொங்
6. நன்ஜிங்
7. பம்பாய்
8. கோலாலம்பூர்
9. புதுடில்லி
10. தாய்பே
11. பாங்கொக்
12. சியோங்

கலாச்சாரங்களுக்கிடையிலான தொடர்பு முறைகளை ஏற்படுத்தி தற்போது இயங்கி வருகின்ற வியாபார நடவடிக்கைகளின் கொடுக்கல் வாங்கல்களை செய்வதற்கு மிகவும் திறமையுள்ள முறைகளும் உபாயங்களும் சர்வதேச வர்த்தகத்திற்கு அவசியமாக உள்ளது. உலக வர்த்தக நிலையமானது பல வகைப்பட்ட தொடர்பு சாதனங்களையும் உலகினை பின்னடையச் செய்யும் வெளிநாட்டு வர்த்தக நடைமுறைகள் பற்றிய அறிவினையும் தனது ஏற்றுமதியாளர்களுக்கு வழங்குகின்றது. சர்வதேச வர்த்தகத்தினையும் சந்தைப்படுத்தலையும் வெற்றிகரமாக நடாத்துவதற்கு வேண்டிய உபாயங்களுக்கு உதவுகின்ற சேவைகளை இவ் உலக வர்த்தக நிலையமானது வழங்குகின்றது.

மூலம் : பொருளியல் நோக்கு
(91 டிசம்பர்/நவம்பர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments
From

# A. A. Samarasinghe

I. C. O. LONDON
**OPTOMETRIST and CONTACT LENS SPECIALIST**
Queen's Hotel and National Housing Building

**Yatinuwara Vidiya,**
**Kandy.**
**Sri Lanka.**

Tel : Office :- 08 - 23745 KANDY Resi :- 08 - 25279 SRI LANKA

**Branches**

Main Street, Kegalle

Windsor Hotel Nuwara Eliya.

71, Olcott Mawatha, Colombo - 11.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டுறவு வங்கிச் செயற்பாடுகளும் தற்காலப் போக்குகளும்

**S. Sugirthan**
ஆண்டு 13
வர்த்தகப் பிரிவு.

அறிமுகம்

மரபு ரீதியான வணிக வங்கி முறையை விடுத்து கிராமிய மக்கட்கு இலகுபடுத்தப்பட்ட முறையொன்றினூடாக வணிக வங்கிசேவையினை அளிப்பதற்காக முன் வைக்கப்பட்ட திட்டமொன்றாக இலங்கைக் கூட்டுறவுக் கிராமிய வங்கி முறையினை அழைக்கலாம். 1961 ல் மக்கள் வங்கி நிறுவப்பட்ட போது கிராமிய வங்கி முறைச் செயற்பாரம் அதன் யாப்பினகத் தேற்பார செய்யப்பட்ட சட்டரீதியான கடப்பாடாகவிருந்தது. இத்தகையகிராமிய வங்கிகள் மக்கள் வங்கியின் வலைப் பின்னல் செயலாக்கத்தில் இடம் பெறுதலில் எதிர்கொள்ளப்பட்ட பிரச்சனைகளின் விளைவாக கிராமிய மட்டத்தில் இச் செயற்பாட்டினை முன்னெடுத்துச் செல்ல ப. நோ. கூ. சங்கங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன.

நோக்கம்

மக்கள் வங்கியால் 1964 ல் இந் நாட்டில் தொடக்கப்பட்ட கிராமிய வங்கி இயக்கம் கிராமிய பொருளாதார விருத்திக்காக மேற்கொள்ளப்பட்ட முக்கியபடியொன்றாகும். கிராமிய வங்கித் தோற்றத்தின் முன்னோடிகள் இவ்வியக்கத்தின் முதன்மையான பின்வரும் 3 நோக்கங்களை இனங்காட்டினர்.

1. நகர்ப்புற வசதி பெற்ற குழுவினருக்கு மட்டும் வரையறுக்கப் பட்டிருந்த வங்கிச் சேவையினை கிராமிய மக்களுக்கும் விசாலித்தல்.

2. கிராமப் பிரதேச சேமிப்பினை நிறுவனரீதியில் திரட்டுதல்.

3. கிராமிய மக்களின் நிதித் தேவைகளை பூரணமுற்ற வழியொன்றினூடாக நிறைவு செய்தல்.

இந் நோக்கங்களை எய்த இலகுவான முறையொன்றினைப் ப. நோ. கூ. சங்கங்களினூடாகச் செயற்படுத்துவதென்பதேமக்கள் வங்கியின்கருத்தாகவிருந்தது. ப. நோ. கூ. சங்கத்தின் கட்டமைப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களுடன் நெருங்கிய நிறுவனமொன்றாக விருந்தமை, கிராமியமட்டத்திலே நிதிதேவை, தொழில்நுட்பம், வளங்களை இனங்காணும் வாய்ப்பு கடன் கோரிக்கைகள் மீது விரைவாகச்செயற்படக்கூடிய ஆற்றல், கிராமியமட்டத்தில் தனிப்பட்ட முறையிலான அறிமுகம் பெற்றிருந்தமை ஆகிய சிறப்பான காரணிகள் தனியொரு கிளையொன்றினை நிறுவல்விட ப. நோ. கூ. சங்க அமைப்பினுள் கிராமிய வங்கிச் செயற்பாடுகளையாற்றுதல் கூடிய வசதியானதாகக் கொள்ளப்பட்டது.

கிராமிய வங்கி ஆரம்பிக்கப்பட்ட வேளையில் சேமிப்பு பெறல், அங்கத்தவர்களுக்கு கடன்வழங்கல், அடகு கொள்ளல் ஆகிய முக்கிய வங்கிச் சேவைகளே மேற்கொள்ளப்பட்டன. கிராமிய வங்கிப் பிரிவின் வளங்களை விருத்தியாக்கல், முகாமை யாற்றலை மேலோங்கச் செய்தல் மூலம் சங்கத்தின் ஏனையதுறைகளுடன் இணைந்து அபிவிருத்திப் பாதையில் செயற்பட்டுச் செல்லும் என நம்பப்பட்டது. மிகுந்த சிரத்தையுடனேயே பொருத்தமான சங்கம் வங்கி தொடங்குவதற்காகத் தெரியப்பட்டது. கிராமிய வங்கி சுயாதீனமான நிறுவன மொன்றாக விருந்தலால் இலாப நட்டத்திற்கு பொறுப்பேற்கவல்ல அவதானம் வேண்டப்பட்டதுடன், வேறான கணக்கிடுதலும் புரியப்பட வேண்டியிருந்தது ஒற்றுமையினால் கிராமிய மக்களின் பொருளியல் நலன்புரிதற்கு அவசியமான நிதிப்பலத்தை வழங்குவதன் மூலமாக கிராமிய வங்கி கிராமப் பொருளாதாரத்தை விருத்திசெய்யுமென எதிர்பார்க்கப்பட்டது. இந் நோக்கங்களை எய்தற்காக கிராமிய வங்கி பின்வரும் முக்கிய செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது.

1. கிராமிய சேமிப்பைத் திரட்டற்காக அங்கத்துவ, அங்கத்துவரில்லாதோரின்வைப்புகளை ஏற்றல்:
2. அங்கத்தவரின் அனைத்துக் கடன் தேவைகளையும் பூர்த்தி செய்யத் தக்கதான அங்கத்தவரின் அனைத்துக் கடன் திட்டத்தினை நடைமுறைப்படுத்தல்.
3. உற்பத்திகளைச் சந்தைப்படுத்துவதனுடன் கடன் செயற்பாட்டினை ஒன்றிணைத்தல்.
4. கிராமியத்துறையின் தொழில்நுட்ப ஆற்றல், வளங்கள் என்பவற்றின் மேம்பாட்டாற்றலை அடையாளங் காணல்.
5. விரிவாக்கத் திட்டமும் நடைமுறைக் கிடலும்.
6. அடவுச் செயற்பாட்டிலீடுபடல்.
7. பணக் கொடுப்பனவுகளும், மாற்றமுறைச் செயற்பாடுகளும்.

**விரிவாக்கம்**

கிராமிய வங்கியின் தோற்றத்தின் போது மிக்க சிரத்தையுடன் ப. நோ. கூ. சங்கங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டமையால் இத் தொடக்க காலத்தில் வங்கி விரிவாக்கம் மிக மெதுவாகவே காணப்பட்டதாயினும், பலமானதோர் தளத்தின் மீது இது கட்டியெழுப்பப்படலாயிற்று.

**கிராமிய வங்கி விரிவாக்கம்**
*1965 – 1970 காலப்பகுதி*

| ஆண்டு | கிராமிய வங்கி எண்ணிக்கை | வைப்பு (ரூபாக்களில்) | கடன் வழங்கல் (ரூபாக்களில்) |
|---|---|---|---|
| 1965 | 8 | 4,96,360 | 9,14,699 |
| 1966 | 13 | 7,25,748 | 13,26,457 |
| 1967 | 27 | 13,71,227 | 20,29,476 |
| 1968 | 44 | 33,33,190 | 38,30,731 |
| 1969 | 68 | 61,73,061 | 55,72,281 |
| 1970 | 90 | 169,08,405 | 71,22,213 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1971ல் கூட்டுறவு மறுசீரமைப்பின் விளைவாக பாரிய ஆரம்ப ப. நோ. கூ. சங்கங்கள் நிறுவப்பட்டன. ஐயாயிரமளவிலான சிறு கிராமிய ப. நோ. கூ. சங்கங்களின் எண்ணிக்கை 372 ஆகக் குறைக்கப்பட்டது. கூட்டுறவுச் சங்க மறுசீரமைப்புடன் கிராமிய வங்கித்துறையும் முக்கியமான கோட்பாட்டு மாற்றங்களுக்குள்ளாகிறது. ப. நோ. கூ. சங்கமனைத்திலும் கிராமிய வங்கி அமைக்கப்பட்டதுடன் அவற்றின் கடன் செயற்பாடுகள் இதனூடாகவே புரியப்பட வேண்டியதாயிற்று. இதுகாறும் கிராமிய வங்கியென மாற்றத்தைக் கொண்டது ப. நோ. கூ. சங்கத்தின் ஏனைய துறைகளுடன் சமாந்தரமாக இத்துறையும் செயற்பட ஆரம்பித்தது.

கூட்டுறவுக் கிராமிய வங்கியின் விரிவாக்கத்தில் 1974ல் மீண்டும் ஒருபடி முன்னேற்றம் எய்தப்பட்டது, கிராமிய வங்கி தவிர்ந்த சிறப்புக்கிளைகள் நிறுவப்படலே இம் முன்னேற்றமாகும். ப. நோ. கூ. சங்கத்தினை மையமாகக் கொண்டு கிராமிய மட்டத்தில் வங்கிச் சேவை இவ்வழிமூலம் வழங்கப்படலாயிற்று. 1974ல் 71 சிறப்புக் கிளைகளாகவிருந்த எண்ணிக்கை ஆண்டுதோறும் அதிகரித்து1988ல் 688 ஆக வளர்ச்சி பெற்றது. மறுசீரமைப்பின் பின்னர் கிராமிய வங்கித்துறையில் ஏற்பட்ட சீரிய வளர்ச்சி உயரிய சேவையொன்றினை வழங்குவதற்கு ஏதுவாயிற்று.

1971-1988 வரை கிராமிய வங்கி விசாலிப்பு

| ஆண்டு | கிராமிய வங்கி எண்ணிக்கை | சிறப்புக் கிளைகள் |
|---|---|---|
| 1971 | 111 | — |
| 1974 | 332 | 71 |
| 1977 | 285 | 259 |
| 1980 | 284 | 357 |
| 1983 | 288 | 555 |
| 1987 | 282 | 629 |
| 1988 | 282 | 688 |

தீவடங்களிலும் கிராமிய வங்கிப் பின்னலிடம் பெற்றதுடன் அவற்றின் 67% வீதம் 9 மாவட்டரீதியில் பரம்பியிருந்தன. மாவட்ட மக்களால் இது ஏற்கப்பட்டதென்ற அளவீட்டுடன் அதன் வளமான எதிர்காலமும் இம் மாவட்டங்களிலேயேயுளது.

| மாவட்டம் | வங்கிக்கிளை எண்ணிக்கை | வங்கியெண்ணிக்கைமுழுவதின்வீதாசாரம் |
|---|---|---|
| கொழும்பு | 64 | 6.6 |
| கம்பஹா | 109 | 11.24 |
| குருநாகல் | 109 | 11,24 |
| கண்டி | 71 | 7.32 |
| காலி | 70 | 7.22 |
| மாத்தறை | 64 | 6.6 |
| இரத்தினபுரி | 57 | 5.88 |
| களுத்துறை | 52 | 5.36 |
| கேகாலை | 52 | 5.36 |
| | 648 | 66.82 |

மேற்காண் புள்ளிவிபரத்திலிருந்து ஏனைய 15 மாவட்டங்களிலும் 322 மட்டும் பரம்பியிருப்பது புலப்படும். கடந்த ஐந்தாண்டுகளிலும்இம்மாவட்டங்களில் கிளைகளின் வளர்ச்சி மிக்க மெதுவாகவேயுளது. திருமலை,மொனராகலை,அம்பாறை,முல்லைத்தீவு, கிளிநொச்சிவவுனியா, ஆகிய மாவட்டங்களில் இவ்வைந்தாண்டில்வளர்ச்சியற்றேயுள்ளது. வளர்ச்சி காணப்படும் பிரதேசங்களில் கிராமிய வங்கி செழுமையான விசாலிப்பை கொண்டுள்ளது என்பது அவதானிக்கப்படுவதுடன் எதிர்காலத்திலும் இப்போக்கானது தொடரும் என்றே கொள்ளப்பட வேண்டியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தற்காலச் செயலாக்கம்**

கூட்டுறவுக் கிராமிய வங்கி இயக்கத்தின் 25வது வருட நிறைவெய்தும் வேளையில் அதன் தொடக்ககால நோக்கங்கள் எந்தளவிற்கு எய்தப்பட்டுள்ளனவெனவும், கிராமிய வங்கிகள் எவ்வழியில் பயணஞ் செய்கின்றன வெனவும் நோக்குதல் பயனுடையது.

எல்லாக் கிராமிய வங்கிகளும் பொதுவான வணிகச் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளன. அங்கத்துவ, அங்கத்துவரல்லாதோரின் வைப்புப் பெறல் பல்வேறு கடன் திட்டங்களை நடைமுறைக்கிடல், மக்கள் வங்கியின் முகவராக அடகு கொள்ளல், மாற்ற முறைகளைச் செயலாக்கல் ஆகியன மேற்கொள்ளப்படுகின்றன. கிராமிய வங்கி உருவாக்கப்பட்ட நோக்கத்தில் சேமிப்பைத் திரட்டுதல் வெற்றி பெற்றது போலக் காணப்படுகிறது.

**சேமிப்புத் திரட்டுதல்**

சேமிப்பைத் திரட்டுதலில் ஏனைய வணிக வங்கிகளிலும் பார்க்க கிராமிய வங்கி முன்னணி வகிக்கிறது. கிராமிய மட்ட அண்மை, குறைந்த செலவினம், இலகுவான கிளைப் பின்னல், வட்டித் தீர்மானத்துக்கான சுயாதீனம் என்பன இவ் வெற்றிக்கான காரணிகளாகும்.

| ஆண்டு | வைப்புத்தொகை | முன்னைய ஆண்டிலும் அதிகரித்த விதம் |
|---|---|---|
| 1980 | 3,34,730 | 23.5 |
| 1981 | 4,34,048 | 29.6 |
| 1982 | 5,41,483 | 24.75 |
| 1983 | 7,17,981 | 32.59 |
| 1984 | 9,05,490 | 26.1 |
| 1985 | 10,87,536 | 20.10 |
| 1986 | 12,95,597 | 19.13 |
| 1987 | 15,60,178 | 20.42 |
| 1988 | 19,03,359 | 22.00 |

கிராமிய வங்கிப்பின்னலூடாக 1988ம் ஆண்டிறுதியில் ரூ. 19 லட்சம் சேமிப்புத் திரட்டப்பட்டுள்ளது. ஆண்டொன்றில் சேமிப்பு வளர்ச்சி வீதம் 24.25% இருக்கும் அதே வேளையில் கிராமிய வங்கிப் போக்கினைக் கூட்டும் அம்சமும் இதுவாகவேயுள்ளது. கிராமிய வங்கிச் சேமிப்பினை சாதாரண, நிலையான வைப்புக்களென வகுக்கலாம். 1988ல் சாதாரண வைப்புக் கணக்குகள் 2,347,117ம் நிலையான வைப்பு 23,708 கணக்குகளும் கிராமிய வங்கிகளில் காணப்பட்டன.

வைப்புபற்றிய தரவுகளின்படி இலங்கையில் ஒவ்வொரு எண்மருக்கும் ஒருவரென்ற அடிப்படையில் கிராமிய வங்கியில் கணக்கு வைத்துள்ளனர். சேமிப்புக் கணக்குகளின் எண்ணிக்கைகளை அவற்றின் வளர்ச்சியோடு ஒப்பிடுகையில் இப்போக்கு உவப்புக்குரியதாகவில்லை. 1981 இன் வளர்ச்சி வீதம் முன்னைய ஆண்டைவிட 14.39% மாயிருப்பினும் 1988 இன் வளர்ச்சி வீதம் 6% வீதமாகவே தோன்றுகிறது. கடந்த 10 ஆண்டுகளில் கணக்குகளின் விபரம் பரிசீலிக்கப்பட்ட போது வளர்ச்சிப் போக்கு கீழ் நோக்கிச் செல்வதாகத் தெரிகிறது. சாதாரண சேமக் கணக்கொன்றின் பெறுமானம் ரூ. 73,000 ஆகவேயுள்ளது. நிலையான சேமிப்பைப் பொறுத்தளவில் அது மேலும் பாதகமாகவே காணப்படுகிறது. 1988ம் ஆண்டில் இடம் பெற்ற நிலையான வைப்புக் கணக்குகள் 23,708 ஆயும் பெறுமானம் ரூ. 195,201,758 ஆயுமிருந்துளது. சென்றாண்டின் வளர்ச்சியானது 935 ஆகக் குறைவடைந்துமிருப்பது அவதானிக்கப்பட்டது. 1982ல் இருந்து நிலையான வைப்புக்களில் குறிப்பான வளர்ச்சி காணப்படவில்லை.

கூட்டுறவுக் கிராமிய வங்கி சேமிப்பை நோக்குகையில் அவதானிக்கப்படும் வேறொரு முக்கிய அம்சமாக அங்கத்துவ சேமிப்புகளிலும் அங்கத்தவரல்லாதோர் சேமிப்புகள் மிக்க அதிகரிப்பாகவிருத்தலாகும். இது 67:33 என்ற விகிதத்திலுள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளது. இக் காரணி கிராமிய வங்கிவைப்புக் கணக்குடையோரில் பெரும்பான்மையோர் நிலையான வருமானம் படைத்த மத்திய வர்க்கத்தைச் சார்ந்தோரே எனப் புலப் படுத்துகிறது.

கிராமிய வங்கி வலைப்பின்னல் முறை மூலமாக திரட்டப்படும் சேமிப்பு குறித்த பிரிதோர் தோற்றம் நாடு முழுமையும் சம அளவிலான வியாபகமாகும். ஆயின் முழு சேமிப்பின் 85% வளமான 9 மாவட் டங்களுள் அடங்குகிறது. ஒன்றிணைந்த கிராமிய வங்கிச் சேமிப்பின் 18.4% சேமிப்புகள் கம்பஹா மாவட்டத்திலேயே திரட்டப்பட்டுள்ளது.

கிராமிய வங்கியின் சேமிப்புகளுள் சாதாரண சேமக் கணக்குகளே கூடுதலா னவையென்பதோடு நிலையான சேமக் கணக்குகள் மிக அற்பமானவை. இவை யன்றி முதலீட்டுச் சேமம், இளம்பிரா யத்தினர் சேமமாகியனவும் நிறுவனங்க ளின் வைப்புகளும் இடம்பெறினும் சாதா ரண சேமத்தின் ஒரு சிறுபாகமாகவே இவையுள்ளன. கடன் வழங்குதல் குறித்த நடவடிக்கைகளில் நெடுங்கால வைப்புக் கள் நிலைத்த நிதி நிலைமைகளைத் தோற்றுவிக்க அவசியப்படுவதால் அதன் மீதான கவனம் வேண்டப்படுகிறது. ஏனைய வணிக வங்கிகள் கூடுதலான வட்டி வீதத்தை வைப்புக்களுக்கு வழங்கு கின்றமை கிராமிய வங்கிகளை இப் போட்டி நிலைகளுக்கு முகங்கொடுக்க வைத்துள்ளது.

**வைப்புகள் முதலிடுதல்**

கூட்டுறவுக் கிராமிய வங்கியின் தொடக்க காலத்தில் அதன் முதன்மை யான குறிக்கோளாக கிராம மக்களின் நிதித்தேவைகளை நிறைவேற்றுதல் மூலம் பொருளாதார அபிவிருத்தியை அடைவ தாகவே இருந்தது. கூட்டுறவுக் குணாம்ச மான சேமிப்பினை ஊக்குதலை வைப் புப் பெறுதலின் மார்க்கமாக வேண்டப் படுகின்ற கடனுக்கான நிதியையும் அதே வேளையில் உருவாக்க முடிகிறது. கிரா மிய வங்கிகளால் திரட்டப்பட்ட சேமிப் புக்களை கொண்டு குறுங்காலக் கடன் களும், அடகு முற்பணங்களும் வழங்கப் பட வழிபிறந்தது. மீந்துள்ள தொகை மக்கள் வங்கியிலும், தேசிய சேமிப்பு வங்கியிலும் நிலையான வைப்பாக இடப் படுகிறது.

கிராமிய வங்கிகளின் ஆரம்ப ஆண்டு களில் கடன் வழங்க செயற்பாடு முன்னு ரிமை பெற்றது. 1964 – 1969 காலத்துள் திரட்டிய சேமிப்பினளவுக்கு கடன்களும் அடகு முற்பணங்களும் இருந்தன. 1974–1975 ஆண்டுகளில் இவ்வம்சமானது வைப் பினளவுக்கு கடனும் முற்பணங்களும் சம வளர்ச்சியுறாமை காணப்படுகிறது. கிரா மிய வங்கிகளின் பெரும் நிதித் திரட்டு கைகள் கிராம மட்டத்தில் முதலிடப்ப டாது வேறு வணிக வங்கிகளில் முதலி டப்படுதல் நோக்கப்பட வேண்டிய இலட் சணமாகியுள்ளது.

**கிராமிய வங்கி வைப்புக்களின் முதலீடு**

| ஆண்டு | முழு வைப்புத் தொகை ரூ. மில்லியன்களில் | குறுங்காலக் கடன் ரூ. மில்லியன்களில் | அடகு முற்பணம் ரூ. மில்லியன்களில் | மீதிவைப்பு நூற்றுவீதம் |
|---|---|---|---|---|
| 1984 | 905.4 | 185.1 | 323.6 | 43.87 |
| 1985 | 1,087.5 | 234.1 | 340.6 | 47.15 |
| 1986 | 1,295.5 | 295.3 | 362.4 | 49.04 |
| 1987 | 1,560.1 | 337.7 | 370.9 | 54.57 |
| 1988 | 1,908.3 | 408.5 | 420.5 | 56.65 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1988ம் ஆண்டில் குறுங்காலக்கடனாக 21.4% மும் அடகு முற்பணமாக 22ஐ யுமாக முழுவைப்புகளின் 43.4% பயன் படுத்தப்பட்டன. குறுங்காலக் கடன், அடகு முற்பண கொடுப்பனவுகளில் ரூ. 10,00,829ல் 70% முற் குறிப்பிட்ட வளமான பிரதேசங்களில் வழங்கப்பட்டிருத்தல் அவதானிக்கப்படல் வேண்டும்.

1988ல் வழங்கப்பட்ட குறுங்காலக் கடன்களின் எண்ணிக்கை 1,03,198 ஆகும். கிராமிய வங்கிகளால் வழங்கப் பட்ட குறுங்காலக் கடன் தரவு ஆண்டு தோறும் வளர்வது போலக் காணப்பட்டிருப்பினும் மொத்த கிராமிய வங்கிப் பின்னலுடன் நோக்கின் இது அற்பமானதாகவேயுள்ளது. கடன் கணக்குகளின் வருடாந்த வளர்ச்சி சாதாரணக் கணக்குகள் 7,166 ஆகவிருக்கையில் ப. நோ. கூ. சங்க அடிப்படையில் பார்க்கையில் சங்கமொன்றுக்கு 25 கடன்களாகவும் ஒரு கிராமிய வங்கிக் கிளைக்கு 7 கடன்களாகவுமேயுள்ளது. கடனொன்றின் சாதாரண பெறுமானம் ரூ. 3,959/– மட்டுமே. கடந்த காலங்களுள் வெளிக்காட்டப்படாத மற்றொரு விசேட அம்சம் கடன்களின் சாதாரண சராசரியின் அதிகரிப்பின்மையாகும்.

கிராமிய வங்கித்துறை மூலம் பல்வகை நடவடிக்கைகளுக்காக ரூ. 35,000/– வரையிலான உயர்மட்டத்திற்கு கடன் வழங்க ஏற்பாடுகளுள் தனியாற்கடனெல்லை ஆண்டுதோறும் அதிகரித்துவரினும் அதற்கினையாக மொத்தக் கடன் தொகை அதிகரிக்கவில்லை. கடன் வழங்கலின் பல்வேறு குணாம்சங்கள் கற்கப் பட்டுள்ளதுடன் பிற்காண்காரணிகள் முக்கியமானவை.

— கடன் பெறுவோரின் எண்ணிக்கை குறிப்பிட்டளவுக்கு அதிகரிக்காமை.
— சிறுதொகையினரே கடன்பெறல்.
— கடன் பெறும் குழுவினர் நிலையான வருமானம் பெறும் மத்திய வகுப்பினராயிருத்தல்.
— ஒருவரே பலவகைக் கடன்களைப் பெறுதல்.

மேற்காண் காரணிகளால் கிராம மட்டத்தில் வேண்டப்படும் கடன்களை வழங்கும் பொறுப்பினை கிராமிய வங்கிகள் வெற்றிகரமாகச் செயலாற்றுகின்றனவா என்ற ஐயத்தை எழுப்புகின்றது. கிராமிய வங்கித் தோற்றத்தின் அவசியமாக, கிராமிய விவசாயிகள், கைத்தொழிலாளர்கள், கைவினைஞர் ஆகிய தொழிற் பிரிவினருக்கு நிதிவழங்கவே அடிப்படை நோக்காகவிருந்தது. ஆயினும் கிராமிய வங்கிகளும் மரபார்ந்த வணிக வங்கிகள் போலவே கடன்பெற இயலுமையுடையோர்க்கே கடன் வழங்க முன்வருகின்றதொரு விருப்பினையே நாடுவதாலேயே கடன் திட்டம் விரிவடையமுடியாமைக்கு காரணமாயுள்ளது. கிராமிய மட்டத்திலுள்ள மக்கள் பிரிவினருக்கு கிராமிய வங்கியூடாக உரிய பயன் கிடைப்பதற்கான வாய்ப்புக்கள் இன்னும் தோன்றவில்லை. கடன் வழங்கலுக்கு முன்னோடியாக வருமானம் பற்றிய அறிக்கைகள் கோருதல் போன்ற நடவடிக்கைகள் கடன்நாடி இதிலிருந்து தூர விலகி முறைசாரா வழிகளூடாகத் தன் தேவையைப் பெறுகின்ற நிலையுள்ளது. கிராமிய வங்கிகளால் வழங்கப்படும் கடன் எண்ணிக்கை குறைவான மட்டத்திலிருப்பதே இதனைச் சான்றுப்படுத்துவதாகும்.

சில கிராமிய வங்கி முகாமையாளர்களின் நலன் நாடா சிந்தனையும் கடன் திட்டம் மேலோங்காமைக்கொரு காரணமாகும். குறைவான வருமானமுடையோர் மீதான நம்பிக்கையீனம். கடன்களை முன்னேற்றுதலுக்கான ஆர்வமின்மையென்பன இத்துறையின் முக்கிய ஊறுபாடுகளாகும். கடன் நாடிவருவோரது தேவைகளையறிந்து பூர்த்தி செய்யாது கடன் தேவையுள்ளோர் யாவரெனவங்கியாளர் அறிதற்கு முயலுகின்றமற்றோர் அவலமும் இங்கே நிலவுகிறது. கிராமிய வங்கியாளர் தன் தொழிற் பிரதேசத்திலுள்ள வளங்கள், நுட்பம் என்பவற்றின் தகவல்களைக் கற்று கிராம மக்களின் வளர்ச்சிக்கு வினைத்திறனுடன் செயலாற்றலே அவர்களிடம் எதிர்பார்க்கப்படுகிறது கடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திட்டம் பற்றி விசாலித்த பிரச்சார இயக்க மொன்று மிகுந்த அடிமட்டத்தில் முன்வைத்து செயற்படல் கிராமிய வங்கி களுக்குரிய கடமையாகும். கிராமிய வங்கி களால் பலவகைக்கடன்கள் கொடுபடி னும் இக் கிராமிய வங்கியாளர் தம் தொழிற்படு பிரதேசத்தில் கடன் பயன் படுத்தல் குறித்து மதிப்பீடு செய்வதற் காக கணப்படவில்லை. முழுக் கடனில் 25%மே விவசாய கால்நடை சிறு தொழி லாளர்களுக்கு வழங்கப்படுவதாயிருப்பது டன் 75% நுகர்ச்சிக்கும் ஏனைய தேவை களுக்குமாகவேயுள்ளது. கிராமிய வங்கி களால் வழங்கப்பட்ட கடன்களில் பெரும் பகுதி வீடுகட்டுதலுக்கே கொடுக்கப்பட் டுள்ளது.

மொத்தக் கடனில் 56.7% இக் கடன் களாகும். இவ்வாறு ஒரு பிரிவுக்கு முன்னு ரிமை அளித்தலால் பல்வேறு பிரிவுகளுக்கு உரிய இடம் கிடைக்க முடியாது போய் விட்டது. இந்நிலை தோன்றுவதற்கு தெளிவான கடன் திட்டமொன்று செயற் படுத்தப்படாமையே காரணமாயிற்று. கிராமியவங்கியாளரொருவர்தன்பிரதேசத் தில்தேவைகளின் அடிப்படையில்பிரதேசத் திற்கான பல்வேறு வகைக் கடன் திட்ட மொன்றை காணமுயன்ற ஆர்வம் மிக அருகியுள்ளது. சிலவேளைகளில் மக்கள் வங்கி, கூட்டுறவு ஆக்கத் திணைக்களம் என்பவற்றின் பரிந்துரைகள் மீதும் வழ மையான கடன்வழங்குதலுக்கும் புறம்பாக கிராமியக் கடன் தேவைகளை ஈடு செய்ய கிராமிய வங்கிகள் முன்வருவதாக சொல் வதற்கில்லை கிராமியக் கடன் தேவை களுக்கு நிதியினை மட்டும் வழங்குவது டன் அமையாது, உற்பத்திக்கான உள் ளீடுகளை வழங்கல், தொழிற்திறன், ஆலோசனை வழங்கல், சந்தைப்படுத்தல் ஒழுங்கு புரிதல் ஆகிய முக்கிய விடயங் களையும் பெற்றளித்தல் வங்கிச் செய லாற்றலில் ஒரு பாகமாதல் அவசியம். இத்தகைய கடன்களே பூரணப்படுத்திய கடன்களென அழைக்கப்படுதலுடன் விவ சாய கால்நடை, கைத்தொழிலாகிய தேவையான வகையில் விசாலிப்புக்காக பூரணப்படுத்திய கடன் திட்டமானது வெற்றிகரமான அணுகுமுறையாகும் இவற்றினை நடைமுறைப்படுத்தலும் இலகுவானது. வணிக வங்கிகளுக்கில்லாத வாறு கடன் நாடி தன் சங்க அங்கத்தவரா யிருப்பதனால் உள்ள நெருக்க உறவு கடன் பாவனைத்துக்கும் அளவீட்டுக்கும் மேலும் வாய்ப்பாகவுளது. மேற்காண் செயற்பாட் டுக்கென ஒவ்வொரு வங்கிக்கிளையிலும் செயலாற்றல் பரிச்சமுடைய விசாலிப்பு அலுவலர் இருத்தல் அவசியம்.

கிராமிய வங்கிகளால் நடைமுறைப் படுத்தும் கடன் திட்டங்களுள் இணைப் பின்மை மற்றொரு அம்சமாகும். கிரா மியமட்டக் கடன் தேவை அனைத்தை யும் ஒருங்கிணைத்த வகையிலான 'கட்' கடன் திட்டம் கிராமிய வங்கிகளை நடைமுறைக்கிடல் வேண்டுமென எதிர் பார்க்கப்படுகிறது. ஆயின் அவ்வாறு நடைபெறுவது மிக்க வரையறுக்கப்பட்ட தாகவேயிருக்கிறது. உற்பத்தி நோக்கத் திற்காக மட்டுமன்றி நுகர்வுத் தேவைக ளையும் உள்ளடக்கியதாகக் கடன் திட் டம் செயற்படுத்தப்படின் முறைசாரா பிரிவுகளை நாடுதல் தவிர்க்கப்படல் கூடும். இத்தகைய கடன்முறை செயற்படுத்தப் பட கடன் திட்டமொன்று அவசியமாவ துடன் கிடைத்த குவளம் போதாவிடத்து தேவையினை நிறைவுறுத்தற்கான துணை முறையொன்றும் உள்ளடக்கப்படல் அவசி யமாகிறது.

கூட்டுறவு கிராமிய வங்கிப் பிரிவில் கடந்த சில ஆண்டுகளில் காலம் தப்பிய கடன் வீதத்தின் வளர்ச்சியும் காணப்படு கின்றது. 1977 தொடக்கம் காலம் பிந்திய கடன் கிரமமாக அதிகரிப்பதுடன் 15% திலிருந்து 30% மாகக் கூடியுமுள்ளது. 1987ல் 21.03% மாக இருந்த காலம் தப் பிய கடன் 1988ல் 31.4% மாகியுள்ளது. இப் போக்கு கடன்முறை விசாலிக்கப்படு தற்கு பாதகமாகவுள்ளது. காலம் தப்பிய கடன் வீதம் 20% மாக குறைக்கப்படும் வரை மேலும் கடன் வழங்கல் நிறுத்தப் பட்டுள்ளது. இதன்படி 1988ல் கிராமிய வங்கிகள் 195 கடன் வழங்கலை தற்காலி கமாக இடைநிறுத்தியுள்ளன. போதிய அளவு பின் சோதனைகள் இடம்பெறாமை, அவ்வாறு செயற்பட பணியாளருக்கு ஊக்கமளிக்கு முறையின்மை என்பவையே இவ்வேண்டத்தகாத நிலையை தோற்று வித்தனவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமிய வங்கிகளில் 25வது ஆண்டு நிறைந்த பின்னரும் தொடக்கத்தில் அதன் இலக்காகவிருந்த நோக்கங்கள் இன்றும் மாற்றமின்றியே நிலவுகின்றன. கடந்த 25 ஆண்டுகளில் கிராமிய வங்கி சில துறைகளில் குறிப்பாக கிராமிய மட்டத்தில் நிதியத்தைத் திரட்டுதலில் வெற்றிகண்டுள்ள போதிலும் உண்மையில் அது ஏனைய துறைகளில் போதியளவு முன்னேற்றத்தை எய்தவில்லை. அடகு முற்பண வழங்கல் போதிய இலாபம் தருவதாக இருந்தமையினால் அத்துறையிலீடுபட்டனரேயன்றி கிராமிய வங்கியின் பிரதான நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு முன்னுரிமை வழங்கப்படவில்லை. அடகு பணத்திற்கு அளித்த அளவிற்றாக்கம், சென்ற ஆண்டுகளில் பாதுகாப்பு நிலைமைகள் பலவீனமுற்றமையால் அடகு நடவடிக்கைகள் இடம்பெற முடியாதமை நட்டத்தில் பல கிராமிய வங்கிகள் இயங்க வழிவகுத்துள்ளது. இதனாலேயே வங்கிகள் தம் அடிப்படை நோக்கினை எய்த முன்வர பல சங்கங்கள் இயலாதிருப்பது அவதானிக்கப்பட்டது.

கூட்டுறவு கிராமிய வங்கியூடாக அதிதிறனுடைக் கூட்டுறவு வங்கிச் சேவையொன்றை தற்போதைய கட்டமைப்பில் கிராமிய மட்டத்தில் குறைந்த வருமானம் பெறும் வகுப்பினருக்கு அளித்தல் எத்துணை உசிதமானதென்பது தற்போது கேள்விக்குட்பட்டுள்ளது. இம்முயற்சி ஆரம்பத்தில் ப. நோ. கூ. சங்கத்தின் தனியோர்பாகமாக அமைக்கப்பட்டதாயினும் புனரமைப்பின் விளைவாக ப. நோ. கூ. சங்கத்தின் ஓர் பிரிவாகக் கணிக்கப்பட்டு அதன் முதன்மை இழக்கப்படலாயிற்று. அவசிய நுகர்ச்சிப்பண்டங்களில் பங்கீட்டை முக்கிய பணியாகக் கொண்டுள்ள ப. நோ. கூ. சங்கங்களால் சிறப்பம்சமிக்க வேறொரு வங்கிப்பிரிவினை நடைமுறைப்படுத்தல் எவ்வளவு சாத்தியமானதென்பது மற்றொரு வினாவாகும். மறுசீரமைப்பின் போது கிராமிய வங்கிப் பிரிவை நிறுவுகையில் அச் சங்கத்தில் பணியாற்றும் கடன், சந்தைப்படுத்தல் முகாமையாளரை வங்கிச் சேவை முகாமையாளரென்ற புதிய பதவியில் அமர்த்தப்பட்டது. ஆயின் இப்பதவிக்கு நியமிக்கப்பட்டோரில் பெரும் பகுதியினர் வங்கிச் சேவை பற்றிய அறிவோ அன்றி பயிற்சியோ அற்றோராகவேயுள்ளனர். வங்கிக் கிளை முகாமையாளரில் அதிகமானோரும் கிளைமுகாமையாளராகவேயுள்ளதுடன் வங்கிச் சேவை பயிற்சி பெற்றபின் நியமிக்கப்பட்டவருமல்லர். ப. நோ. கூ. சங்கங்களின் தற்போதைய கட்டமைப்பின் கீழ் கிராமிய வங்கிப் பணியாளரை ஏனைய பிரிவினருடன் கணிக்காது சிறப்புத் தேர்ச்சியுடையோராய்க் கொள்ளும் முறை காணப்படவில்லை. இதனால் இப்பணித் தொகுதியினர் வங்கியாளரென்ற ரீதியில் சிந்தித்துச் செயலாற்றவியலாதுளது.

கூட்டுறவு ஆக்கத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட கற்கையொன்று கூட்டுறவு சங்கங்களில் கிராமிய வங்கியை அமைக்கும் நடை முறை பெருமளவிற்கு வெற்றியளித்துள்ளதாக வெளிப்படுத்துகிறது முங்வத்த, பொல்காவலை, மடுல்லை, அம்பன்கக ஆகிய ப. நோ. கூ. சங்கங்களின் மூலமாக கிராமிய வங்கி விசேட சங்கங்களாக நிறுவப்பட்டுள்ளன. இத்தகைய சங்கங்களில் வைப்பாளர் அங்கத்தவராக உள்ளமையாலும் சங்கத்தின் ஒரே தொழிற்பாடு வங்கி நடவடிக்கையானமையாலும் இவை ஆரம்பிக்கப்பட்ட குறுகிய காலத்தினுள்ளேயே கடன் வழங்குதல் வர வேற்பதற்குரிய தொழிற்பாடாக மாறியுள்ளது. இச் சங்கம் மரபார்ந்த சட்டவிதி முறைகளுக்குப் புறம்பாக சூழ்நிலைகளுக்கு ஈடு கொடுத்து செய்யப்படுவதால் விசாலமான சேவையொன்றை வழங்கத்தக்கதாக உள்ளது. சில கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் நோக்கத்திற்கமைய கிராமியத் துறையின் வளர்ச்சிக்கு முக்கியமாகக் கடமையாற்ற வேண்டிய நிறுவனம் ஒன்றென்பது மனதிற்கொள்ளப்படல் வேண்டும். 25 ஆண்டுகளுக்குள் பல்வேறு பிரச்சினைகளுக்கு மத்தியிலும் கிராமிய வங்கிகளால் ஆற்றப்பட்ட செயற்பாட்டை சிறு அளவினதெனக் கொள்ள முடியாது. கிராமிய மக்களின் உடன் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக தற்போதிலும் கூடுதலான செயற்பாடுகள் வேண்டப்படுவதால் கிராமிய வங்கி சில அறை கூவல்களுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது. வினைத்திறனுடைய முகாமையும் விருப்புடனான வழிகாட்டுகையும் இத்தகைய அறை கூவல்களுக்கு முகம் கொடுப்பதற்கு இத்துறைக்கு இயலுமென்பது கடந்த 25 ஆண்டுகளின் சேவையிலிருந்து ஏற்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்குச்சந்தை நடவடிக்கைகள்

கு. தேமதுரன்
ஆண்டு 13
(வர்த்தகம்)

ஓர் நாட்டின் நிதிச் சந்தையானது அவசியமானதாக காணப்படுகின்றது. நீண்டகால, குறுங்கால நிதி வசதியை வழங்கும் அமைப்புக்களை கொண்டதே நிதிச்சந்தை ஆகும், இதில் நீண்டகால நிதி வசதியை வழங்கும் அமைப்புக்களைத் தனித்து மூலதனச்சந்தை எனவும் அழைப்பர். இம்மூலதனச்சந்தையின் முக்கிய பிரிவாகப் பங்குச்சந்தை காணப்படுகின்றது. இது பொதுக்கம்பனிகளின் நீண்டகால நிதித்தேவையைப் பூர்த்தி செய்ய உதவும் பகுதியாக உள்ளது.

கம்பனிகளின் பங்குகளை அல்லது பங்குத்தொகுதிகளை பல்வேறு தரப்பினருக்கும் விற்று நீண்டகால நிதி வசதியைப் பெற உதவும் அமைப்பு பங்குச் சந்தை எனப்படும். இதனை முதல்தரப் பங்குச்சந்தை, இரண்டாந்தரப் பங்குச் சந்தை என வகைப்படுத்திக் கொள்ளலாம். புதிதாக ஆரம்பிக்கும் கம்பனிகள் முன்விபரணத்தின் ஊடாகவோ அல்லது புதினப்பத்திரிகை ஊடாகவோ தகவல் அளித்து பொதுமக்களிடம் இருந்து விண்ணப்பங்களைக் கோரி பங்குகளை விற்பனை செய்யும் அமைப்பாக முதலாம் தரப் பங்குச்சந்தை காணப்படுகின்றது. இங்கு பொதுவாக பங்குகளைக் கொள்வனவு செய்ய விரும்புவோர் குறிப்பிட்ட தரகர் நிறுவனத்தில் இருந்து அல்லது குறிப்பிட்ட வங்கியிலிருந்து அல்லது குறிப்பிட்ட கம்பனியிலிருந்து விண்ணப்பப் பத்திரங்களைப் பெற்று கொடுப்பனவை மேற்கொண்டு பங்குக்கொள்வனவில் ஈடுபடுவர். இங்கு பொதுவாகப் பங்குகளை முகப்பெறுமதியில் வழங்கப்படுவதைக் காணலாம். முதலாம்தரப் பங்குச்சந்தை ஊடாக ஏற்கனவே பங்குகளை விற்பனை செய்து செயற்பாட்டில் உள்ள கம்பனிகள் மேலும் நிதியைப் பெறும் பொருட்டு தரகர்களின் ஊடாக முன்பு விற்பனை செய்த வகைப்பங்குகளை விற்பனை செய்யும்போது ஏற்படுவது இரண்டாம் தரப் பங்குச்சந்தை ஆகும். இதில் பொதுவாக கேள்வி நிரம்பல் சக்திகளால் பங்கிற்கான விலை தீர்மானிக்கப்படுவதைக் காணலாம்.

இலங்கையின் பங்குச்சந்தையின் தோற்றத்தையும் வளர்ச்சியையும் நோக்கும்போது பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் ஆரம்பித்ததைக் காணலாம். பத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொன்பதாம் நூற்றாண்டில் பிரித்தானியர் தேயிலை, இறப்பர், தெங்கு போன்ற உற்பத்திகளை ஆரம்பித்த பின் அவற்றுக்கு வேண்டிய மூலதனத்தைப் பெற பொதுக்கம்பனி அமைப்புக் கொண்டுவரப்பட்டது. இங்கு அவ்வுற்பத்திப் பொருட்களை உற்பத்தியாளர் சார்பில் விற்பதற்கும் பொதுக்கம்பனிகள் சார்பில் பங்குகளை விற்பதற்கும் தரகு வியாபாரம் அக்காலத்தில் கொண்டுவரப்பட்டது. இத்தரகர்களின் செயற்பாடே பங்குச்சந்தைக்கு வழிகோலியது. இவ்வகையில் தரகு வியாபாரத்தில் ஈடுபட்டவர்கள் 1896ல் பங்குத் தரகர் சந்தை அமைத்தனர். இது 1904ல் கொழும்புத் தரகர் சங்கமாக மாற்றியமைக்கப்பட்டது. இது 1984 வரை பங்குச்சந்தையில் தனியுரிமையை வகித்தது. 1984ல் பங்குச்சந்தையில் கொழும்புத் தரகர் சங்கத்துடன் போட்டியிட வரையறுத்த பங்குத்தரகர் சங்கம் (Colombo Share Brokers' Association Ltd.) அமைக்கப்பட்டது. இக்கம்பனியை அமைப்பதற்குப் பின்வரும் காரணங்களைக் குறிப்பிடலாம்.

* கொழும்புத் தரகர் சங்கத்தின் தனியுரிமையை நீக்க
* கொழும்புத் தரகர் சங்கத்திற்கும் வரையறுத்த பங்குத்தரகர் சங்கத்திற்கும் இடையே போட்டியை ஏற்படுத்தி பங்குச்சந்தையின் திறமையான சேவையைப் பெற உதவுதல்
* கொழும்புத் தரகர் சங்கத்தின் திறமைக் குறைவை நீக்க
* கொழும்புத் தரகர் சங்கம் தனியார் துறை அமைப்பாக இருந்தமையால் அதன்மீது மக்களுக்கு நம்பிக்கை குறைவாக இருந்தமை.

இந்நிலையில் இவ்வமைப்புகளுக்கு இடையே கடுமையான போட்டி நிலை காணப்பட்டது. இதனால் 1985இல் இவ் இரு அமைப்புக்களும் இணைக்கப்பட்டு கொழும்பு வரையறுத்த ஆவனமாற்று ( Colombo Securities Exchange Ltd. ) அமைக்கப்பட்டது. இவ்வாறு கொழும்புத் தரகர் சங்கமும் வரையறுத்த பங்குத் தரகர் சங்கமும் இணைக்கப்பட்டதற்கு பின்வருவனவற்றை காரணங்களாகக் கூறலாம்.

* பங்குக் கொள்வனவு விற்பனவு நடவடிக்கையில் ஈடுபடுவோருக்கு ஒரு பொதுவான அமைப்பை உருவாக்குதல்
* இரு அமைப்புக்களுக்கிடையேயும் காணப்படும் போட்டியினை நீக்கல்
* பொதுமக்களிடையே கூடுதலான நம்பிக்கையை ஏற்படுத்துதல்
* இரு நிறுவனங்களும் இணைந்து பங்குச் சந்தையின் வளர்ச்சியினைத் துரிதப்படுத்துதல்
* பங்குக் கொள்வனவு விற்பனவுகளை இலகுபடுத்த ஒரு பொதுவான வியாபாரத்தளத்தை அமைத்தல்.

1987ல் பங்குச்சந்தைகளின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவதற்கும் வழி நடத்துவதற்கும் பங்கு முதலீட்டாளர்களின் நலன்களைப் பாதுகாக்க என சட்ட உத்தரவாதம் கொண்ட ஒரு அரச அமைப்பாக ஆவண சபை (Securities Council) 1987ம் ஆண்டு 36ம் இலக்க ஆவண சபைச் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டது. இது பின்வரும் குறிக்கோள்களைக் கொண்டுள்ளது.

* ஆவணங்களை நிதி நியாயத்துடனான கொள்வனவு விற்பனவு செய்யும் அமைப்பாக உறுதிப்படுத்தல்
* பங்கு முதலீட்டாளரின் நலன்களைப் பாதுகாத்தல்
* பங்குச் சந்தையைக் கட்டுப்படுத்தி உயர் தொழிற் தரத்தை ஏற்படுத்துதல்
* நிதி நட்டங்களை எதிர்நோக்கும் முதலீட்டாளர்களைப் பாதுகாக்க ஈடு செய் நிதியை நடைமுறைப்படுத்தல்.

1990ம் ஆண்டு பங்குச் சந்தையை நோக்கும்போது கொழும்பு வரையறுத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்குத்தொகுதிப் பரிமாற்றுக் கம்பனி யாகப் (Colombo Stock Exchange Ltd.) பெயர் மாற்றப்பட்டது. தற்பொழுது இவ்வமைப்பு பங்குச் சந்தையை வழி நடத்தி வருகின்றது. தற்போது இதில் பின்வரும் தரகு நிறுவனங்கள் அங்கம் வகிக்கின்றன.

* பாட்லெட் மாலோரி ஸ்ரொக் புறோக்கஸ் (சொந்த) லிமிட்டட்
  Bartleet Mallery Stock Brokers (Pvt) Ltd.
* போப்ஸ் அன் வோக்கர் ஸ்ரொக் புறோக்கஸ் (சொந்த) லிமிட்.
  Forbes and Walker Stock Brokers (Pvt) Ltd.
* ஜோன் கீல்ஸ் ஸ்ரொக் புறோக்கஸ் (சொந்த) லிமிட்,
  John Keels Stock Brokers (Pvt) Ltd.
* மேக்கண்டைல் ஸ்ரொக் புறோக்கஸ் லிமிட்.
  Mercantile Stock Brokers Ltd.
* செறண்டிவ் றஸ்ட் சேவிஸ் லிமிட்.
  Serendib Trust Services Ltd)
* சோமவிலே ஸ்ரொக் புறோக்கஸ் (சொந்த) லிமிட்.
  Somarville Stock Brokers (Pvt) Ltd.
* ஜே. வி. ஸ்ரொக் புறோக்கஸ் அன்ட் பினான்சியல் சேவிஸ் (சொந்த) லிமிட்.
  J. V. Stock Brokers and Financial Services (Pvt) Ltd.
* இலங்கா செக்கியுறிற்றீஸ் (சொந்த) லிமிட்.
  Lanka Securities (Pvt) Ltd.
* ஏசியா ஸ்ரொக் புறோக்கஸ் அன்ட் இன்வெஸ்மென்ற் (சொந்த) லிமிட்.
  Asia Stock Brokers and Investment (Pvt) Ltd.
* கொம்மேசல் ஸ்ரொக் புறோக்கஸ் (சொந்த) லிமிட்.
  Commercial Stock Brokers (Pvt) Ltd.
* டி சில்வா அன்ட் அபயகுணவர்தனா ஸ்ரொக் புறோக்கஸ் (சொந்த) லிமிட்.
  De Silva and Abeygunawardena Stock Brokers (Pvt) Ltd.

*1991ல்*, *1991ம்* ஆண்டு 26ஆம் இலக்க பிணையங்கள் பேரவை திருத்தச் சட்டத்தின் மூலம் ஆவண சபைக்கு மேலதிக அதிகாரம் அளிக்கப்பட்டது. இதன்மூலம் இதனை பிணையங்களை பரிவர்த்தனை ஆணைக்குழு (Securities and Exchange Council) ஆகப் பெயர் மாற்றப்பட்டது. இத்திருத்தத்திற்கு அமைய இவ் ஆணைக்குழு நம்பிக்கை அலகுகளை உருவாக்கவும், அவற்றிற்குரிய விதிகளை வழங்கவும், பொதுமக்கள் நலன் கருதி பங்குப் பரிமாற்றும் அமைப்பின் நிர்வாகத்தைப் பொறுப்பேற்கவும் பங்குப் பரிமாற்றும் அமைப்பிற்கு நான்கு இயக்குனர்களை நியமித்தலும் உட்பட பல்வேறு அதிகாரங்களும் அளிக்கப்பட்டுள்ளது.

மேலும் *1991ல்* பங்குப் பரிமாற்றம் தொடர்பாக மத்திய வைப்புத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இது *1991* செப்ரெம்பர் மாதத்திலிருந்து இரண்டாம் தரப் பங்குச்சந்தையை துரிதப்படுத்தும் வகையில் நடைமுறைப்படுத்துகின்றது. பங்குப்பத்திரங்களின் உரிமையை மத்திய வைப்பிலிடல் கம்பனியின் பாதுகாப்புடன் புத்தக பதிவுகளின் மூலம் உரிமையை மாற்றும் செயற்பாடே மத்திய வைப்புத் திட்ட முறையாகும். இதனால் பல நன்மைகள் எதிர்பார்க்கப்படுகின்றன. இதில் வணிக முயற்சியால் மேற்கொண்ட பதிவு நடவடிக்கைகள் கணணியூடாக மேற்கொள்ளப்படவுள்ளன. இத்திட்டத்திற்கு வேண்டிய உபகரணங்களைக் கொள்வனவு செய்யத் தேவையான 1,50,000 அமெரிக்க டொலரை U.S.A.I.D. நிறுவனம் அன்பளிப்புச் செய்துள்ளது.

இலங்கையில் மத்திய வைப்புத் திட்டத்தைச் செயற்படுத்துவதற்கு என வரையறுக்கப்பட்ட மத்திய வைப்புத்திட்ட சொந்தக் கம்பனி (Central Depository Co. (Pvt) Ltd.) *1982ம்* ஆண்டு *17ம்* இலக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கம்பனிச்சட்டத்திற்கு அமைய உருவாக்கப்பட்டுள்ளது. இது பங்குத்தொகுதி பரிமாற்றும் ஒரு அமைப்பின் துணைக் கம்பனியாகச் செயற்படும். இதில் பங்குக் கைமாற்றும் தொடர்பில் பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது.

* பரிமாற்றப்படும் பங்குப் பத்திரம் தொடர்பான கொடுப்பனவுகளை மேற்கொண்டு கொடுக்கல் வாங்கல் தீர்க்கப்படும் வரை பங்குப்பத்திரங்களை பாதுகாத்து வைத்திருத்தல்.
* பங்குக் கொடுக்கல் வாங்கல் தொடர்பான பதிவுகளை மேற்கொள்ளல்.
* பங்குப் பத்திரங்களின் உரிமையை மாற்றிக் கொடுத்தல்.

மத்திய வைப்பு திட்டம் செயற்படுவதனை நோக்கும்போது பங்குகளை விற்பனை செய்ய விரும்புகின்றவர்களும் கொள்வனவு செய்ய விரும்புகின்றவர்களும் பங்குச்சந்தையில் உள்ள தரகர் நிறுவனத்தின் ஊடாக மத்திய வைப்பு கம்பனியில் ஒரு கணக்கை ஆரம்பிக்க வேண்டும். பங்குகளை விற்பனை செய்வோர் பங்குகளை மத்திய வைப்பு கம்பனியில் ஒப்படைப்பர். இக்கொள்வனவு விற்பனவு நடவடிக்கைகள் தரகர் ஊடாக நடைபெறும். இக்கொள்வனவு விற்பனையின் போது விற்பனை செய்வோரின் கணக்கில் வரவு வைக்கப்பட்டு கொள்வனவு செய்வோரின் கணக்கில் செலவு வைக்கப்படும். இக்கொள்வனவு விற்பனவு செயற்பாட்டிற்கு ஆதாரமாக கொள்வனவு தாள் (Baught Notes) விற்பனவுத்தாள் (Sold Notes) என்பன சம்பந்தப்பட்ட தரகு நிறுவனங்களின் இயக்குனர்களின் கையொப்பத்துடன் அத்தரகு நிறுவனத்தால் கொள்வனவு செய்தவருக்கும் விற்பனை செய்தவருக்கும் அனுப்பிவைக்கப்படும். இவ்வேளையில் பங்கு பத்திரங்கள் கொள்வனவாளர் சார்பில் மத்திய வைப்பு கம்பனியால் பாதுகாத்து வைக்கப்படும். எனினும் கொள்வனவாளர் விரும்பின் பங்குகளை எடுத்துச் செல்லலாம்.

மத்திய வைப்புத்திட்ட கம்பனியின் வருமானத்தினை நோக்கும்போது அதன் பாவனையாளரிடமிருந்து நிதி வருமானம் பெறப்படுவதனைக் காணலாம்.

* பங்குத்தரகர் தமது வருமானத்தில் 10% இக்கம்பனிக்கு கொடுத்தல்.
* பங்கு முதலீட்டாளர்கள் ஒவ்வொரு உடன்படிக்கைக்கும் 15/- செலுத்துதல்.
* விலைகூறப்பட்ட கம்பனிகள் ஒவ்வோர் நடவடிக்கையின்போதும் 15/- செலுத்துதல்.
* சம்பந்தப்பட்ட வங்கிகள் ஒவ்வொரு செயற்பாட்டிற்கும் 25/- செலுத்துதல்.

இம்மத்திய வைப்புத்திட்டம் செயல்பட ஆரம்பித்ததை தொடர்ந்து பின்வரும் கம்பனிகள் இக்கம்பனி ஊடாக செயற்பட அனுமதியைப் பெற்றுள்ளன.

* சிலோன் டுபாக்கோ கம்பனி லிமிட்.
* ஜோன் கீல்ஸ் கோல்டிங் லிமிட்,
* ஹேலீஸ் லிமிட்.
* சேலான் வங்கி
* யூனைட்டற் மோட்டோஸ் லங்கா லிமிட்.
* சிலோன் ஓட்சிசன் கம்பனி லிமிட்.

இம் மத்திய வைப்பு திட்டத்தின் மூலம் பின்வரும் நன்மைகளை பெற ஏதுவாக உள்ளன.

* விரைவாக பங்குப் பத்திரங்களின் உரிமையை மாற்றம் செய்யலாம்.
* பங்குப்பத்திரங்களின் உரிமையை குறைந்த செலவில் மாற்றிக்கொள்ளலாம்.
* கூடிய பாதுகாப்பான முறையில் பங்குப்பத்திரங்களின் உரிமை மாற்றப்படும்.
* பொதுக்கம்பனிக்கு பங்குச் சந்தை தொடர்பான தகவல்களை பெருமளவில் வெளிப்படுத்தும்.
* மத்திய வைப்பு கம்பனி ஊடாக பங்குதாரருக்கு பங்கிலாபம் விரைவாக கிடைக்க வழிகள் செய்யப்பட்டுள்ளன:
* மத்திய வைப்பு திட்ட கம்பனியுடன் பங்குப்பத்திரம் சமர்ப்பித்து வங்கியில் இலகுவாக கடன் பெற வாய்ப்புண்டு.

இவ்வாறான நன்மைகளாலும் அரசினால் மேற்கொள்ளப்பட்டு வரும் மாற்றங்களினாலும் பங்கு சந்தை நடவடிக்கைகள் பெருமளவு அதிகரித்து வருவதை காணலாம். எதிர்காலத்தில் பங்குச்சந்தை கூடிய வளர்ச்சியுடன் செயற்பட இவையுடன் மேலும் ஏற்பட்டுவரும் மாற்றங்களும் உதவக்கூடியதாக அமையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலுவலகச் சாதனங்கள்

ஜெ. பற்றிக் ஜெயக்குமார்
ஆண்டு - 13
வர்த்தகப் பிரிவு

அறிமுகம்:-

(1) எமது சாதாரண கரு'மங்களைச் சிறப்பாகவும் விரைவாகவும் செய்து முடிக்க அலுவலகங்களில் பல்வேறு வகைப் பொறிகளைப் பயன்படுத்துகின்றோம். சுமார் ஐம்பது அல்லது அறுபது ஆண்டுகட்கு முன் அலுவலகங்களில் அலங்கார அல்லது புதுமைப் பொருளாக இருந்த சாதனங்கள் இன்று இன்றியமையாத சாதனங்களாகி விட்டன. குறிப்பாக மேலைநாடுகளில் மிக அதிகளவான "அலுவலக சாதனங்களைப்" பயன்படுத்துகின்றனர். நம் நாட்டிலும் அப் பயன்பாடுகள் படிப்படியாக வளர்ந்து வருவதை அவதானிக்கலாம்.

அலுவலகம் பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வோர் பிரிவிலும் ஒவ்வோர் அலுவல் மேற்கொள்ளப்படுவது நாம் அறிந்த ஒன்றாகும். கடிதப்போக்குவரத்து, கணக்குப் பேணல், பணக்கையாள்கை இது போன்ற பல கருமங்களை பல பிரிவுகளினூடாக மேற்கொள்ளப் பல்வகை அலுவலகச் சாதனங்கள் பயன்படுத்தப்படுகின்றன. அவற்றுள் முக்கியமான சில வற்றைக் காண்போம்.

## 2.1 தட்டச்சுப்பொறி (TYPEWRITER)

கடிதங்களை அழகுற அமைப்பதற்குத் தட்டெழுத்துப் பொறி அல்லது தட்டச்சுப்பொறி பயன்படுகிறது. கடிதத்தைத் தட்டச்சுச் (Type) செய்யும்போது காபன் (Carbon) தாள்களைக் கொண்டு பல பிரதிகளை பகுத்துக் கொள்ளலாம். கடிதங்களைச் சுத்தமாகவும், அழகாகவும். விரைவாகவும் அமைக்கத் தட்டச்சுப் பொறி பயன்படுகின்றது.

## 2.2 பிரதி பகுக்கும் பொறி (DUPLICATING MACHINE)

தட்டச்சுப் பொறிமூலம் உயர்ந்த அளவு ஒரு முறையில் 6 அல்லது 7 பிரதிகளே பெறமுடியும் பல நூற்றுக்கணக்கான பிரதிகள் தேவைப்படும்போது பிரதியெடுக்கும் இப்பொறியைப் பயன்படுத்த முடியும். மெழுகினால் பதப்படுத்தப்பட்ட தாளில் பிரதிஎடுக்க வேண்டிய செய்தியைத் தட்டச்சுச் செய்து இதற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கெனத் தயாரிக்கப்பட்ட மையினை இக் கருவியின் உருளைகள் மீது பூசப்பட்டு தட்டச்சுச் செய்த தாளினை இதனூடே செலுத்திக் கையினால் அல்லது மின்விசை மூலம் சுற்றவேண்டும். ஒருசில வினாடி களில் நூற்றுக்கணக்கான பிரதிகளை இப்பொறி பகுக்க வல்லது.

## 2.3 அஞ்சல் முத்திரை பொறிக்கும் பொறி (POSTAL FRANKING MACHINE)

பெரிய அலுவலகங்களில் நாள் ஒன் றிற்கு நூற்றுக்கணக்கான கடிதங்கள் வெளியனுப்ப வேண்டியிருக்கும், அத் தனை கடிதங்கட்கும் அஞ்சல் முத்திரை கள் ஒட்டி அவற்றைத் தபாற்பெட்டிகளில் சேர்ப்பதற்கு அதிக நேரமாகும். இத் தொல்லையைத் தீர்க்க அஞ்சல் முத்திரை பொறிக்கும் பொறி பயன்படுகிறது. இதன் பயன்பாட்டின் போது அஞ்சல் முத்திரை கள் (Stamp) ஒட்டவேண்டியதில்லை. குறிப்பிட்டளவு பணத்தை அஞ்சலகத் திற்குச் செலுத்தியதும் அஞ்சலதிகாரி யொருவர் இக் கருவியிலுள்ள கணக்கிடும் மணியை (Meter) செலுத்திய தொகையள விற்குச் சரிசெய்து வைப்பார். உடனே பொறி தானே பூட்டிக் கொள்ளும். (Automatic Lock) அஞ்சல் வழியில் வெளி யனுப்ப வேண்டிய கடிதங்களை அல்லது அட்டைகளை இக் கருவியினுட் செலுத்தி அதன் மீது அதற்கான அஞ்சற் கட்டணத் தைப் பொறித்து விட்டால் போதும், அஞ்சற்கட்டணம் பொறிக்கப்பட்டதும் மொத்தத் தொகையிலிருந்து பொறிக்கப் பட்ட தொகை கழிக்கப்படும். அஞ்சற் கட்டணமாக ஒரு நாளைக்கு எவ்வளவு செலவாகிறது என்பதை இதன் மூலம் மிக இலகுவாகத் தெரிந்து கொள்ளலாம். பொறியின் விரைவு காரணமாக பெருமள வான வேலைகளை சிறிது நேரத்தில் முடிக்கலாம்.

## 2.4 முகவரி பொறிக்கும் பொறி (ADRESSO GRAPH MACHINE)

அஞ்சலுறைகள், அட்டைகள் மீதும் கடிதங்கள் மீதும் முகவரியினைப் பதிப்ப தற்கு இப்பொறி பயன்படுகிறது. உலோ கத் தகட்டின் மீது வாடிக்கையாளரின் பெயரையும், முகவரியையும் செதுக்கி அத் தகட்டினை முகவரி பதிக்கும் பொறி மீது வைத்து கடிதஉறையை நடுவே செலுத்தினால் முகவரி உறைமீது அச்சுப் போல் பதியும். இப்பொறியானது மணித் தியாலத்திற்கு சுமார் ஆயிரம் (1000) முகவரிகளை அச்சிடும் திறன் உடையது. காப்புறுதி (Insurance) அலுவலகங்களிலும் கூலி கணக்குத் தயாரிக்கும் அலுவலகங்க ளிலும் வாடிக்கையாளரிடம் மாதம் அற விடப்படவேண்டிய வரி, கட்டணம் உதாரணமாக (மின்சாரக் கட்டணம்) போன்றவை அறவிட வேண்டிய நிலையி லுள்ள அலுவலகங்கள் இப் பொறியைப் பெருமளவாகப் பயன்படுத்துகின்றன.

## 2.5 மடிக்கும் பொறி (FOLDING MACHINE)

கடிதங்கள், காகிதங்கள் போன்ற வற்றைக் குறிப்பிட்ட அளவில் மடிப்ப தற்கு இப்பொறி பயன்படுகிறது. இத னைப் பெருமளவில் கடிதப் போக்குவரத் துடன் தொடர்பான அலுவலகங்களில் காணலாம்.

## 2.6 காசோலை வரையும் பொறி (CHEGUE WRITING MACHINE)

கையெழுத்து, தட்டெழுத்து போன்ற வற்றால் வரையப்படும் காசோலைகள் சிலசமயங்களில் திருத்தம் செய்யப்பட லாம். இவ்வாறான மோசடித் திருத்தங் களைத் தடுக்கும் பொருட்டுக் காசோலை வரையும் பொறியைப் பயன்படுத்துகின்ற னர். இப்பொறி காசோலை மீது அழுத்த மாக வரையப் பயன்படுகிறது. எழுத்து அழுத்தமாகக் காணப்படுவதால் காசோ லையில் பள்ளமான தன்மை காணப்படு கிறது. இவ்வாறான பள்ளத்தின் மீது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழிக்கமுடியாத ஒருவகை மையைத்தடவி விட்டால் மோசடியான திருத்த வேலைகள் செய்யும் வாய்ப்புக் குறைந்துவிடுகிறது. இதனால் காசோலையில் செய்யப்படும் சிறு திருத்தமும் பளிச்சென்று தென்படும்.

## 2.7 கணக்கீட்டுப் பொறி (CALCULATING MACHINE)

கூட்டல், கழித்தல், பெருக்கல், பிரித்தல் போன்றவற்றைப் பெருமளவில் செய்ய வேண்டிய நிறுவனங்களில் கணக்கீட்டுப் பொறி பயன்படுத்தப்படுகிறது. சோர்வு தரக்கூடிய இவ்வேலைகளை மிக விரைவாகவும், பிழையின்றியும், தெளிவாகவும் செய்து கொள்வதற்கு கணக்கீட்டுப் பொறி பயன்படுகிறது.

கணக்கீட்டுப் பொறியில் ஒருவகை கூட்டல் பட்டியல் பொறி (Adding listing Machine) எனப்படும். கூட்டப்படும் எண்களை அல்லது தொகைகளைக் கூட்டிய வகைப்படி பட்டியலில் அச்சிட்டு கூட்டுத் தொகையையும் தரக்கூடியதாகையால் இப் பொறி இப்பெயரைப் பெறுகிறது.

## 2.8 பேரேட்டுப் பதிவுசெய்யும் பொறி (LEDGER POSTING MACHINE)

கணக்குப் பொறிகளில் (Accounting Machine) பேரேட்டுப் பதிவுசெய்யும் பொறி ஒன்றாகும். சரக்குகளை விற்பனை செய்பவர் வாடிக்கையாளர் பேரேடுகளில் பதிவுகளை மேற்கொள்ள இப்பொறி பயன்படுகிறது.

## 2.9 உள்ளகத் தொலைபேசி (INTERCOM)

இது அலுவலகங்களின் உள்ளகத் தொடர்பாடலாகவும் அதன் பயன்படும் கருவியாகவும் அமையும். அலுவலகங்களில் பிரதான பதவி வகிக்கும் உத்தியோகத்தருக்கு இது வழங்கப்பட்டிருக்கும். இக் கருவி உள்ளகச் செய்தியை வாய்மொழி மூலம் ஏனையோர்க்கு வழங்க உதவும். இதிலுள்ள பொத்தானை (Switch) ஐ அழுத்தி செய்தியை அடுத்தவருக்குத் தெரிவிக்கலாம்.

## 2.10 கணனி (COMPUTER)

கணனியானது, ஒரு இலத்திரனியல் சாதனமாகும். இது அலுவலகங்களில் தேவைகளிற்கு ஏற்ப தரவுகளை நிரைப் படுத்த உதவுகின்றது. தற்போது நிறுவனங்களில் நான்காவது பரம்பரைக் கணனி (4th Generation Computer – Large Scale Intergreted Circuit) பயன்படுத்தப்படுகின்றது. நிறுவனங்கள் கணனியுடன் தொடர்பு கொள்வதற்கு,

(i) இயந்திர மொழி (Masinus Language)

(ii) தாழ்மட்ட மொழி (Low Leavel Language)

(iii) உயர்மட்ட மொழி (high leavel language)

ஆகிய மூன்று செயற்திட்ட மொழிகளை, (Programming language) பயன்படுத்தி கணனி மூலம் தரவுகளை சேகரித்து பணிகளை இலகுவாக்குகின்றன.

## 3. முடிவுரை

இவ்வாறாக அலுவலகங்களின் பல்வேறுபட்ட கருமங்களைப் பல்வேறான சாதனங்களின் உதவியினால் செய்ய முடிகிறது. இவ்வாறான அலுவலக சாதனங்கள் மூலம் கருமங்களையெல்லாம் சுலபமாகச் செய்வது மாத்திரமன்றி சிக்கனமாகவும் விரைவாகவும் பிழைகளின்றியும் ஆற்ற முடிகிறது.

இலங்கை வங்கி வெளிநாட்டுப் பயணிகளுக்கு உதவும் வகையில் பிரயாண முகவர் நிலையம் ஒன்றினை ஆரம்பித்துள்ளது. இது "சீபாங் பயண முகவர் நிலையம்" என அழைக்கப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணிக தீபம் வளம்பெற

வாழ்த்து கூறும்

# அன்ரன் லக்ஷா ஜுவல்லர்ஸ்

487, கஸ்தூரியார் வீதி,

யாழ்ப்பாணம்



வணிக மன்றம்

மேலும் வளமுற

வாழ்த்துகின்றோம்

# ஹரன்

திருநெல்வேலி



யூனியன் கல்லூரியின் வருடாந்த
வணிகதீபமே!
உனது வளர்ச்சிக்கு
எமது வாழ்த்துக்கள்!

சுத்தமான சாப்பாட்டு, வகைகள், சிற்றுண்டி வகைகளுக்கும், மற்றும் திருமண வைபவங்களுக்குத் தேவையான சிற்றுண்டி வகைகளை குறித்த தவணையில் ஓடர்களுக்கு பெற்றுக் கொள்ளவும்.

# பிரபாகரன் கபே,

K. K. S ரோட்,
மல்லாகம் சந்தி,
மல்லாகம்,

உரிமையாளர் :-

P. சோமசுந்தரம் (சீனன்)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலையான சொத்துக்களிற்கான கணக்கீடு
**( Accounting for Fixed Assets )**

## இலங்கைக் கணக்கீட்டு நியமம் 18 (SLAS 18)

**யோ. ரதிராணி**
*விரிவுரையாளர்,*
*வணிக முகாமைத்துவத்துறை,*
*யாழ். பல்கலைக்கழகம்.*

### 1. அறிமுகம்
**( Introduction )**

சொத்துக்கள் பொதுவாக, உருவச் சொத்துக்கள் ( Tangible Assets ) அருவச் சொத்துக்கள் ( Intangible Assets ) எனவும் வகுக்கப்படுகின்றது. உருவச்சொத்துக்கள் நிலையான சொத்துக்களைக் குறித்து நிற்கின்றது.[1] நிலையான சொத்துக்கள் இலங்கைக் கணக்கீட்டு நியமம் 18 இற்கமைய பின்வருமாறு வரைவிலக்கணப்படுத்தப்படுகின்றது.

(i) பொருட்கள், சேவைகளின் விநியோகத்திற்காகவும், அல்லது ஏனையோருக்கு வாடகைக்கு விடுவதற்காகவும், அல்லது நிர்வாக நோக்கங்களிற்காகவும், ஒரு நிருவனத்தில் பயன்பாட்டில் இருக்கும் சொத்துக்களும், இத்தகைய சொத்துக்களைத் திருத்துவதற்கும், பராமரிப்பதற்கும் நிறுவனத்தில் வைத்திருக்கப்படும் சொத்துக்களும்[2]

(ii) மீள் விற்பனைக்காக, அல்லது நுகர்விற்காகவன்றி ஒரு நிறுவனத்தின் ஆகக் கூடிய அல்லது குறைந்தளவு நிரந்தர பாவனைக்காக வைத்திருக்கப்படும் சொத்துக்கள்[2]

(iii) ஒரு நிதியாண்டிற்கு மேலாக பாவனையில் ஈடுபடுத்தும் நோக்குடன், வாங்கப்பட்ட அல்லது நிர்மாணிக்கப்பட்ட சொத்துக்கள்.[2]

ஒரு நிறுவனம் தனது மொத்த முதலீட்டில் பெரும் பங்கினை நிலையான சொத்துக்களின் மீது செலவு செய்வதனாலும், இச் சொத்துக்கள் நீண்ட காலம் பாவனையிலீடுபடுத்தப்படுவதனாலும், நிறுவனத்தின் மொத்த சொத்துக்களில் நிலையான சொத்துக்கள் பெரும் பங்கினை வகிக்கின்றன. எனவே, இதிலிருந்து இவற்றின் கணக்கு வைப்பின் அவசியத்தை உணர முடிகின்றது. எனினும் பின்வருவன பற்றி இங்கு ஆராயப்படவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(i) காடுகளும், அதே போன்ற மீண்டும் புதுப்பிக்க முடியாத இயற்கை வளங்களும்.

(ii) இயற்கை வாயு, எண்ணெய், தாதுப் பொருட்கள் என்பவற்றினது ஆய்வு, அகழ்விற்கான செலவும், கனிப் பொருள் உரிமைக்கான செலவும்.

(iii) முதலீட்டுச் சொத்துக்களும் அபிவிருத்திக்கான செலவும்.

மேலும், நிலையான சொத்துக்களது தேய்மானம் தொடர்பாகவும் இங்கு நோக்கப்படவில்லை[3].

## 2. கிரயக் கூறுகள் (Components of cost)

### 2. 1: கொள்வனவுப் பெறுமதி (Purchase value)

ஒரு நிலையான சொத்தினது கொள் விலையானது (தள்ளுபடிகள், (rebates) வியாபாரக் கழிவு (trade discount) என்பன கழித்த தேறிய தொகை) இறக்கு மதித் தீர்வைகள், கொள்வனவு வரிகள் குறித்த சொத்தை அதன் கருதப்பட்ட உபயோகத்திற்காக வேலை நிலைக்குக் கொண்டுவர நேரடியாக ஏற்படும் செலவுகளையும் உள்ளடக்கும். வேலை நிலைக்குக் கொண்டுவர நேரடியாக ஏற்படும் செலவுகளாவன;

(i) தள அமைப்பிற்கான செலவு (cost of site preparation)

(ii) கையாளல் செலவுகளும், ஆரம்ப விநியோகச் செலவுகளும் (Initial delivery and handling costs)

(iii) பொறி நிறுவுவதற்கான அத்திவாரச் செலவுகள் (Foundation cost for plant)

(iv) கட்டிடக் கலைஞர், பொறியியலாளருக்கான தொழில் ரீதியான கட்டணங்கள் (Professional fees)

ஒரு நிலையான சொத்திற்குக் கொடுப்பனவு செய்யும்போது, அச்சொத்து அதன் உபயோகத்திற்குத் தயாராயிருத்தல் வேண்டும். சொத்தின் பெறுமதி எப்போதும் காசு விலைக்கு சமமாயிருக்கும். கொடுப்பனவானது சாதாரண கடன் திட்டத்திற்கமைய பிற்போடப்பட்டும் செலுத்தப்படும். இவ்வாறு செலுத்தப்படுகையில் பிற்போடப்பட்டு கொடுப்பனவு செய்யப்படுகின்ற மொத்தத் தொகைக்கும், காசு விலைக்குமிடையிலான வேறுபாடு வட்டியாகும்.

உதாரணமாக;

ஒரு கணனி(Computer) ரூபா 25,000/- இற்கு உடன் காசுக்குக் கொள்வனவு செய்யப்படலாம். சாதாரண கடன் திட்டத்தின் கீழ் வருடாந்தம் ரூபா 6,000/-வீதம் ஐந்து வருடங்களில் கொடுப்பனவு செய்யப்படுகிறதெனின், இவற்றிற்கிடையிலான வேறுபாடு ரூபா 5,000/-[4] வட்டியாகும்.

மேலும், நிர்வாக மேந்தலைச் செலவுகளும், ஏனைய பொது நிர்வாகச் செலவுகளும் குறித்த நிலையான சொத்தின் கொள்வனவுடன், அல்லது சொத்தை வேலை நிலைக்குக் கொண்டுவர நேரடியாக ஏற்பட்டிருந்தாலொழிய சொத்தின் கிரயத்துடன் சேர்க்கப்படமாட்டா. அதாவது இருப்பினது கிரயக் கணிப்பீடு போன்று இருக்கும்.[5]

### 2. 2: சுயமாக நிர்மாணிக்கப்பட்ட நிலையான சொத்துக்கள் (Self Constructed Fixed Assets)

சுயமாக நிர்மாணிக்கப்படும் சொத்தின் செலவானது குறித்த சொத்தின் நிர்மாணத்துடன் நேரடியாகத் தொடர்புபடும் சகல செலவுகளையும் உள்ளடக்கும். ஒரு நிர்மாணத்திட்டத்திற்கு அதன் நிர்மாணம் ஆரம்பித்ததிலிருந்து முடிவுவரை (சொத்து உபயோகத்திற்குத் தயாராகும்வரை) ஏற்படும் நிதிச் செலவுகளும் இங்கு உள்ளடக்கப்படும். இவ்வாறு முதலாக்கப்பட்ட தொகை அக்காலப் பகுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யில் நிதிக்கூற்றுக்களில் வெளிக்காட்டப்படல் வேண்டும்.

## 2. 3: பணமல்லாத கொடுப்பனவுகள்: (Non-monetary considerations)

ஒரு நிலையான சொத்தானது இன்னொரு சொத்திற்காகப் பகுதி மாற்றம் செய்யப்பட்டு கொள்வனவு செய்யப்படுகையில், பகுதி மாற்றம் செய்யப்படும் சொத்தின் பெறுமதி பொதுவாக அப்போதைய சந்தைப் பெறுமதியிலேயே தீர்மானிக்கப்படுகின்றது. ஒரே வகையான சொத்துக்கள் பகுதி மாற்றம் செய்யப்படுகையில், கொள்வனவு செய்யப்படும் சொத்து கைவிடப்படும் சொத்தின் தேறிய கீழ்க்கொணரும் மீதியில் (Net carrying-amount ) பதிவு செய்யப்படலாம். அல்லாவிடின், மீதிக் கொடுப்பனவு அல்லது பெறுவனவு ஏதுமிருப்பின், அது காசு அல்லது ஏனைய வகையில் செம்மையாக்கம் செய்யப்படலாம்.

உதாரணமாக,

ரூபா 25,000/- தேறிய பெறுமதி கொண்ட ஒரு உபகரணத்திற்குப் பதிலாக ரூபா 25,000/- பெறுமதியான உபகரணம் கொள்வனவு செய்யப்படின், கொள்வனவு செய்யும் நிறுவனத்திற்கு எதுவித கொடுப்பனவோ, அல்லது பெறுவனவோ இடம் பெறா. ஆனால் அதே சொத்திற்குப் பதிலாக ரூபா 30,000/- பெறுமதியான சொத்து கொள்வனவு செய்யப்படின், கொள்வனவு செய்யும் நிறுவனம் ரூபா 5,000/- காசாக அல்லது ஏனைய வகையில் கொடுப்பனவு செய்ய வேண்டியிருக்கும். மாறாக அதே சொத்திற்குப் பதிலாக ரூபா 22,000/- பெறுமதியான சொத்து கொள்வனவு செய்யப்பட்டிருப்பின், விற்பனை செய்யும் நிறுவனத்திடமிருந்து ரூபா 3,000/- பெற்றுக்கொள்ள வேண்டியிருக்கும்.

நிலையான சொத்தொன்று பங்குகளிற்காக (shares) அல்லது வேறு முதலீட்டுச் சொத்துக்களிற்காக (securities) மாற்றம் செய்யப்படின். சொத்தின் சந்தைப் பெறுமதி அல்லது வழங்கப்பட்ட முதலீட்டுச் சொத்துக்களின் சந்தைப் பெறுமதி இரண்டிலும். எது அதிக தெளிவுடையதாகவும், பொருத்தமுடையதாகவும் கருதப்படுகின்றதோ, அப்பெறுமதியில் பதிவு செய்யப்படுகின்றது. நிலையான சொத்தொன்று நன்கொடையாகப் பெறப்பட்டிருப்பின், அது சொத்தின் சந்தைப் பெறுமதியிலேயே பதிவுசெய்யப்படும்.

## 3. நிலையான சொத்து முதலாக்கம் (Capitalisation of Fixed Assets)

வழமையாக பிரதான உதிரிப் பாகங்களும் (major spare parts) பதிலாகப் பயன்படுத்தப்படும் உபகரணங்களும் (standby equipment) நிலையான சொத்தாக முதலாக்கப்படுகின்றது. ஏனைய உதிரிப் பாகங்கள், சேவை உபகரணங்கள் என்பன நடைமுறைச் சொத்தின் கீழ் கொண்டுவரப்பட்டு அவை நுகரப்படுகையில் ஏற்படும் வருமானத்திற்கெதிராக தாக்கல்செய்யப்படும்.

நிலையான சொத்தோடு தொடர்புபடும் செலவுகளை முதலீட்டுச் செலவா அல்லது திருத்தச் செலவா எனத் தீர்மானிப்பது கடினம். எனினும், நிலையான சொத்தினது முன்னேற்றங்களைப் பிரதிபலிக்கும் செலவுகள் முதலாக்கப்படல் வேண்டும். திருத்தங்களிற்கான செலவுகள் வருமானத்திற்கெதிராக தாக்கல்செய்யப்படல் வேண்டும். ஏற்கனவேயுள்ள சொத்தின் மதிப்பிடப்பட்ட நியம செயற்பாட்டின் எதிர்கால நன்மைகளை அதிகரிக்கக் கூடிய செலவுகள் மட்டுமே முதலாக்கப்படல் வேண்டும். எதிர்கால நன்மைகள் என்பது பின்வருவனவற்றைக் குறித்து நிற்கின்றது.

(i) சொத்தினது மதிப்பிடப்பட்ட பாவனைக் காலத்தின் விரிவாக்கம்.

(ii) இயலளவிலேற்படும் அதிகரிப்பு.

(iii) முன்னர் மதிப்பிடப்பட்ட செயற்பாட்டுச் செலவின் குறைவு அல்லது வெளியீட்டு அளவில் கணிசமான முன்னேற்றம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4: நிலையான சொத்து வகைப்படுத்தல் (Classification of Fixed Assets)

நிலையான சொத்துக்கள் பல்வேறு வகையாக வகைப்படுத்தப்படுகின்றன. அவையாவன;

(i) இறையில் நிலம் கட்டிடம் (Freehold-land & building)

(ii) குத்தகை நிலம் கட்டிடம் (Leasehold-land & building)

(iii) பொறி இயந்திரம் (Plant & machinery)

(iv) தளபாடம் (Furniture)

(v) பொருத்துக்கள் (Fittings)

(vi) ஏனைய உபகரணங்கள் (Other equipments)

(vii) மோட்டார் வாகனங்கள் (Motor-vehicles)

## 5. நிலையான சொத்து மீள்மதிப்பீடு: (Revaluation of Fixed Assets)

பொதுவாக, எம்மால் தயாரிக்கப்படும் நிதிக்கூற்றுக்கள் வரலாற்றுக்கிரய அடிப்படையிலேயே தயாரிக்கப்படுகின்றன.[6] நிலையான சொத்துக்களும், இவ்வடிப்படையிலேயே அவற்றின் வரலாற்றுக் கிரயமும், தேய்மானமும் கணிப்பிடப்பட்டு மதிப்பிடப்படுகின்றது. நிதிக்கூற்றுக்கள் விலைத்தளம்பல்களினால் மாற்றங்களைப் பிரதிபலிக்கக்கூடிய வகையில் மேற்கொள்ளப்படுவதில்லை.

நிதிக்கூற்றுக்கள் அதனைப் பயன் பயன்படுத்துவோருக்கு பொருத்தமான, உபயோகமான தகவல்களை அளிக்கின்றதனால், நிலையான சொத்துக்களில் ஒரு குறிப்பிட்ட சொத்தின் பெறுமதி அதிகரித்துக் காணப்படின், அவை மீள மதிப்பிடப்பட்டு சுட்டிக் காட்டப்படும். நிலையான சொத்துக்களிற்கு மீள்மதிப்பீட்டுக் கொள்கை பின்பற்றப்படின், அது தொடர்ந்து பேணப்படல் வேண்டும். (upto date) இம்மதிப்பீடானது தொழில் ரீதியான தகைமை பெற்ற மதிப்பீட்டாளரால் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

நிலையான சொத்துக்கள் மீள மதிப்பிடப்படும்போது, ஏற்கனவே திரட்டிய தேய்மானம் ஏதுமிருப்பின், அது மறுமதிப்பீட்டுத் திகதியில் கணக்கு வைக்கப்படமாட்டா. குறித்த சொத்தின் மீளப்பெறக்கூடியதொகையிலும்(recoverable amount) தேறிய கீழ்க்கொணரும் மீதி (net carrying amount) அதிகமானதாயின், நிதிக்கூற்றில் இச் சொத்துக்களது மீள்மதிப்பீடு எத்தகைய தாக்கத்தையும் ஏற்படுத்தமாட்டா.

நிலையான சொத்து மீள்மதிப்பீட்டின்போது, தேறிய கீழ்க்கொணரும் மீதியில் ஏற்படும் அதிகரிப்பு மீள்மதிப்பீட்டு மேலதிகம் (revaluation surplus) என்ற ஒதுக்கத்தின் கீழ் செலவு வைக்கப்படும். இவ்வாறு முன்னர் ஏற்பட்ட மேலதிகத்திற்கெதிராக, பின்னைய காலத்தில் அச்சொத்தில் ஏற்படக்கூடிய மீள்மதிப்பீட்டு நட்டம் தாக்கல் செய்யப்படலாம். இவ்வாறில்லாதவிடத்து மீள்மதிப்பீட்டின்போது தேறிய கீழ்க்கொணரும் மீதியில் ஏற்படக்கூடிய குறைவு வருமானத்திற்கெதிராக தாக்கல் செய்யப்படும். மீள்மதிப்பீட்டு மேலதிகமானது பங்கிர்வுக்குரியதாகக் கணக்குகளில் காட்டப்படலாகா.

## 6: நிலையான சொத்து விற்பனையும், இளைப்பாறலும்: (Retirements & Disposals)

நிலையான சொத்து அதன் பாவனையிலிருந்து அல்லது விற்பனையிலிருந்து மேலும் நன்மை கிடைக்காது என எதிர்பார்க்கப்படும்போது அல்லது, விற்பனை செய்யப்படுகையில் நிதிக்கூற்றுக்களிலிருந்து மறைந்துவிடுகிறது. செயற்பாட்டிலிருந்து ஓய்வுபெறும் நிலையான சொத்துக்கள் அல்லது விற்பனைக்கான நிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யான சொத்துக்கள் அவற்றின் தேறிய கீழ்க் கொணரும் மீதி (net carrying-amount) அல்லது தேறிய கைக்கிட்டும் பெறுமதியில் (net realisable value) குறைந்த பெறுமதியில் நிதிக்கூற்றுக்களில் வேறாகக் காட்டப்படும். நிதிக்கூற்றுக்களில் வரலாற்றுக்கிரயத்தில் பிரதிநிதித்துவப் படுத்தப்படும் நிலையான சொத்துக்களின் விற்பனையால் எழும் இலாபங்கள் அல்லது நட்டங்கள் பொதுவாக இலாப-நட்டக்கணக்கில் அசாதாரண விடயங்களின் கீழ் காட்டப்படுகின்றன.[7]

முன்னர் மீள மதிப்பிடப்பட்ட நிலையான சொத்தின் விற்பனையில், தேறிய விற்பனைக்கும், தேறிய கீழ்க்கொணரும் மீதிக்கும் இடையிலான வேறுபாடு சாதாரணமாக வருமானமாக அல்லது நட்டமாகத் தாக்கல் செய்யப்படும். இச்சொத்துடன் தொடர்புபட்ட மீள் மதிப்பீட்டு மேலதிகம் தேறிய இலாபத்திற்கு மாற்றப்படும்.

## 7: வெளிக்காட்டல்கள்: (Disclosure)

(1) ஒவ்வொரு நிலையான சொத்துக்களும் வகைப்படுத்தப்பட்டு பின்வருமாறு வெளிக்காட்டப்படும்.

(i) வருட ஆரம்பத்தில் ஐந்தொகைத் திகதியில் உள்ளபடியான செலவு அல்லது மீள்மதிப்பீடு.

(ii) அக்காலப் பகுதியிலான மீள்மதிப்பீடுகள்,

(iii) அக்காலப்பகுதியிலான சேர்க்கைகள்,

(iv) அக்காலப்பகுதியிலான விற்பனைகள்,

(v) அக்காலப்பகுதியிலான மாற்றங்கள்.

(2) நிலையான சொத்துக்களது தேய்மானமும், வெளிக்காட்டப்படல் வேண்டும்.

(i) வருட ஆரம்பத்தில் ஐந்தொகைத் திகதியில் உள்ளவாறான திரட்டிய தேய்மானம்.

(ii) குறித்த வருடத்திற்கு தாக்கல் செய்யப்பட்ட தேய்மானம்.

(iii) விற்பனைக்கான சீராக்கங்கள்.

(iv) ஏனைய சீராக்கங்கள்.

(3) மேலும், நிலையான சொத்துக்களது மொத்த கீழ்க்கொணரும் மீதியை (gross carrying amount) தீர்மானிப்பதற்கு உபயோகிக்கப்பட்ட அடிப்படைகள் வெளிக்காட்டப்படல் வேண்டும், ஒன்றிற்கு மேற்பட்ட அடிப்படைகள் பயன்படுத்தப்பட்டிருக்கும் போது ஒவ்வொரு வகைக்குமான, ஒவ்வொரு அடிப்படைகளும் தரப்படல் வேண்டும். சொத்துக்கள் மீளமதிப்பிடப்பட்டு சுட்டிக்காட்டப்படுமிடத்து அவற்றின் திகதிகள் வெளிக்காட்டப்படல் வேண்டும்.

(4) சொத்துக்கள் மீளமதிப்பிடப்பட்டு காட்டப்படின், மீள்மதிப்பீட்டு தொகை தீர்மானித்த முறையும், இத்தகைய பெறுமதி தொழில் ரீதியாகத் தேர்ச்சி பெற்ற மதிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பீட்டாளரால் செய்யப்பட்டது என்பதும் வெளிக்காட்டப்படல் வேண்டும்.

(5) நிலையான சொத்துக்கள் தெரிவு செய்யப்பட்ட மீள மதிப்பீடு செய்யப்படுமிடத்து, தெரிவிற்கான அடிப்படையும், மீள்மதிப்பீடுகளின் கொள்கையும் வெளிக்காட்டப்படல் வேண்டும்.

(6) நிறுவனத்தின் சொந்த நிலையான சொத்துக்களிற்கான நிர்மாணத் திட்டத்திற்கு நிர்மாணத் திட்டம் பூர்த்தியாகும் வரை ஏற்பட்ட நிதிச்செலவுகள் முதலாக்கப்படும்போது, குறித்த காலப்பகுதியில் இவ்வாறு முதலாக்கப்பட்ட தொகைகள் அக்காலப்பகுதிக்கான நிதிக்கூற்றுக்களில் வெளிக்காட்டப்படல் வேண்டும்.

இதனைப் பின்வரும் உதாரணம் மூலம் தெளிவாக்கலாம்:

வரையறுக்கப்பட்ட ஆர்த்தி கம்பனி ஒரு உற்பத்தி கம்பனியாகும். வரையறுக்கப்பட்ட ஆர்பிகோ கம்பனி ஒரு சொத்து முதலீட்டுக் கம்பனியாகும். இவ் இரண்டு கம்பனிகளும் வேறுபட்ட நோக்கங்களுக்காக சொத்துக்களைக் கொள்வனவு செய்து விற்பனை செய்தது. இதன் விபரங்கள் வருமாறு :

30 ஜூன் 1989 : ஒவ்வொரு கம்பனியும் ரூபா 300,000/- இற்கு நிலம் கட்டிடத்தைக் கொள்வனவு செய்தது. இவற்றில் கட்டிடத்தின் கொள்விலை ரூபா 120,000/- ஆகும். இதன் மதிப்பிடப்பட்ட பாவனைக்காலம் 40 வருடங்களாகும்.

30 ஜூன் 1990: ஒவ்வொரு சொத்தும் ரூபா 380,000/- இற்கு மீள மதிப்பிடப்பட்டது. (கட்டிடம் ரூபா 160,000/- உட்பட) இதன் மதிப்பிடப்பட்ட பாவனைக்காலம் இத்திகதியில் 50 வருடங்களாக மீளாய்வு செய்யப்பட்டது.

30 ஜூன் 1991 : ஒவ்வொரு சொத்தும் ரூபா 290,000/- ஆக மீள மதிப்பிடப்பட்டது. (கட்டிடம் ரூபா 100,000/-)

29 ஜூன் 1992 : எல்லா சொத்துக்களும் ரூபா 320,000/- ஆக விற்பனை செய்யப்பட்டது.

வரையறுக்கப்பட்ட ஆர்த்தி கம்பனி இச்சொத்தினை அவர்களின் வியாபார செயற்பாட்டிற்காக பயன்படுத்துகிறது. இது சொத்துக்களை மீள் மதிப்பீடு செய்து கணக்குகளில் காட்டுவது வழக்கம். தேய்மானம் நேர்கோட்டு முறையில் கணிப்பிடப்படுவதுடன், கொள்வனவு செய்யும் வருடத்தில் முழுத்தேய்மானத்திற்கும், ஏற்பாடு செய்வதுடன், விற்பனை செய்யும் வருடத்தில் தேய்மானம் கணிப்பிடப்படுவதுமில்லை.

வரையறுக்கப்பட்ட ஆர்பிகோ கம்பனி தனது சொத்தினை வாடகை வருமானம் உழைக்கக் கூடிய குத்தகைக்கு விடத் தீர்மானித்தது.

இரண்டு கம்பனிகளதும் நிதியாண்டு 30 ஜூனில் முடிவடையும், உம்மிடம் வேண்டப்படுவது :

" ஒவ்வொரு கம்பனியினதும் சொத்துக்கள் 1939 – 1992 வரை எவ்வாறு கணக்குகளில் காட்டப்படும் என்பதைக் காட்டுக. " (ஆர்பிகோ கம்பனியின் வாடகை வருமானம் புறக்கணிக்கப்படும்.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரையறுக்கப்பட்ட ஆர்த்தி கம்பனி

### ஐந்தொகை

| | 1989: | 1990: | 1991: | 1992: |
|---|---|---|---|---|
| நிலம் கொள்விலை | 180,000 | 220 000 | 190,000 | — |
| கட்டிடம் ,, | 120,000 | 160,000 | 100,000 | — |
| | 300,000 | 380,000 | 290,000 | |
| திரட்டிய தேய்மானம் | 3,000[8] | | | |
| | 297,000 | 380,000 | 290,000 | — |
| சொத்து மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் | | 86,000[9] | | |

### இலாப நட்டக் கணக்கு

| | 1989: | 1990: | 1991: | 1992: |
|---|---|---|---|---|
| தேய்மானம் | 3,000 | 3,000 | 3,200[10] | |
| சொத்து மீள்மதிப்பீட்டு நட்டம் | | | 800[11] | |
| சொத்து விற்பனை இலாபம் | | | | 30,000[12] |

## வரையறுக்கப்பட்ட ஆர்பிகோ கம்பனி

### ஐந்தொகை

| | 1989: | 1990: | 1991: | 1992: |
|---|---|---|---|---|
| நிலம் கொள்விலை | 180,000 | 220,000 | 190,000 | — |
| கட்டிடம் ,, | 120,000 | 160,000 | 100,000 | — |
| | 300,000 | 380,000 | 290,000 | — |
| சொத்து மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் | | 80,000[13] | | |

### இலாப நட்டக் கணக்கு

| | 1989: | 1990: | 1991: | 1992: |
|---|---|---|---|---|
| சொத்து மீள்மதிப்பீட்டு நட்டம் | | | 10,000[14] | |
| சொத்து விற்பனை இலாபம் | | | | 30,000[15] |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்காட்டப்பட்ட உதாரணத்தின் கீழ் ஆர்த்தி கம்பனி 30 ஜூன் 1990இல் வெளிக் காட்டப்படவேண்டிய அம்சங்களை நோக்கின்:

(1)

| | நிலம்: | கட்டிடம்: | மொத்தம்: |
|---|---|---|---|
| 1.7.1989இல் மீதி | 180,000 | 120,000 | 300,000 |
| + சேர்ப்புக்கள் | — | — | — |
| | 180,000 | 120,000 | 300,000 |
| —விற்பனைகள் | — | — | — |
| 30 ஜூன் 1990இல் மீதி | 220,000 | 160,000 | 380,000 |

(2) தேய்மானம்:

| | | | |
|---|---|---|---|
| 1.7.1989இல் மீதி | — | 3,000 | 3,000 |
| இவ் வருட தேய்மானம் | — | 3,000 | 3,000 |
| | | 6,000 | 6,000 |

(3) இந் நிறுவனம் நிலம், கட்டிடத்தை எப்போதும் மீளமதிப்பீடு செய்தே கணக்குகளில் காட்டுகிறது.

(4) இந்நிதியாண்டில் தொழில் ரீதியாக தகமை பெற்ற மதிப்பீட்டாளரால் நிலம், கட்டிடம் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளில் பின்வருமாறு காட்டப்பட்டது.

| | |
|---|---|
| 30. ஜூன் 1990இல் மீள் மதிப்பீடு நிலம்: | 220,000 |
| கட்டிடம்: | 160,000 |
| | 380,000 |

(5) மீள்மதிப்பீட்டு மேலதிகம்:

| | | |
|---|---|---|
| 30 ஜூன் 1990இல் மீள்மதிப்பீட்டு பெறுமதி: | | 380,000 |
| சொத்து கொள்விலை: | 300,000 | |
| 30 ஜூன் 1990இல் திரட்டிய தேய்மானம் | (6,000) | 294,000 |
| ∴ மீள்மதிப். மேலதிகம்; | | 86,000 |

1 நன்மதிப்பு, ஆக்கவுரிமை, வியாபாரக்குறி போன்ற அருவச்சொத்துக்களும் கணக்குகளில் காட்டப்படும்போது நிலையான சொத்துக்களின் கீழேயே காட்டப்படுகின்றன.

2 இத்தகைய சொத்துக்கள் குத்தகை ஒப்பந்தத்தின் கீழ் காணப்படினும் அவையும் நிலையான சொத்துக்களாகவே கருதப்படும்.

3 இதனை இலங்கைக் கணக்கீட்டு நியமம் 8 விளக்குகிறது.

4 (6,000*5) — 25,000 = 5,000/-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5 இருப்பின் கிரயக்கணிப்பீட்டிலும், இருப்பை தற்போதைய உருவுக்கும், இடத்திற் திற்கும் கொண்டுவர நேரடியாக ஏற்படும் செலவுகள் மட்டுமே உள்ளடக்கப்படும்.

6 ஐந்தொகையில் காட்டப்படும் சொத்துக்கள் யாவும் கொள்வனவு கிரயத்துடன், மாற்றக்கிரயம், சொத்துக்களை தற்போதைய உருவுக்கும் இடத்திற்கும் கொண்டுவர ஏற்படும் கிரயம் உள்ளடக்கப்பட்ட வரலாற்றுக் கிரயத்திலேயே காட்டப்படுகின்றன.

7 நிறுவனத்தின் சாதாரண வியாபார நடவடிக்கைக்கு அப்பாற்பட்ட நடவடிக்கைகளினால் ஏற்படும் இலாபம் அல்லது நட்டம் அல்லது நட்டத்திற்கான ஏற்பாடு அசாதாரண விடயமாகும்.

8 நேர்கோட்டுமுறையில் தேய்மானமளிக்கப்படுகிறது. கொள்வனவு செய்யும் வருடத்தில் தேய்மானம் கணிப்பிடப்படும். பாவனைக்காலம் 40 வருடங்கள்.
∴ தேய்மானம் = 120,000/40 = 3,000.

9 30 ஜூன் 1990 இல் மீள மதிப்பிடப்படும்போது சொத்தின் தேறிய பெறுமதி; 300,000 — 6,000. = 294,000. இங்கு இரண்டு வருட தேய்மானமும் சாட்டுதல் செய்யப்பட்டுள்ளது.

∴ சொத்து மீள் மதிப்பீட்டு ஒதுக்கம் = 380,000 — (300,000 — 6,000) = 86,000. இது ஒதுக்கங்களின் கீழ் காட்டப்படல் வேண்டும்.

10 30 ஜூன் 1990 இல் சொத்தின் பாவனைக்காலம் 50 வருடங்களாக மீளாய்வு செய்யப்பட்டது. எனவே 1.7.1990 — 30.06.1991 வரை
தேய்மானம் — 160,000 / 50 = 3,200/—

11 290,000 — (380,000 — 3,2000) = (86,800) (மீள் மதிப்பீடு குறைவு)
மீள் மதிப்பீட்டு ஒதுக்கம் 1990 இல் = 86,000

∴ நட்டம் = 800

1991 இன் மீள் மதிப்பீட்டினால் தேறிய கீழ்க்கொணரும் மீதியில் ஏற்படும் குறைவு 1989 இன் மீள் மதிப்பீட்டு மேலதிகத்திற்கெதிராக ஈடு செய்யப்பட்டு நட்டம் 800/- ரூபாவாகக் குறைக்கப்படுகின்றது.

12 (320,000 — 290,000) = 30,000

13 380,000 — 300,000 = 80,000

14 290,000 — 380,000 =(90,000) (மீள் மதிப்பீட்டு குறைவு)
1990 இன் மீள் மதிப். ஒதுக்கம் = 80,000

மீள் மதிப்பீட்டு நட்டம் = 10,000

இவ் வருடத்தைய குறைவு முன்னைய வருட மேலதிகத்திற்கெதிராக ஈடு செய்யப்பட்டு நட்டம் 10,000/- ரூபாவாகக் குறைக்கப்படுகிறது.

15 320.000 — 290.000 = 30,000



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாடகைக் கொள்வனவு

வெ. செல்வ கௌரி
ஆண்டு - 13 'C'
வர்த்தகப்பிரிவு

வியாபார அமைப்புகளில் மேற்கொள்ளப்படும் பல்வேறு வகையான வியாபார விற்பனை முறைகளில் வாடகைக் கொள்வனவு முறையும் ஒன்றாகும். பொருளொன்று கடனிற்கு விற்பனை செய்யப்பட்டு அதற்குரிய பணம் தவணைக்குத் தவணை பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு செலுத்தப்பட்டு வருமானால் அது வாடகைக் கொள்வனவு எனப்படும். இது நிதிக்கம்பனிகளினால் நடைமுறைப்படுத்தப்படும் ஒரு கடன் விற்பனை ஆகும். இதன் பிரகாரம் பொருள் ஒன்றை கொள்வனவு செய்பவர் அதன் பெறுமதி முழுவதையும் கொள்வனவு செய்யும் சந்தர்ப்பத்தில் செலுத்தாது பிறிதொரு சந்தர்ப்பத்தில் செலுத்துவாராயின் கொள்வனவாளருக்கு கடன் கொள்வனவாகவும் விற்பனையாளருக்கு கடன் விற்பனையாகவும் கொள்ளப்படும்.

கடனுக்கு பொருட்களை கொள்வனவு செய்தவர் அதன் பெறுமதியை ஒரே முறையிலும் செலுத்தலாம். அல்லது பகுதி பகுதியாகவும் செலுத்தலாம். கொடுப்பனவுகள் பல தடவைகளில் நிகழுமாயின் அது கந்தாய முறையிலமைந்த கொடுப்பனவு என அழைக்கப்படும். கந்தாய முறையிலமைந்த கொடுப்பனவில் பொருளின் மீது வாங்கியவருக்கு உரிமை அடிப்படையாவதைப் பொறுத்து இரண்டு வகையாக வகுக்கலாம்.

1) வாடகைக் கொள்வனவு

2) தவணைக் கட்டணக் கொள்வனவு.

கொள்வனவு செய்யப்படும் பொருளின் பெறுமதி முழுவதையும் உடனடியாக செலுத்தி அக்கொள்வனவை மேற்கொள்ள முடியாதிருக்கும். பாவனையாளருக்கு வாடகைக் கொள்வனவு முறையிலான விற்பனை அனுகூலமாயிருக்கும் இதன்படி கொள்வனவு செய்யப்படும் பொருளின் பெறுமதியில் ஒரு பகுதி கொள்வனவுத் தினத்தன்று வைப்புப்பணமாகச் செலுத்தப்பட்டு மீதியானது இணங்கிக் கொள்ளப்பட்ட தவணைகளில் வட்டி உள்ளிட்ட தவணைப் பணமாகச்செலுத்தி முடிக்கப்பட வேண்டும். இதிலுள்ள சிறப்பம்சம் என்னவெனில் கொள்வனவாளன் இறுதி தவணைப் பணத்தைச் செலுத்தும்வரை சொத்தின் உரிமை விற்பனையாளருக்கே இருக்கும். கொள்வனவாளன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதி தவணை பணத்தை செலுத்தி முடிந்தவுடன் தான் அச்சொத்து கொள்வனவாளனுக்கு மாற்றப்படும். அதுவரை அச்சொத்து கொள்வனவாளனுக்கு வாடகைக்கு கொடுத்ததுபோல கருதப்படும். கொள்வனவாளன் கட்டணங்களைச் செலுத்த தவறுவாராயின் அச்சொத்து விற்பனையாளனால் பறிமுதல் செய்யப்படும். இம்முறையில் விற்பனை செய்யப்படும் சொத்துக்கள் நீண்டகால பாவனையுடையதும் அதிக பணச் செலவைக் கொண்டதுமாகக் காணப்படுகின்றன. உ+மாக தொலைக்காட்சி, தளபாடம் இலங்கையில் வாடகைக் கொள்வனவு வியாபாரம் அதிகளவில் நடைபெறுவதனால் வாடகைக் கொள்வனவு முறையில் சொத்துக்களை கொள்வனவு செய்பவர் நலன் கருதி 1982 ஆம் ஆண்டு 29 ஆம் இலக்க நுகர்வோம் கடன் சட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. இச்சட்டத்தை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு உள்ளூர் வியாபார திணைக்களத்தைச் சேர்ந்தது.

தவணைக் கட்டண கொள்வனவு முறையும் நிதிக் கம்பனிகளினால் பின்பற்றப்படும் ஒரு கடன் விற்பனை முறையாகும். இதன் பிரகாரம் கொள்வனவாளர் அதன் விலையில் ஒரு பகுதியை உடனடியாகச் செலுத்தி மிகுதியையும் வட்டியையும் பல சம தவணைக்கட்டணங்களில் கூட்டுவர். வாடகைக் கொள்வனவைப் போலல்லாது முதல் கட்டணம் செலுத்தியவுடன் பொருளின் உரிமை கைமாற்றிக் கொடுக்கப்படும். இதனால் எப்போதாயினும் கட்டணம் செலுத்தத் தவறின் முழுப் பொருளையும் பறித்தெடுக்கும் அதிகாரம் விற்ற நிறுவனத்திற்கு இருக்காது ஆதலால் செலுத்திய கட்டணங்களுக்கு அளவான பொருட்களை அவர்களிடம் விட்டுவிட்டு மிகுதிப் பொருளையே பறித்துக்கொள்ள வேண்டி வரும். இது பிரிக்கப்பட முடியாத பொருட்களைப் பொறுத்தவரை சிரமங்களைத் தருவதனால் நிதிக் கம்பனிகள் அனேகம் தவணைக் கொள்வனவு முறைமையே விரும்புகின்றன.

இவ்வாடகைக் கொள்வனவு முறையானது இரண்டு முறைகளில் செயற்படுத்தப்படுகின்றது.

i) உற்பத்தி செய்த நிறுவனமே தனது உற்பத்திகளை வாடகைக் கொள்வனவு அடிப்படையில் விற்பனை செய்தல்.

உதாரணம்:- றிச்சார்ட் பீறிஸ் அன்ட் கம்பனி.

ii) உற்பத்தி செய்த நிறுவனம் தனது உற்பத்தியை இன்னொரு நிதிக் கம்பனி மூலம் விற்றல்.

உதாரணம்:- டிறான்ஸ் லங்கா இன்வெஸ்ட்மன் லிமிட்டெட் என்ற நிதிக் கம்பனியூடாக றிச்சார்ட் பீறிஸ் அன்ட் கம்பனிக்கு விற்றல்.

மேற்கூறிய இரண்டு முறைகளிலும் நிதிக் கம்பனி மூலமான விற்பனையே பிரபலமானதாகும். இலங்கையிலே நிதிக் கம்பனிகளின் வளர்ச்சி வாடகைக் கொள்வனவு வியாபாரத்துடன் குறிப்பாக மோட்டார் வாகனங்களுடன் தொடர்புள்ளதாகவே இருந்து வந்தது. கார், பஸ், லொறி போன்ற வாகனங்களை கொள்வனவு செய்வதற்கு கடன் பெறும் பொருட்டு வங்கிகளிடம் பிணையாக சமர்ப்பிப்பதற்கு தம்வசம் எதுவுமில்லாத பலர் வாகனங்களின் பெறுமதியில் 50-75 சத வீதம் வரையில் ''நிதிப்படுத்தி'' வாகனங்களைப் பெற்றுக் கொண்டனர். இச்சந்தர்ப்பத்தில் குறித்த நிதிக் கம்பனி வாகனத்தின் உரிமையாளராக இருப்பதுடன் கடன் வாங்கியவர் அதனை வாடகைக்கு அமர்த்தியவராக இருக்கிறார்.

நிதிக் கம்பனிகள் வாடகைக் கொள்வனவு வியாபாரத்தில் ஈடுபடும்போது அவை இரண்டு சட்டங்களுக்கு கட்டுப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

i) 1982 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க நுகர்வோர் கடன் சட்டம்.

ii) 1988 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க நிதிக் கம்பனிச் சட்டம்.

நிதிக் கம்பனிகள் அல்லாத நிறுவனங்கள் வாடகைக் கொள்வனவு வியாபாரத்தில் ஈடுபடுமாயின் அவை நுகர்வோர் கடன் சட்டத்தினால் கட்டுப்படுத்தப்படுகின்றன.

**நுகர்வோர் கடன் சட்டம் அளிக்கும் பாதுகாப்பு அம்சங்களாவன:-**

i) பொருட்கள் விற்பனை செய்யப்படுவதற்கு முன்னர் அவற்றின் காசுவிலை, நியதிச்சட்டச் செலவுகள், வாடகைக் கொள்வனவு விற்பனை விலை, செலுத்தப்பட வேண்டிய தவணைக் கட்டணம் ஆகிய விபரங்கள் எழுத்து மூலமாக கொள்வனவாளனுக்கு வழங்கப்பட வேண்டும்.

ii) வாடகைக் கொள்வனவு ஒப்பந்தம் செய்யப்பட்டு பதினான்கு நாட்களுக்குள் ஒப்பந்தத்தின் பிரதி ஒன்று கொள்வனவாளனுக்கு வழங்கப்பட வேண்டும்.

iii) கொள்வனவாளன் வாடகைக் கொள்வனவு விலையில் 75% வரை செலுத்தியிருப்பின் விற்பனையாளன் பொருளைப் பறிமுதல் செய்ய இயலாது.

iv) கொள்வனவாளன் தான் விரும்பிய எந்த நேரத்திலும் செலுத்த வேண்டிய மிகுதித் தொகையைச்செலுத்தி ஒப்பந்தத்தை முடிவுக்கு கொண்டுவர அனுமதி உண்டு. அவ்வாறு செய்யும் போது நிதிச்செலவில் 2/3 பங்கு கழிவாக அனுமதிக்கப்பட வேண்டும்.

v) விற்பனையானது சம்மதத்துடன் இன்னும் ஒருவருக்கு கொள்வனவாளன் அச் சொத்தினை வாடகைக் கொள்வனவு முறையில் விற்பனை செய்யலாம்.

**வாடகைக் கொள்வனவு வியாபாரத்தின் முக்கிய அம்சங்கள்:-**

i) சொத்துக்களை விற்பனை செய்யும் போது முழுக் கட்டுப்பணமும் செலுத்தி முடிக்கும்வரை சொத்து கொள்வனவாளருக்கு உரிமை மாற்றி கொடுக்கப்படமாட்டாது.

ii) வாடகைக் கொள்வனவு முறையின் கீழ் சொத்தினை விற்பனை செய்யும் போது வாங்குபவர் பொருளின் உடன் விலையாலும் கூடுதலாகச் செலுத்தும் பணம், வட்டியாக கணிக்கப்படுகிறது.

iii) கட்டுப்பணம் செலுத்தாத சந்தர்ப்பத்தில் சொத்து பறிமுதல் செய்யப்படும்.

iv) சொத்தினை மீளப்பெற விரும்பின் கட்டுப்பண நிலுவை, அதற்கான வட்டி, பறிமுதல் செலவு ஆகியவற்றைச் செலுத்திய பின்னர் பெற்றுக் கொள்ளலாம்.

v) சொத்தினை மீளப்பெற விரும்பாத சந்தர்ப்பத்தில் சொத்து இதுவரையில் பயன்படுத்தியதற்கான வாடகையாக செலுத்திய பணம் கருதப்படும்.

vi) பொருள் விற்பனை செய்யப்படும் போது குறிப்பிட்ட தொகைப் பணம் முற்பணமாகப் பெறப்படும்.

vii) நீண்டகால பாவனையிலுள்ள பொருட்கள் மட்டுமே இங்கு விற்கப்படும்.

viii) இங்கு தெரியாத நபர்களுக்கும் பொருள் விற்கப்படுவதால் உத்தரவாதம் அளிப்பதற்கு ஒருவரோ or பலரோ தேவைப்படும்.

**வாடகைக் கொள்வனவின்போது கவனிக்க வேண்டிய அம்சங்கள்:-**

i) கொள்வனவாளருடைய கொள்வனவு வலு

ii) நிறுவனத்திற்கு ஏற்படும் தாக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

iii) ஏற்படும் செலவும் வட்டியும்
iv) மாதாந்தக் கட்டண அளவு
v) சொத்திற்கு எதிர்காலத்தில் ஏற்படும் தாக்கம்
vi) காசு விலையும் வாடகைக் கொள்வனவு விலையும்.

**காசுவிலையும் வாடகைக் கொள்வனவு விலையும்:-**

சொத்து ஒன்றினைக் கொள்வனவு செய்யும் போது அதற்கான பெறுமதியினை பணமாகச் செலுத்தி கொள்வனவு செய்யப்படின் அதனையே காசுவிலை என்பர்.

சொத்தின் பொறுமதியில் ஒரு பகுதியினைப் பணமாகச் செலுத்தி மிகுதி தொகையினையும் அதற்கான வட்டியினையும் சேர்த்து குறிக்கப்படுகின்ற விலையினையே வாடகைக் கொள்வனவு விலை என்பர். காசு விலையினை விட வாடகைக் கொள்வனவு விலை உயர்வானதாக காணப்படும்.

வாடகைக் கொள்வனவு வியாபார முறையில் இருபகுதியினர் ஈடுபடுகின்றனர்.

i) சொத்து கொள்வனவாளர்
ii) சொத்து விற்பனையாளர்

**கொள்வனவாளனது ஏட்டில் வாடகைக் கொள்வனவு தொடர்பான கணக்குப் பதிவுகள்:-**

கொள்வனவாளனது ஏட்டில் வாடகை கொள்வனவு முறையில் சொத்து ஒன்று கொள்வனவு செய்யப்படும் போது கணக்கு வைப்புத் தொடர்பாகபொதுவாக 2 முறைகள் பின்பற்றப்படுகின்றன.

**1 வது முறை:-**

இதில் பின்வரும் கணக்குகள் செய்யப்பட வேண்டும்.

i) வாடகை கொள்வனவு கடன் கொடுத்தோர் கணக்கு
ii) நிலையான சொத்துக் கணக்கு
iii) கொடுத்த வட்டிக் கணக்கு

**இம்முறை தொடர்பான நாட்குறிப்பு பதிவுகள்.**

i) நிலையான சொத்துக்களை வாடகை கொள்வனவு முறையில் கொள்வனவு செய்யும் போது.

குறித்த சொத்துக்கணக்கு வரவு
வாடகைக் கொள்வனவுக் கடன் கொடுத்தோர் கணக்கு செலவு
(கொள்விலையில் பதியப்படும்)

ii) ஆரம்ப வைப்புப் பணமும் தவணைக் கட்டணமும் செலுத்தும் போது,

வாடகைக் கொள்வனவு கடன் கொடுத்தோர் கணக்கு வரவு
காசு or வங்கிக் கணக்கு செலவு

iii) தவணைக் கொடுப்பனவிற்கான வட்டி கணிப்பிடும் போது,

வாடகைக் கொள்வனவு வட்டிக் கணக்கு வரவு
வாடகைக் கொள்வனவு கடன் கொடுத்தோர் கணக்கு செலவு

ஐந்தொகையில் சொத்தைக் காட்டும் போது சொத்திலிருந்து வாடகைக் கொள்வனவு கடன் கொடுத்தோர் கணக்கு மீதியைக் கழித்துக் காட்ட வேண்டும். இதனால் சொத்தின் பேரில் செலுத்தப்பட்ட தொகைக்கு மட்டுமே கொள்வனவாளன் உரிமை என்பதை வெளிப்படுத்த முடிகின்றது. நிதியாண்டு முடிவுகளில் வாடகைக் கொள்வனவு வட்டிக்கணக்கு மீதி இலாப நட்ட கணக்கிற்கு மாற்றப்படும்.

**உதாரணம்:-**

1.1.87ல் வரையறுத்த சுமணா கம்பனி வாடகைக் கொள்வனவு உடன்படிக்கையில் வரையறுத்த ராகவன் கம்பனியிடமிருந்து தொலைக்காட்சிப்பெட்டியை கொள்வனவு செய்தது. வாடகைக் கொள்வனவு உடன்படிக்கையின் படி 250/- உடன் கொடுப்பனவும் 1.1.87 தொடக்கம் முறைக்கு 300/- ஆக நான்கு அரையாண்டு தவணைக் கட்டணமும் செலுத்தப்படல் வேண்டும்;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொலைக்காட்சிப் பெட்டியின் கைக்காசு விலை 1200/95 சதம் வட்டியானது ஆண்டுக்கு 20% படி அரையாண்டுதோறும் கணித்தல் வேண்டும். இதன் பிரகாரம் சுமணா கம்பனியின் ஏட்டில் பின்வருவன வற்றை தயாரிக்குக.

1) வரையறுத்த ராகவன் கம்பனி கணக்கு
2) வாடகை கொள்வனவு வட்டிக் கணக்கு
3) தொலைக்காட்சிப் பெட்டிக் கணக்கு

**வரையறுத்த ராகவன் கம்பனி கணக்கு**

| திகதி | விபரம் | தொகை | திகதி | விபரம் | தொகை |
|---|---|---|---|---|---|
| 1.1.87 | காசு – (முற்பணம்) | 250 | 1.1.87 | தொலைக் காட்சிப் பெட்டி கணக்கு | 1200.95 |
| 1.7.87 | காசு | 300 | 1.7.87 | வட்டி | 95.10 |
| 31.12.87 | காசு | 300 | 31.12.87 | வட்டி | 74.60 |
| | மீ/கீ/செ | 520.65 | | | |
| | | 1370.65 | | | 1370.65 |
| 1/1/88 | காசு | 300 | 1/1/88 | மீ/கீ/வ | 520.65 |
| 1/7/88 | காசு | 300 | 1/7/88 | வட்டி | 52.07 |
| | | | 31/12/88 | வட்டி | 27.28 |
| | | 600 | | | 600 |

**வட்டிக் கணக்கு**

| | | | |
|---|---|---|---|
| 1/7/87 கடன் கொடுநர் கணக்கு | 95.10 | இலாப நட்டக் கணக்கு | 169.70 |
| 31/12/87 கடன் கொடுநர் கணக்கு | 74.60 | | |
| | 169.70 | | 169.70 |
| 30/6/88 கடன் கொடுநர் கணக்கு | 52.07 | இலாப நட்ட கணக்கு | 79.35 |
| 31/12/88 கடன் கொடுநர் கணக்கு | 27.28 | | |
| | 79.35 | | 79.35 |

**தொலைக்காட்சிப் பெட்டிக் கணக்கு**

| | | | |
|---|---|---|---|
| 1/1/87 ராகவன் கம்பனி | 1200.95 | 31/12/87 மீ/கீ/வ | 1200.95 |
| | 1200.95 | | 1200.95 |
| 1/1/88 மீ/கீ/வ | 1200.95 | 31/12/88 மீ/கீ/வ | 1200.95 |
| | 1200.95 | | 1200.95 |
| 1/1/89 மீ/கீ/வ | 1200.95 | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2வது முறை:-**

இதில் பின்வரும் கணக்குகள் செய்ய வேண்டும்.

i) நிலையான சொத்து கணக்கு
ii) வட்டி தொங்கல் கணக்கு
iii) வாடகை கொள்வனவு கடன் கொடுநர் கணக்கு
iv) கொடுத்த வட்டி கணக்கு

இம்முறை தொடர்பான நாட்குறிப்புப் பதிவுகள்

i) நிலையான சொத்தை வாடகைக் கொள்வனவு அடிப்படையில் கொள்வனவு செய்யும் போது,
குறித்த சொத்துக் கணக்கு வரவு (காசுவிலை)
வட்டிதொங்கல் கணக்கு வரவு (மொத்த வட்டி)
வாடகை கொள்வனவு கடன் கொடுநர் க/கு செலவு (மொ. தொகை)

ii) ஆரம்ப கட்டுப்பணம் கட்டும்போது,
வாடகை கொள்வனவு கடன் கொடுநர் கணக்கு வரவு
காசு or வங்கி கணக்கு செலவு

ii) தவணைகுறித்த காலப்பகுதியில் செலுத்தப்பட வேண்டிய வட்டி தொகைக்கு,
கொடுத்த வட்டிக் க/கு வரவு
வட்டி தொங்கல் க/கு செலவு

சொத்தை ஐந்தொகையில் காட்டும் போது வாடகைக் கொள்வனவு கடன் கொடுநர் கணக்கு மீதியிலிருந்து வட்டித் தொங்கல் கணக்கு மீதியை கழித்து வரும் தொகையை சொத்திலிருந்து கழித்துக் காட்டுதல் வேண்டும்.

**உதாரணம்:-**

*1.1.91* ல் மாலதி என்பவள் கௌரி என்பவளிடமிருந்து *30,000/-* வாடகை கொள்வனவு விற்பனை விலையில் இயந்திரம் ஒன்றைக் கொள்வனவு செய்தார். அதன் காசுவிலை *10,000/-* ஆகும். ஆரம்ப கட்டுப்பணமாக*10,000/-*ம் மிகுதி தொகை $\frac{1}{2}$ ஆண்டிற்கு ஒருமுறை 4 தவணைகளில் தவணைக்கு *10,000/-* வீதம் கட்டி முடிக்கப்படும். வட்டி தொடர்பான விபரம் கீழ் வருமாறு.

i ம் தவணைக்கு வட்டி *4000*
ii ம் தவணைக்கு வட்டி *3000*
iii ம் தவணைக்கு வட்டி *2000*
iv ம் தவணைக்கு வட்டி *1000*

**தயாரிக்குக:**

1) கௌரி கம்பனி கணக்கு
2) வட்டி தொங்கல் கணக்கு
3) கொடுத்த வட்டி கணக்கு
4) இயந்திர கணக்கு

**கௌரி கம்பனி கணக்கு**

| | | | |
|---|---|---|---|
| 1.1.91 காசு | 10,000 | இயந்திரம் | 40,000 |
| 1.7.91 காசு | 10,000 | வட்டி தொங்கல் | 10,000 |
| 31.12.91 காசு | 10,000 | | |
| மீ/கீ/செ | 20,000 | | |
| | 50,000 | | 50,000 |
| 1/1/92 காசு | 10,000 | 1/1/92 மீ/கீ/வ | 20,000 |
| 1/7/92 காசு | 10,000 | | |
| | 20,000 | | 20,000 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இயந்திர கணக்கு

| | | | | |
|---|---|---|---|---|
| 1.1.91 | கௌரி கம்பனி | 40,000 | மீ/கீ/செ | 40,000 |
| | | 40,000 | | 40,000 |
| 1.1.92 | மீ/கீ/வ | 40,000 | மீ/கீ/செ | 40,000 |
| 1.1.93 | மீ/கீ/வ | 40,000 | | 40,000 |
| | | 40,000 | | |

### கொடுத்த வட்டி கணக்கு

| | | | |
|---|---|---|---|
| வட்டி தொங்கல் | 4,000 | இலாபநட்ட கணக்கு | 7,000 |
| வட்டி தொங்கல் | 3,000 | | |
| | 7,000 | | 7,000 |
| வட்டி தொங்கல் | 2,000 | இலாபநட்டக் கணக்கு | 3,000 |
| வட்டி தொங்கல் | 1,000 | | |
| | 3,000 | | 3,000 |

### வட்டி தொங்கல் கணக்கு

| | | | | |
|---|---|---|---|---|
| கௌரி கம்பனி | 10,000 | 1.1.91 | வட்டி | 4,000 |
| | | 1.7.91 | வட்டி | 3,000 |
| | | | மீ/கீ/செ | 3,000 |
| | 10,000 | | | 10,000 |
| மீ/கீ/வ | 3,000 | 1.1.92 | வட்டி | 2,000 |
| | | 1.7.92 | வட்டி | 1,000 |
| | 3,000 | | | 3,000 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விற்பனையாளன் ஏட்டில் வாடகைக் கொள்வனவு தொடர்பான கணக்குப் பதிவுகள்:**

வாடகைக் கொள்வனவு முறையில் சொத்தினை விற்பனை செய்யும் போது விற்பனையாளன் ஏட்டில் பின்வரும் கணக்கு பதிவுகள் இடம்பெறுகின்றன.

i) சொத்துக்களை வாடகைக் கொள்வனவு முறையில் விற்பனை செய்யும் போது,

வாடகைக் கொ/வு கடன்பட்டோர் கணக்கு வரவு
வாடகைக் கொ/வு வியாபார கணக்கு செலவு

ii) சொத்தின் பெறுமதியில் ஒரு பகுதியை தவணைக் கட்டணமாக பெறும் போது,

காசுக் கணக்கு வரவு
வாடகைக் கொ/வு கடன் பட்டோர் கணக்கு செலவு

iii) வட்டி கணிப்பிடும் போது,

வாடகைக் கொ/வு கடன்பட்டோர் கணக்கு வரவு
வாடகைக் கொ/வு வட்டி கணக்கு செலவு

நிதியாண்டு முடிவில் வாடகைக் கொள்வனவு வட்டிக் கணக்கானது பெற்ற வட்டியாக இலாபநட்ட கணக்கிற்கு மாற்றப்படும். கடன்பட்டோர் கணக்கு மீதியானது அவரால் தரப்படவேண்டிய மீதியைக் குறித்து நிற்கும் வாடகைக் கொள்வனவு வியாபார கணக்கானது பொது வியாபார கணக்கிற்கு மாற்றப் படும்.

**உதாரணம்:-**

வரையறுத்த ரமணன் கம்பனி வரையறுத்த சீரா கம்பனிக்கு 1/1/90 மோட்டார் ஒன்றினை வாடகைக் கொள்வனவு முறையில் விற்பனை செய்தது. வாடகைக் கொள்வனவு ஒப்பந்தத்தில் பின்வரும் விபரங்கள் காணப்படுகின்றன.

1) 1.1.90ல் சீரா கம்பனிக்கு 20,000/- வினை முதல் வைப்புப் பணமாக செலுத்த வேண்டும்.

2) மீதி தொகை 5 சம ஆண்டு தவணைகளில் செலுத்தப்படல் வேண்டும்.

3) ஒவ்வோர் முறையும் செலுத்த வேண்டிய தவணைப்பணம் 30,000/-

4) தவணைப்பணம் செலுத்த வேண்டிய திகதி 31 டிசம்பர்.

5) மோட்டாரின் உடன் காசு விலை 150,000

6) ஆண்டிற்கு 5% வட்டி.

மேற்கூறிய நடவடிக்கைகளைக் கொண்டு வரையறுத்த ரமணன் கம்பனியின் ஏடுகளில் பின்வரும் கணக்குகளைத் தயாரிக்க.

1) வாடகைக் கொ/வு விற்பனை க/கு.

2) சீரா கம்பனி க/கு.

3) வட்டி க/கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வரையறுத்த சிரா கம்பனி கணக்கு

| திகதி | விபரம் | தொகை | திகதி | விபரம் | தொகை |
|---|---|---|---|---|---|
| 1.1.88 | விற்பனை | 150,000 | 1.1.88 | வங்கி | 20,000 |
| 31.12.88 | வட்டி | 6,500 | 31.12.88 | வங்கி | 30,000 |
| | | | | மீ/கீ/செ | 106,500 |
| | | 156,500 | | | 156,500 |
| 1.1.89 | மீ/கீ/வ | 106,500 | 31.12.89 | வங்கி | 30,000 |
| 31.12.89 | வட்டி | 5,325 | | மீ/கீ/செ | 81,825 |
| | | 111,825 | | | 111,825 |
| 1.1.90 | மீ/கீ/வ | 81,825 | 31.12.90 | வங்கி | 30,000 |
| 31.12.90 | வட்டி | 4,091 | | மீ/கீ/செ | 55,916 |
| | | 85,916 | | | 85,916 |
| 1.1.91 | மீ/கீ/வ | 55,916 | 31.12.91 | வங்கி | 30,000 |
| 31.12.91 | வட்டி | 2,795 | | மீ/கீ/செ | 28,711 |
| | | 58,711 | | | 58,711 |
| 1.1.92 | மீ/கீ/வ | 28,711 | 31.12.92 | வங்கி | 30,000 |
| 31.12.92 | வட்டி | 1,289 | | | |
| | | 30,000 | | | 30,000 |

### வட்டி கணக்கு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 31.12.88 | இலாபநட்ட கணக்கு | 6,500 | 31.12.88 | சிரா கம்பனி | 6,500 |
| | | 6,500 | | | 6,500 |
| 31.12.89 | இலாபநட்ட கணக்கு | 5,325 | 31.12.89 | சிரா கம்பனி | 5,325 |
| | | 5,325 | | | 5,325 |
| 31.12.90 | இலாபநட்ட கணக்கு | 4,091 | 31.12.90 | சிரா கம்பனி | 4,091 |
| | | 4,091 | | | 4,091 |
| 31.12.91 | இலாபநட்ட கணக்கு | 2,795 | 31.12.91 | சிரா கம்பனி | 2,795 |
| | | 2,795 | | | 2,795 |
| 31.12.92 | இலாபநட்ட கணக்கு | 1,289 | 31.12.92 | சிரா கம்பனி | 1,289 |
| | | 1,289 | | | 1,289 |

### வாடகை கொள்வனவு விற்பனை கணக்கு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 31.12.88 | வியாபார கணக்கு | 150,000 | 1.1.88 | கொள்வனவு | 150,000 |
| | | 150,000 | | | 150,000 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாடகைக் கொள்வனவு விற்பனையில் இருப்புக்கணித்தல்

வாடகைக் கொள்வனவு விற்பனையின் போது கட்டணங்கள் பல சம தவணைகளாக கட்டுவதனால் ஒரு நிதியாண்டின் முடிவில் லாபநட்டத்தை கணிப்பிடுவதற்காக கணக்கைத் தயாரிக்கும் போது அந் நிதியாண்டில் கிடைத்த கட்டணங்களையே கணக்கில் சேர்த்துக் கொள்கின்றோம். ஆனாலும் எமக்கு கிடைக்க வேண்டிய பணம் இனிவரும் காலங்களிலேயே கிடைக்கலாம். எனவே கிடைக்க வேண்டிய தவணைக் கட்டணத்தை அதன் கொள்விலையில் கணித்தல் வேண்டும்.

**உதாரணம்:-**

மலர் என்பவர் வாடகைக் கொள்வனவு அடிப்படையில் பொருளை விற்பனை செய்வதற்கு 1.1.91ல் வியாபாரம் ஒன்றை ஆரம்பித்தார் இது தொடர்பான வியாபார விடயங்கள் அவரிடமிருந்து கிடைக்கப்பெற்றன.

1) நிதியாண்டு காலத்தில் ஒவ்வொன்றும் 4000/- படி 60 இயந்திரம் கொள்வனவு செய்தார்.

2) இயந்திரம் ஒன்றின் வாடகைக் கொள்வனவு விற்பனை விலை 6000/-

3) வாடகைக் கொள்வனவு முறையில் இயந்திரத்தை விற்பனை செய்வதற்கான நிபந்தனை

   i) வைப்புப் பணம் விற்பனையின் போது செலுத்தப்படும்.

   ii) தவணைக்கட்டணம் விற்பனையைத் தொடரும் 1ம் காலாண்டின் முடிவின் ஆரம்பத்தில் செலுத்தப்படும்.

   iii) இயந்திரத்தின் ஆரம்ப கட்டுப்பணம் 1000/- மிகுதி 4 சம தவணைகளில் செலுத்தல் வேண்டும்.

   iv) ஆண்டிற்கான தொழிற்பாட்டுச் செலவு 5000

4) இந்நிதியாண்டின் விற்பனை விபரம்:

| | |
|---|---|
| 1/ஜனவரி | 5 பொறி |
| 1/ஏப்ரல் | 10 பொறி |
| 1/யூன் | 10 பொறி |
| 1/செப்ரெம்பர் | 20 பொறி |
| 1/ஒக்டோபர் | 5 பொறி |

**தயாரிக்க:-**

1) வாடகை கொள்வனவு கடன்பட்டோர் கணக்கு

2) வாடகை கொள்வனவு விற்பனை கணக்கு

3) வியாபார இலாபநட்ட கணக்கு

**செய்முறை:-**

| திகதி | வி/னை செய்த பொறி | வைப்புப் பணம் | செலுத்திய தவணை | செலுத்த வேண்டிய தவணை | கிடைத்த தவணைக் கட்டணம் | கிடைக்க வேண்டிய தவணைக் கட்டணம் |
|---|---|---|---|---|---|---|
| ஜனவரி 1 | 5 | 5,000 | 3 | 1 | 18,750 | 6,250 |
| ஏப்ரல் 1 | 10 | 10,000 | 2 | 2 | 25,000 | 25,000 |
| யூன் 1 | 10 | 10,000 | 2 | 2 | 25,000 | 25,000 |
| செப்ரெம்பர் 1 | 20 | 20,000 | 1 | 3 | 25,000 | 75,000 |
| ஒக்டோபர் 1 | 5 | 5,000 | — | 4 | — | 25,000 |
| | 50 | 50,000 | — | — | 93,750 | 156,250 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| வாடகை கொள்வனவு கடன்பட்டோர் கணக்கு | | | |
|---|---|---|---|
| வி/னை | 300,000 | காசு | 50,000 |
| | | காசு | 93,750 |
| | | மீ/கீ/செ | 156,250 |
| | 300,000 | | 300,000 |
| மீ/கீ/வ | 156,250 | | |

| வாடகை கொள்வனவு விற்பனை கணக்கு | | | |
|---|---|---|---|
| வியா: க/கு | 143,750 | க/பட் | 300,000 |
| மீ/கீ/செ | 156,250 | | |
| | 300,000 | | 300,000 |
| | | மீ/கீ/வ | 156,250 |

பொது வியாபார இலாபநட்ட கணக்கு

| | | | |
|---|---|---|---|
| கொள்வனவு | 240,000 | விற்பனை | 143,750 |
| (—) இறுதி இருப்பு | 40,000 | கிடைக்க வேண்டிய தவணைக் கட்டண இருப்பு | 104,166 |
| | 200,000 | | |
| இலாபம் மீ/கீ/செ | 47,916 | | |
| | 247,916 | | 247,916 |
| தொழிற்பாட்டு செலவு | 5,000 | இலாபம் மீ/கீ/வ | 47,916 |
| தேறிய லாபம் மீ/கீ/செ | 42,916 | | |
| | 47,616 | | 47,916 |
| | | தேறியலாபம் மீ/கீ/வ | 42,916 |

கிடைக்க வேண்டிய தவணைக்கட்டண

$$\text{இருப்புக் கணித்தல்} = \frac{\text{கொள்விலை}}{\text{விற்பனை}} \times \text{கிடைக்க வேண்டிய தவணைக் கட்டணம்}$$

$$= \frac{200,000}{300,000} \times 156,250$$

$$= 104,166$$

## வாடகைக் கொள்வனவு விற்பனையில் தேறா இலாப ஏற்பாட்டு முறை

இம் முறையில் நாட்குறிப்பு பதிவுகள் வருமாறு:-

1) வாடகைக் கொள்வனவு முறையில் பொருட்கள் விற்பனை செய்யப்படும் போது விற்பனையின் மொத்த தொகைக்கு,
   வாடகைக் கொ/வு கடன்பட்டோர் க/கு வரவு
   வாடகைக் கொ/வு விற்பனை க/கு செலவு

2) கடன் படுநரிடமிருந்து தவணைக்கட்டணம் வைப்புபணம் பெற்றுக் கொள்ளப்படும் போது,
   காசு or வங்கி கணக்கு வரவு
   வாடகைக் கொ/வு கடன்பட்டோர் கணக்கு செலவு

3) தேறா இலாப ஏற்பாட்டு முறையின் பிரகாரம் விற்பனை முழுவதும் வாடகைக் கொள்வனவு வியாபாரக் கணக்கிற்கு மாற்றப்படும்.
   வாடகை கொ/வு விற்பனை க/கு வரவு
   வாடகை கொ/வு வியாபார க/கு செலவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4) வாடகைக் கொள்வனவு முறையில் விற்பனை செய்யப்பட்ட பொருளின் கொள்விலைக்கு,

வாடகைக் கொள்வனவு வியாபார கணக்கு வரவு

பொது வியாபார க/கு செலவு

5) நிதி ஆண்டு முடிவில் வாடகைக் கொள்வனவு கடன்பட்டோரிடமிருந்து வரவேண்டிய தொகையில் அடங்கியுள்ள தேறா லாபத்தை கணிப்பிட்டு பின்வருமாறு பதிவு செய்தல் வேண்டும்.

வாடகைக் கொ/வு வியாபார கணக்கு வரவு

தேறா இலாப ஏற்பாட்டு கணக்கு செலவு

உதாரணம்:-

பாஸ்கர் என்பவர் 88 ஏப்ரல் 1ம் திகதியன்று ஒரு சில்லறை வியாபாரியாக வியாபாரம் ஒன்றைத் தொடங்கினார். அவர் தையல் இயந்திரத்தை வாடகைக் கொள்வனவு அடிப்படையில் விற்பனை செய்து வருகிறார். 89.03.31ல் முடிவுற்ற ஆண்டிற்கான விபரம்.

| | | |
|---|---|---|
| 1) | விற்பனை விலை | ரூபா |
| | தொடக்க வைப்பு | 3,000 |
| | 4 சம தவணைக் கட்டணம் (1/4 ஆண்டிற்கு ஒருமுறை | 4,000 |
| | செலுத்தப்படும்) | 7,000 |
| 2) | தையல் பொறி ஒன்றின் கொள்விலை | 5,000 |

3) ஆண்டு காலத்திற்குரிய கொடுக்கல் வாங்கல்கள்,

அ) விற்பனைகளும் கொள்வனவுகளும்

| | | |
|---|---|---|
| காலாண்டு 1 :- | கொ/வு | 30,000 |
| | வி/னை | 15 பொறி |
| காலாண்டு 2 :- | வி/னை | 10 பொறி |
| காலாண்டு 3 :- | கொ/வு | 25 பொறி |
| | வி/னை | 10 பொறி |
| காலாண்டு 4 :- | வி/னை | 10 பொறி |

ஆ) ஆண்டிற்கான மொத்த தொழிற்பாட்டுச் செலவு 20,000

4) கொடுப்பனவு நிபந்தனை

அ) வைப்பு பணம் விற்பனையின் போது செலுத்த வேண்டும்.

ஆ) தவணைக் கட்டணம் ஒவ்வொரு காலாண்டின் தொடக்கத்திலும் செலுத்தப்பட வேண்டும். விற்பனையைத் தொடர்ந்து அடுத்து வரும் காலாண்டின் தொடக்கத்தில் தவணைக் கட்டண கொடுப்பனவு ஆரம்பமாகும்.

5) கொடுப்பனவுகள் அனைத்தும் உரிய வேளையில் பெற்றுக் கொள்ளப் பட்டன.

தயாரிக்க:-

1) வாடகை கொள்வனவு கடன் பட்டோர் கணக்கு

2) வாடகை கொள்வனவு விற்பனைக் கணக்கு

3) பொது வியாபார இலாபநட்டக் கணக்கு

| காலாண்டு | விற்பனை செய்த பொறி | விற்பனை விலை | வைப்புப்பணம் | செலுத்திய தவணைக் கட்டணம் | செலுத்தப்பட வேண்டிய தவணைக் கட்டணம் | கிடைத்த தவணைக் கட்டணம் | கிடைக்க வேண்டிய தவணைக் கட்டணம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 15 | 105,000 | 45,000 | 3 | 1 | 45,000 | 15,000 |
| 2 | 10 | 70,000 | 30,000 | 2 | 2 | 20,000 | 20,000 |
| 3 | 10 | 70,000 | 30,000 | 1 | 3 | 10,000 | 30,000 |
| 4 | 10 | 70,000 | 30,000 | — | 4 | —— | 40,000 |
| | 45 | 315,000 | 135,000 | — | — | 75,000 | 105,000 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கடன்பட்டோர் கணக்கு**

| | | | |
|---|---|---|---|
| விற்பனை | 315,000 | காசு | 135,000 |
| | | காசு | 75,000 |
| | | மீ/கீ/செ | 105,000 |
| | 315,000 | | 315,000 |
| மீ/கீ/வ | 105,000 | | |

**விற்பனைக் கணக்கு**

| | | | |
|---|---|---|---|
| வியாபார க/கு | 315,000 | கடன்பட்டோர் | 315,000 |
| | 315,000 | | 315,000 |

**பொது வியாபார இலாபநட்ட கணக்கு**

| | | | |
|---|---|---|---|
| கொள்வனவு | 275,000 | விற்பனை | 315,000 |
| (—) இறுதி இருப்பு | (50,000) | | |
| | 225,000 | | |
| மொத்த இலாபம் மீ/கீ/செ | 90,000 | | |
| | 315,000 | | 315,000 |
| தொழிற்பாட்டு செலவு | 20,000 | மொத்த இலாபம் மீ/கீ/வ | 90,000 |
| தேறிய இலாபம் மீ/கீ/செ | 40,000 | தேறா இலாப ஏற்பாடு | (30,000) |
| | 60,000 | | 60,000 |
| | | தேறிய இலாபம் மீ/கீ/வ | 40,000 |

தேறா இலாப ஏற்பாடு

$$\text{கணித்தல்} = \frac{\text{இலாபம்}}{\text{வாடகை கொள்வனவு விற்பனைவிலை}} \times \text{கிடைக்க வேண்டிய தொகை}$$

$$= \frac{2000}{7000} \times 105,000$$

$$= 30,000$$

**குறிப்பு:-**

வாடகைக் கொள்வனவு விலையில் சொத்தை கொள்வனவு செய்யும்போது சொத்தின் காசு விலை, முழுவதையும் சொத்து கணக்கில் வரவு வைக்காமலும் வாடகைக் கொள்வனவு விற்பனையாளன் கணக்கில் செலவு வைக்காமலும் கணக்கு பதிவுகள் மேற்கொள்ளலாம். இந்த முறையில் சொத்தின் பேரில் செலுத்தப்படும் தொகைக்குப் பதிவு;

சொத்து கணக்கு வரவு
காசு கணக்கு செலவு

இம் முறையில் சொத்துக் கணக்கு செலுத்தப்பட்ட தொகையை மட்டுமே காட்டும். அதனை ஐந்தொகையில் காட்ட முடியும். வாடகைக் கொள்வனவு விற்பனையாளன் கணக்கு பதியப்படாமையால் செலுத்தப்படவேண்டிய தொகை ஞாபக குறிப்பேட்டிலிருந்து அறிந்து கொள்ளப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வாடகைக் கொள்வனவினால் கொள்வனவாளருக்கு ஏற்படும் அனுகூலங்கள்

1) விலை கூடிய சொத்துக்களைக் கொள்வனவு செய்யலாம்.

2) தரமற்ற பொருட்கள் கொள்வனவு செய்யப்படும் போது அப்பொருட்களை மாற்றிப் பெற்றுக் கொள்ளலாம்.

3) நிதி வசதியற்றவர்களும் சொத்தினைப் பாவிப்பதற்கு வசதியளிக்கிறது.

4) சொத்திலிருந்து பெறப்படுகின்ற வருமானத்திலிருந்தே கட்டுப்பணத்தைச் செலுத்தி நீண்டகாலத்தில் சொத்துடமையாளராக மாறலாம்.

### வாடகைக் கொள்வனவினால் கொள்வனவாளருக்கு ஏற்படும் பிரதிகூலங்கள்

1) தேவையற்ற சொத்துகளும் கொள்வனவு செய்யப்படும்.

2) இதனால் பெறுமானத்தேய்வு, பராமரிப்புச் செலவு, வழக்கொழிதல் போன்ற நட்டங்கள் ஏற்பட இடமுண்டு.

3) அதிக வட்டி அறவிடப்படும்.

4) வாடகைக் கொள்வனவு விலை உயர்வானதாக காணப்படும்.

5) செலுத்திய முதலுக்கும் வட்டி செலுத்த வேண்டும்.

6) சொத்துரிமை இருக்காது.

### வாடகைக் கொள்வனவினால் விற்பனையாளருக்கு ஏற்படும் அனுகூலங்கள்

1) பொருட்களின் விற்பனை அதிகரிக்கும்.

2) விலை கூடிய பொருட்களை விற்பனை செய்யக்கூடியதாக இருக்கும்.

3) பணம் செலுத்தாத சந்தர்ப்பத்தில் சொத்து பறிமுதல் செய்யப்படலாம்.

4) பெறுமானத் தேய்வு, பராமரிப்புச் செலவு, வழக்கொழிதல் போன்ற வழிகளில் ஏற்படும் நட்டங்கள் குறைவாக காணப்படும்.

5) வட்டியுடன் இலாபத்தையும் உழைக்கலாம்.

### வாடகைக் கொள்வனவினால் விற்பனையாளருக்கு ஏற்படும் பிரதிகூலங்கள்

1) எல்லாப் பொருட்களையும் இம்முறையில் விற்பனை செய்ய முடியாது.

2) விலை கூடிய பொருட்களை இம்முறையில் விற்பனை செய்வது நிதிமுடக்கத்தை ஏற்படுத்தும்.

3) வருமதி தொகையினை வசூலிப்பது சிக்கலானது.

4) சொத்துக்கள் தொடர்பாக மோசடி ஏற்படும் சந்தர்ப்பம் அதிகமாக காணப்படுகின்றது.

### வாடகைக் கொள்வனவு ஒப்பந்தத்தை முடிவுறுத்தல்

நுகர்வோர் கடன் சட்டத்தின்படி வாடகை கொள்வனவாளன் விற்பனையாளனின் சம்மதத்துடன் ஒப்பந்தத்தை முடிவுக்கு கொண்டு வரப்படும் உரிமை உடையவர். இவ்வாறு ஒப்பந்தம் முடிவுக்கு கொண்டு வரப்படல் அது விற்பனையாளனின் சம்மதத்துடன் ஒப்பந்தம் முடிவுக்கு கொண்டு வருவதாக கருதப்படும். இதில் கொள்வனவாளன் இரண்டு முறைகளைப் பின்பற்றலாம்.

1) செலுத்தவேண்டிய மீதிதொகையை விற்பனையாளனுக்கு செலுத்தி ஒப்பந்தத்தை முடிவுக்கு கொண்டு வருதல்

2) விற்பனையாளனின் சம்மதத்துடன் சொத்தை இன்னொருவருக்கு விற்பனை செய்வதன் மூலம் ஒப்பந்தத்தை முடிவுக்கு கொண்டு வருதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாயப்பொருட்களின் விலை தளம்பலும் அரசாங்க நடவடிக்கைகளும்

**ப. சிவநாதன்**
*சிரேஷ்ட விரிவுரையாளர்*
*பொருளியல் துறை*
*(யாழ். பல்கலைக்கழகம்]*

*1930 களின் உலகப் பொருளாதாரப் பெருமந்தத்தின் பின் விவசாய உற்பத்திப் பொருட்களுக்கு அரசாங்கம் ஆதார விலைகளை நிர்ணயிக்க வேண்டும் என்பதை அனுபவரீதியாக அறிந்து கொண்டன. அரசாங்கம் ஆதார விலைகளை நிர்ணயித்ததோடல்லாமல் அவ்விலையில் தானே கொள்வனவு செய்யவும் முன்வந்தது. குறிப்பாக விவசாயப் பொருட்களுக்கான சந்தைவிலைஉறுதியற்றதாகவும் அடிக்கடி தளம்பும் இயல்புடையதாகவும் இருந்தது. அத்துடன் விவசாயம் அடிக்கடி தளம்பும் இயல்புடையதாகவும் பொருட்களின் விலை குறைந்து செல்லும் போக்குடையதாகவும் இருந்தது. இதனால்விவசாயியின் வருமானம் உறுதியற்றதாகவும தளம்புவதாகவுமிருந்தது. இதனால் சேமிப்பு நலிவடைந்து முதலீடுகள் திட்டமிட்ட வகையில் மேற்கொள்ள முடியவில்லை இதைத் தொடர்ந்து வரும் விவசாய வெளியீடுகள் பாதிக்கப்பட்டன.*


*அத்துடன் இச்சுழற்சி முறையினால் விவசாயத்துறை பாதிப்படைந்து வந்தது. இதனைச் சரி செய்வதற்காகவே அரசாங்கம் ஆதார விலையை அறிமுகப்படுத்தியது:*

*விவசாயப் பொருட்களின் விலைசார்ந்த பிரச்சினைகள் அப்பொருட்களின் கேள்வி, நிரம்பல், நெகிழ்ச்சி குறுங்காலத்தில் குறைந்ததாக இருப்பதனால் ஏற்படுவதாகும். இது உற்பத்தி சார்ந்த கால நிலையுடன் தொடர்புடையதாகவும், பருவகால இடைவெளி, மறுபயிரிடல் காலம் என்பதுடன் தொடர்புடையதாகவும் உற்பத்தி செய்யப்பட்டவை இருப்பில் வைத்து சந்தைக்கு கொண்டு செல்லும் காலம் என்பதுடன் தொடர்புடையதாகவும் இருப்பதனால் எழும் பிரச்சினையென்று குறிப்பிடப்படுவதும் உண்டு. சில சந்தர்ப்பங்களில் சந்தை விலை மட்டங்கள் மாறுவதற்கு முன்னரே பயிர்டப்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டதால் நிரம்பல் குறையும் அல்லது அதிகரிப்பும் அல்லது பருவகாலத்திற்கு பிற்பட்டதுமாக இருப்பது பாதகவிலைக்கு காரணமாகிறது.




Q

விளக்கப்படம் Iல் காட்டப்பட்டபடிசாதாரண வருடத்தில் கேள்வி D நிரம்பல் $S_1$ சமநிலை $E_1$ விவசாயப் பொருளின் உற்பத்தி குறைந்த காலத்தில் நிரம்பல் $S_3$ ஆக மாறும் போது சமநிலை $E_3$ அடுத்து வரும் காலத்தில் மேலதிக உற்பத்தி நிரம்பலை $S_2$ற்கு நகர்த்துவதால் சமநிலை $E_2$ல் விலை வீழ்ச்சியடைகின்றது. இதற்கு கேள்வி, நிரம்பல், நெகிழ்ச்சி குறைந்ததாக இருப்பதே பாரிய விலை வீழ்ச்சிக்கு காரணமாகின்றது. இவ்விலை வீழ்ச்சி விவசாயியின் வருமானத்தில் வீழ்ச்சியை ஏற்படுத்துகின்றது. கேள்வியும நிரம்பலும் நெகிழ்வற்றதாக காணப்படுவதால் சிறிய நிரம்பல் அதிகரிப்பும் நிரம்பல் வீழ்ச்சியும் பாரிய விலைத்தளம்பலை ஏற்படுத்துகின்றது. இதற்கு பின் வருவனவற்றை கவனத்தில் கொள்ள வேண்டும்.


I. உணவிற்கான வருமானம் சார் கேள்வி நெகிழ்ச்சி என்றும் குறைவானதே ஆடம்பரப் பொருள் போல் இதற்கான தேவை அதிகரிப்பதில்லை. குறிப்பிட்ட அளவானதையே ஒருவர் நுகரமுடியும்.

II. நிரம்பல் கோடு வலதுபுறம் நகர்வதற்கு விவசாயம் சார் தொழில்நுட்பம் முன்னேற்றமடைந்ததே காரணம். அதாவது புதிய இரசாயன உரம், ஏக்கருக்கான விளைவை விரைவாக உயர்த்தியுள்ளது. இதனால் விலை உடனடியாக வீழ்ச்சி அடைகின்றது.

III. a) விலை வீழ்ச்சியடைதலைத் தடுக்க விவசாயம் விளை பொருட்களை சந்தையிலிருந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி மூலம் நகர்த்தல்.

b) விற்பனையைப் பிற்போடுவதற்காக (Added Value) கூட்டப்பட்ட பெறுமான நடவடிக்கைகளை மேற்கொள்ளல். இதனால் வேலை வாய்ப்பும் அதிகரிக்கும். (அதாவது பதனிடல், பாதுகாத்தல், தரம் உயர்த்தல், கைத்தொழில் நடவடிக்கைக்கு உட்படுத்தல்)


மேற்காட்டப்பட்ட விலைத்தளம்பலிருந்து விவசாயியைப் பாதுகாப்பதற்கு அரசாங்கம் ஆதார விலை, உத்தரவாத விலை போன்றவற்றை சந்தையில் நிர்ணயிக்கலாம். இவ்வடிப்படையில் ஆதார விலையை நிர்ணயம் செய்யும் போது ஏற்படும் சந்தை நிலைமைகளைப் பின்வரும் படம் காட்டுகின்றது.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கப்படம் II இன்படி அரசாங்கம் $P_2$ விலையில் விற்பதற்கான உத்தரவாதத்தை விவசாயிக்கு அறிவிக்கின்றது. இதனால் விவசாயி $E_1$ சமநிலையில் $Q_1$ லிருந்து நிரம்பலை $Q_2$ ஆக அதிகரிக்கிறார்கள் இதனால் சமநிலை லிலிருந்து $E_2$ வாக உயர்கின்றது. அரசாங்கம் $P_2$ வாக விலையை நிர்ணயிக்கின்றது. நுகர்வோர் $E_1$ லிருந்து நுகர்வை $E_3$ க்கு நகர்த்துகின்றனர். இவ்வேளையில் நுகர்வுமட்டம் $E_3$ ஆக இருப்பதால் கேள்விக்கு அதிகமான நிரம்பலை ($E_3$ லிருந்து $E_2$ வரை உள்ள அதாவது $Q_3 - Q_2$ வரையிலானது மிகை நிரம்பலாகும்) அரசாங்கம் அதனைக் கொள்வனவு செய்தல் வேண்டும். இதனால் விவசாயியின் வருமானம் அதிகரிக்கும். இதனால் விவசாயியும் ஊக்கமடைகின்றான்.





படம் III இன் படி மாற்று நடவடிக்கையாக $P_2$ விலை கிடைக்க அரசாங்கம் விவசாயிகளிற்கு உத்தரவாதம் அளிக்கின்றது. அரசாங்கம் எதுவிதத்திலும் சந்தை விலையில் தலையிடவில்லை எனின் சமநிலை $E_2$ லிருந்து $E_4$ க்காக வீழ்ச்சியடைய விலை $P_4$ ஆக வீழ்ச்சியடைந்திருக்கும். இவ்வேளை அரசாங்கம் விவசாயிக்கு உத்தரவாத விலையாக $P_2$ வை வழங்குதல் வேண்டும். இதனால் $P_4$ லிருந்து $P_2$ வரையிலான விலை வேறுபாட்டை தவிர்க்கும் வகையில் அரசாங்கம் மானியத்தை வழங்குதல் வேண்டும். ஒப்பீட்டு ரீதியால் விவசாயிகள் ஆதார விலையையே விரும்புகின்றனர். இவ்வித அரசாங்க நடவடிக்கைகளை பின்வருமாறு அவதானிப்பதுமுண்டு.

**உயர்ந்தமட்ட தாழ்ந்தமட்ட விலையிடக் கொள்கை**
**( Price Floors and Ceilling )**




இங்கு சமநிலைவிலை OP அரசாங்கம் இவ் விலையை சரியான விவசாயப் பொருளின் விலையாக கருதவில்லை. இதனால் குறைந்தபட்சம் OPM விலை இருக்க வேண்டும் என்று பொதுக் கொள்கை உடையது என்போம். (Minimum Price) OPM விலையில் Q; நிரம்பல் செய்யப் படுகின்றது. கேள்வி QD ஆக உள்ளது. எனவே மிகை நிரம்பலை விற்பனை செய்யும் வகையில் அரசாங்கம் Price floors ஐ அறிமுகப்படுத்துகின்றது.





சந்தைச் சமநிலைவிலை OP ஆக இருக்கும் போது அரசாங்கம் ஆகக்கூடிய




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலையாக OPa இருக்க விரும்புகின்றது. இவ் உயர்ந்தமட்டகட்டுப்பாட்டுவிலையில் OQO நுகர்வோன் கேள்வியாகவும் OQS நிரம்பலாகவுமுள்ளது இது உணவுப் பொருட்களுக்குதட்டுப்பாட்டை ஏற்படுத்துகிறது இந்நிலை கறுப்புச்சந்தையை உருவாக்குகிறது. 2ம் உலக யுத்தகாலத்தில் கட்டுப்பாட்டுவிலையை அறிமுகப்படுத்தி Ration Coupons மூலம் உணவுப் பொருள்விநியோகிக்கப்பட்டது.


விவசாய உற்பத்திகள் கால இடைவெளி கொண்டதாக இருப்பதால் சந்தையின் கேள்விக்கேற்ப உடனே நிரம்பல் செய்ய முடியாது. இதனால் சந்தைக் கேள்வி அதிகரிப்பு மிகைக் கேள்வியை உருவாக்கும். இந்நிலை சந்தையில் விலை மாற்றமடைவதற்கு காரணமாகின்றது. இச் சந்தை நிலைமைகளின் மத்தியில் விவசாயி தனது உற்பத்தியை திட்டமிடுவதற்கும் நிரம்பல் செய்வதற்கும் எடுக்கும் கால இடைவெளிகள் (உற்பத்தி செய்யும் பருவகால இடைவெளியாகவோ அல்லது காலநிலை மாற்றங்களால் ஏற்படும் தடங்கல்களோ பயிரின் தன்மையோ அக்கால இடைவெளியின் அளவினைத் தீர்மானிக்கலாம்) சந்தையில் நுகர்வு மட்டத்திலும் நிரம்பலிலும் ஏற்படுத்தும் மாற்றங்கள் சந்தைவிலை அடிக்கடி தளம்புவதற்கு காரணமாகின்றது. இம் மாற்றங்களை காலரீதியாகவும் அசைவியக்க அடிப்படையிலும் சிலந்திவலை மாதிரி என்ற ஆய்வினூடாக அவதானிப்பது வழக்கமாக இருந்து வந்துள்ளது. (சிலந்திவலை மாதிரியை மிகச் சுருக்கமாக நோக்குவோம்.)




A விலை உறுதி நோக்கிய தளம்பல்




B விலை உறுதியற்ற விலைத் தளம்பல்




C சம அளவில் விலைத் தளம்பல்

படம் A,B,C யில் விவசாயப் பொருட்களின் கேள்வியும் நிரம்பலும் குறித்துக் காட்டப்பட்டுள்ளது. மூன்று படத்திலும் சுட்டிக்காட்டப்படும் விவசாயப் பொருட்கள் ஒவ்வொன்றும் பொருளின் தன்மை என்ற அடிப்படையிலும் உற்பத்தி செய்யும் கால இடைவெளி என்ற அடிப்படையிலும் இருப்பில் வைத்திருக்க கூடிய காலம் என்ற அடிப்படையிலும் உற்பத்தி செய்யும் நுட்பம் என்ற அடிப்படையிலும் வேறுபாடுகளைக் கொண்டிருக்கின்றது. இதனால் இவை ஒவ்வொன்றின் நிரம்பல் நெகிழ்ச்சியும் வேறுபட்டதாக இருக்கின்றது. அவ்விதமே இப்பொருட்கள் சார்பாக நுகர்வோரின் வருமானம் சார் கேள்வி நெகிழ்ச்சியும் வேறுபட்டதாகவுள்ளது. அத்துடன் இப் பொருட்களின் தன்மை வேறுபாடும் நுகர்வோன் தேவையில் இப்பொருட்களின் சார்பளவு முக்கியத்துவமும் வேறுபட்டிருப்பதால் A,B,C




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படங்களிலுள்ள கேள்விக் கோடுகள் வேறுபட்ட நெகிழ்ச்சியுடையதாகவுமிருக்கின்றது.

மேற்குறித்த காரணிகளை கருத்தில் கொண்டு விவசாயப் பொருட்களின் விலை தொடர்ந்து வரும் காலங்களில்தளம்புவதனை அவதானிக்கலாம். இவ் விலைத் தளம்பல் A படத்தில் உறுதியான சம நிலை நோக்கிய தளம்பலாகவும் B படத்தில் விலைத்தளம்பல் தொடர்ந்து வரும் காலங்களில் விரிவடைந்து செல்வதனையும் C படத்தில் தளம்பல் என்றும் ஒரே அளவானதாக இருப்பதனையும் காணக் கூடியதாக உள்ளது. ஒப்பீட்டு ரீதியில் மூன்று படத்திலும் விலைதளம்பல் மூன்று தன்மை உடையதாக இருப்பதற்கு அவ் விவசாயப் பொருள் சார்ந்த கேள்வி நிரம்பல் நெகிழ்ச்சி வேறுபாடே காரணமாகின்றது. A படத்தில் கேள்விநெகிழ்ச்சிநிரம்பல் நெகிழ்ச்சியைவிட அதிகமானது(ES<ED) B படத்தில் கேள்வி நெகிழ்ச்சி நிரம்பல் நெகிழ்ச்சியை விடகுறைவானது(ES>ED) C படத்தில் கேள்வி நெகிழ்ச்சியும் நிரம்பல் நெகிழ்ச்சியும் சமமானது. (ES=ED) இவ்வித நிலைமைகளின் மத்தியில் விவசாயி இன்றைய விலையை அடிப்படையாகக் கொண்டு அடுத்துவரும் பருவகால உற்பத்தியை தீர்மானித்து நிரம்பல் செய்வது இன்றைய நிரம்பல் சென்ற கால விலையின் அடிப்படையில் திட்டமிடப்பட்டதாக இருப்பது இயல்பானதே.

இத்தகைய நிலை விலைக்கும் நிரம்பலுக்குமிடையே கால இடைவெளி கொண்டதாக இருப்பதோடு குறித்தகால கேள்விக்குரிய குறித்த கால நிரம்பலாக இல்லாதிருப்பதே விலை தளம்பலுக்கு முக்கிய காரணியாக இருக்கின்றது. மறுபுறமாக நோக்கின் கைத்தொழில்பொருட்களாயின் கேள்விக்கேற்ப நிரம்பல் செய்வதற்கான கால இடைவெளி மிகமிகக் குறைவாக இருப்பதால் விலைத்தளம்பல் குறிப்பிடக் கூடியதாக இல்லை. ஆனால் விவசாய பொருள் நிரம்பல் கால இடைவெளி உடையதாக இருப்பதே விலைதளம்பலுக்கு முக்கிய காரணியாக இருக்கின்றது. முன்னர் குறிப்பிட்டது போல் பொருளின் தன்மை, பொருளின் கேள்வி நிரம்பல் நெகிழ்ச்சிகள் விலைதளம்பலை அடுத்து வரும் காலங்களில் உறுதியான சமனிலை நோக்கியோ அல்லது விரிவான தளம்பலாகவோ அல்லது சமதளம்பலாக. வோ இருக்க கூடிய சந்தர்ப்பங்களை ABC படம் காட்டுகின்றது.

இத் தளம்பலை நீக்கி விவசாயியின் வருமானத்தை உறுதிப்படுத்துவதற்கு தாங்கிருப்பு திட்டத்தை அரசு அமுல்படுத்தி வந்துள்ளது. குறிப்பாகஐரோப்பிய பொருளாதார சமூக (EEC) நாடுகள் இத் தாங்கிருப்பு திட்டத்தை விலைதளம்பலை நீக்குவதற்கான ஓர் செயல் முறையாக ஏற்றுக் கொண்டுள்ளனர்.




படம் VIIல் சாதாரண விவசாயப் பொருள் ஒன்றுக்கான கேள்விக்கோடும் அக்கேள்விக் கோட்டின் நெகிழ்ச்சி வேறுபாடும் காட்டப்பட்டுள்ளது. $P_2$ $Q_2$ ஒன்றுக்கு சமமான நெகிழ்ச்சியாக இருப்பதோடு கொடுக்கப்பட்ட கேள்வி நிலைமைகளில் அதி உயர் விற்பனை வருமானத்தை $P_2$ $Q_2$ இணைப்பில் பெற்றுக் கொள்ளலாம். மற்றும் (E>1) ஒன்றுக்கு கூடிய கேள்வி நெகிழ்ச்சி பகுதியிலுள்ள $P_1$ விலையில் $Q_1$ பொருளை விற்பனை செய்து கிடைக்கும் வருமானமும் (E>1) ஒன்றுக்கு குறைந்த கேள்வி நெகிழ்ச்சி பகுதியில் $P_2$



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலையில் $Q_2$ தொகைப் பொருளை விற்பனை செய்து கிடைக்கும் வருமானமும் ஒப்பீட்டு ரீதியில் ஒன்றுக்குச் சமமான நெகிழ்ச்சியுள்ள $P_2$ விலையில் $Q_2$ தொகையை விற்றுப் பெறும் வருமானத்தை விட குறைவானதே. எனவே விவசாயியின் வருமானத்தை உறுதிப் படுத்துவதோடு அவனது வருமானத்தை உச்சப்படுத்த வேண்டும் என்பதற்காக தாங்கிருப்பு திட்டமுறையில் விற்பனை ஒழுங்குபடுத்தப்படுகிறது. அதாவது அறுவடை முறிவு ஏற்படுவதனாலோ அல்லது வேறு காரணங்களாலோ நிரம்பல் $Q_0$ ஆக குறையும் போது விலை $P_1$ ஆக உயர்கிறது. செழிப்பு ஏற்படுவதனாலோ அல்லது வேறு காரணங்களாலோ நிரம்பல் $Q_3$ ஆக அதிகரிக்கும் போது விலை $P_3$ ஆக குறைகின்றது. இவ்விரு நிலமைகளும் விவசாயியின் வருமானத்தைக் குறைவடையவே செய்துள்ளது. இதைத் தவிர்ப்பதற்காக விற்பனைச் சங்கமோ அல்லது அரசாங்கமோ இச்சந்தையில் தலையிட்டு செழிப்பு காலத்தில் மிகை உற்பத்திகளை அதாவது $Q_2 - Q_3$ வரையிலான பொருட்களை இருப்பில் வைப்பதனால் விவசாயியின் வருமானம் உயரும், $(E=1)$ அதேவேளை அறுவடை முறிவு ஏற்பட்டு $Q_1$ ஆக நிரம்பல் குறையும் போது முன்னர் இருப்பில் வைந்ததை சந்தையில் நிரம்பல் செய்வதனால் $Q_1$ நிரம்பல் $Q_2$ ஆக உயர்த்தப்படும். இதனால் விவசாயியின் வருமானம் உயர்த்தப்படும். இத் தாங்கிருப்பு திட்டத்தால் விவசாயியின் வருமானம் உறுதிப்படுத்தப்படுவதோடு வருமானமும் உயர்த்தப்படும்.

மேற்குறிப்பிட்டவை விவசாயியை உத்பத்தியில் ஊக்கப்படுத்தும் சந்தை நடவடிக்கைகளாக கொள்ள முடியும்: வளர்ச்சியடைந்த நாடுகளிலும் வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளிலும் விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் ஒரேவிதமானவை. இப்பிரச்சினைகளை எதிர்ப்பதற்கு அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகளே இவ்விரு பகுதி நாடுகளிலும் வேறுபட்டவை. வளர்ச்சியடைந்த நாடுகளில் விவசாயப் பொருட்கள் முதல் பொருட்களாகப் பயன்படுத்துவதைத் தவிர்த்து அவற்றை Added Value ஊட்டப்பட்ட பெறுமதி உடையதாக மாற்றி பின்னர் விற்பனை செய்கின்றனர். இதற்கு அந்நாடுகளின் விஞ்ஞான வளர்ச்சியும் அதன் பிரயோகமும் காரணமாகின்றது. இவ்வித வசதிகள் இன்மையே வளர்ச்சியடைந்து வரும் நாட்டின் விவசாயிகள் வறுமை நிலையில் இருக்க ஒரு காரணமாகின்றது.

## லங்கா பேஃபோன் கார்ட்
### (Lanka Payphone Card)

1993 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 3ஆம் திகதி முதல் முழுமையாக கணணிமயப்படுத்தப்பட்ட பொது தொலைபேசி வசதி நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. லங்கா பேஃபோன் நிறுவனத்தால் இது செயற்படுத்தப்படுகிறது. ஒருவருக்கு தொலைபேசி அழைப்பைச் செய்ய வேண்டுமாயின் ஒரு கார்ட்டை வாங்கி அதன் மூலம் தொடர்பை ஏற்படுத்தலாம். இதற்கான கட்டணத்தை அறவிட்டு அதன் பெறுமதியை குறைத்து மிகுதியானவை எவ்வளவு என்பதை கணணி அறியத்தரும். இதனை எந்தநேரமும் பயன்படுத்த முடியும் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சனசக்தி நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்

சுகிர்ததாஸ்
ஆண்டு 13 C
வர்த்தகப் பிரிவு

## இதன் சட்டபூர்வ அந்தஸ்து

சனசக்தி நம்பிக்கைப்பொறுப்பு நிதியமானது 1991 சனவரி 3 ஆம் திகதி 365 ஆம் இலக்க நம்பிக்கைப் பொறுப்பு உறுதியால் ''நம்பிக்கைப் பொறுப்புக் கட்டளைச் சட்டத்தின்'' கீழ் உருவாக்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானியால் நம்பிக்கைப் பொறுப்புக்கட்டளைச் சட்டத்தின் 114 ஆம் பிரிவின் பிரகாரம் நம்பிக்கைப் பொறுப்பு ஒருங்கிணைக்கப்பட்டது.

## நம்பிக்கைப்பொறுப்பின் ஒழுங்கமைப்பு

சனசக்தி நம்பிக்கைப்பொறுப்பானது சனசக்தி நிகழ்ச்சித்திட்டத்தின் நடவடிக்கைக்கு ஆதரவளித்து குறை நிரப்புதல் செய்யும். இந்நோக்கத்தின் பொருட்டு நம்பிக்கைப்பொறுப்பில் மூன்று ஒழுங்கமைப்பு ரீதியான கூறுகளுள்ளன.

அ. நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை.

ஆ. மக்கள் அமைப்புகளையும் அரசு சார்பற்ற அமைப்புகளையும் உள்ளடக்கிய மதியுரைக்குழுவும் இவற்றைக் கொணட மன்று ஒன்றும்.

இ. முகாமைத்துவப்பணிப்பாளர் தலைமையிலான நிறைவேற்றுத் தொகுதி.

நம்பிக்கைப்பொறுப்பானது கொள்கைத் திட்டமிடல் அமுலாக்கல் அமைச்சுடன் தொடர்பினை மேற்கொள்ளும்; நம்பிக்கைப்பொறுப்புப்பணிகளை மேற்கொள்ளுமுகமாக ஒவ்வொன்றும் ஒரு பணிப்பாளரைத் தலைமையாகக்கொண்டு ஏழு செயற்பாட்டுப்பிரிவுகளை நம்பிக்கைப்பொறுப்பு கொண்டுள்ளது. அவை யாவன:

1. நிதியும் நிர்வாகமும்
2. கடனுதவி
3. மனித மூலவள அபிவிருத்தியும் நிறுவன ரீதியான அபிவிருத்தியும்
4. மேம்பாடும் வெளிக்கள ஆதரவும்
5. சமுதாயச் செயற்திட்டங்கள்
6. போஷாக்கு
7. செயலகம்

## நிதியும் நிர்வாகமும்

இலங்கையில் வறுமையைத் தணிக்குமுகமாக ஒரு செயற்திட்டத்தினை ஆரம்பித்து அதனைத் துரிதப்படுத்தி வேலை வாய்ப்பினை ஏற்படுத்துவதற்காக 1991 இல் சனசக்தி நம்பிக்கைப்பொறுப்பு நிதியம் உருவாக்கப்பட்டது. உலகவங்கி, ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜேர்மன் அரசு ஏனைய கொடையாளிகள் போன்றவற்றால் இச்செயற் திட்டத்திற்கு உதவியளிக்கப்பட்டது.

வறுமையைத் தணிப்பதற்கு உள்ள பாரம்பரிய நலன்புரி வழிவகைகள் போதுமானதாகவில்லையென்பதாலும், சமூக நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்களை அர்த்த புஷ்டியுள்ள பொருளாதார அபிவிருத்தியின்பால் உடனடியாகத் திசை திருப்ப வேண்டிய தேவை விளைந்துள்ளதாலும் ஆக்கபூர்வமாக ஆள்வலுத்திரட்டல் மூலம் வறுமைத்தணிப்பு நிகழ்ச்சித்திட்டங்களை மீள இணைத்துத் தொடர்ப்படுத்தும் உணர்வுடனேயே அபிவிருத்திக்கான உபாயமாக வறுமைத்தணிப்பு கருத்திற் கொள்ளப்பட்டது.

வறுமையைத்தணிப்பதற்காக மாண்புமிகு சனாதிபதி அவர்களால் உருவாக்கப்பட்ட அவரது "புதிய நோக்கும் புதிய செயற்பாடும்" என்னும் விஞ்ஞானத்தில் அறிமுகஞ் செய்யப்பட்ட சனசக்தி நிகழ்ச்சித்திட்டத்திற்கு இணைவாக இலங்கை அரசாங்கத்தின் அனுசரணையுடன் வேலைவாய்ப்பினை உருவாக்குவதற்கும் வறுமையைத் தணிப்பதற்குமென விலாசமான விசாரணைப் பணிகளை ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சியும், உலக வங்கியும், மேற்கொண்டன.

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு சட்டவாக்கங்களில் 96 ஆம் அத்தியாயத்தில் திருத்தப்பட்டவாறு 1917 இன் 9 இலக்க நம்பிக்கைப் பொறுப்பு கட்டளைச் சட்டத்தின் கீழ் 1991 இல் சனசக்தி நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் தாபிக்கப்பட்டது. நம்பிக்கைப்பொறுப்பின் பட்டயமானது அதன் சுதந்திரமான இலாப மீட்டாத்தன்மையைக் குறிக்கின்றது. நம்பிக்கைப் பொறுப்பை தாபிப்பதற்கான அமைச்சரவை அங்கீகாரம் 1990 ஒக்டோபர் 10 இல் வழங்கப்பட்டது. நம்பிக்கைப்பொறுப்புச் சாதனம் 1991 சனவரி 3 இல் சட்ட அறிஞர்களினால் சான்றளிக்கப்பட்டு 1991 யூன் 16 வர்த்தமானியின் மூலம் நம்பிக்கைப்பொறுப்பு கட்டளைச்சட்டத்தின் 114 ஆம் பிரிவின் கீழ் கூட்டிணைக்கப்பட்டது. அரச, தனியார், அரச சார்பற்ற துறைகளைச் சார்ந்த 20 நபர்களை உள்ளடக்கிய நம்பிக்கைப்பொறுப்பாளர் சபை ஒன்று 1990 ஆகஸ்டில் மாண்புமிகு சனாதிபதி அவர்களால் நியமனம் செய்யப்பட்டது.

## நம்பிக்கைப்பொறுப்பின் நோக்கங்கள் பின்வருமாறு

1. வறிய வேலையற்ற இளைஞர், பெண்கள் என்பவர்களிடையே வேலைவாய்ப்பு வருவாயைப் பெறும் சந்தர்ப்பங்களை அதிகரிக்கச்செய்தல்.
2. மூன்று வயதுக்குட்பட்ட சிறார்கள், கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்கள் என்பவர்களின் போஷாக்கு நிலையினை முன்னேற்றுதல்.
3. இவற்றை எய்துவதற்குக் கிராம மட்டத்தில் குழுக்களாக இணைவதன் மூலம் யாவரும் பங்குபற்றக்கூடியவாறான அணுகுமுறையினை உபயோகித்தல்.

சுயவேலைவாய்ப்பு, சிறியளவிலான தொழில்கள், கிராமிய வேலைகள் என்பவற்றை உள்ளடக்கிய பல்வேறு நடவடிக்கைகள் மூலம் வறிய மக்களுக்குப் போதியளவு வருவாயை உருவாக்க வல்லவற்றை இனம் கண்டு கொள்ளல், அபிவிருத்தி செய்தல், மேம்பாடடையச் செய்தல், துரிதப்படுத்தல் என்பவற்றின் மூலம் வறிய மக்களுக்கு உயர்தர வாழ்க்கையை அமைத்துக் கொடுக்கும் விதத்தில் இலாபமீட்டாது செயற்படுவதற்காகவே நம்பிக்கைப்பொறுப்பு தாபிக்கப்பட்டது, என்பதை நம்பிக்கைப்பொறுப்புச் சாதனம் குறிப்பாக உணர்த்துகிறது.

## நம்பிக்கைப்பொறுப்பின் முக்கிய பணிகளை நிறைவேற்று முகமாக மூன்று அமைப்பு ரீதியான உறுப்புகள் தாபிக்கப்பட்டுள்ளன

1. நம்பிக்கைப்பொறுப்பாளர் சபையும் ஒரு முகாமைக் குழுவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. மக்கள் அமைப்புக்களினதும் அரச சார்பற்ற நிறுவனங்களினதும் ஆலோசனைக் குழுக்கள்.

3. முகாமைத்துவப்பணிப்பாளர் ஒருவரைத் தலைமையாகக் கொண்ட நிறைவேற்றுநர் தொகுதி.

நம்பிக்கைப்பொறுப்பின் பிரதான நோக்கங்கள், பணிகள் என்பவற்றோடு இசையுமாறு ஒவ்வொன்றும் ஒரு பணிப்பாளரைத் தலைமையாகக் கொண்ட ஏழு செயற்பாட்டுப் பிரிவுகள் ஸ்தாபிக்கப்பட்டன. மேம்பாடும் வெளிக்கள ஆதரவும், மனிதவள, நிறுவன ரீதியான அபிவிருத்தி, கடனுதவி சமுதாயச் செயற்திட்டங்கள், போஷாக்கு என்பன பிரதான நடவடிக்கைப் பிரிவுகள் ஆகும். நிதி நிர்வாகம் என்பவற்றிற்கான பிரிவு ஒன்றும், செயலகம் ஒன்றும் உதவிச் சேவைகளை நல்கின. முறையான நிதி நிர்வாகக் கட்டுப்பாட்டை நிர்ணயித்தற் பொருட்டு உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு ஒன்றும் நிறுவப்பட்டுள்ளது.

## கடனுதவி

செயற்திட்டத்தை மதிப்பீடு செய்வதற்காக 1990 ஒக்டோபர்/நவம்பரில் உலக வங்கி மதிப்பீட்டுத் தூதுக்குழுவினர் இலங்கைக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டனர். இதன் மூலம் செயற்திட்ட அமுலாக்கலுக்கான ஆரம்ப நடவடிக்கைகளுக்கு உதவி வழங்க ஒத்துக் கொள்ளப்பட்டது. அதனைத் தொடர்ந்து 1991 மே 8 இல் இலங்கை அரசாங்கத்திற்கும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்கும் இடையே அபிவிருத்திக் கடன் வழங்கல் உடன்படிக்கை ஒன்று கைச்சாத்தானது. இதன் மூலம் 40.6 மில்லியன் சிறப்பு எடுப்பனவு உரிமையைப் பெற இயலும். நம்பிக்கைப்பொறுப்பிற்கு 20 மில்லியன் அமெரிக்க டொலர்களைக் கடனாக வழங்க வல்ல துணைக்கடன் உடன்படிக்கையொன்று இலங்கை அரசாங்கத்திற்கும் சனசக்தி நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்திற்குமிடையே 1991 ஆகஸ்ட் 7 இல் கைச்சாத்தானது. அதே வேளையில் இப்பணியை மேற்கொள்வதற்காகத் தொழில்நுட்ப உதவியை வழங்குவதற்கென 2.44 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியளிக்க வல்ல உடன்படிக்கையொன்று இலங்கை அரசாங்கத்திற்கும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்கும் இடையே கைச்சாத்தானது.

1991 யூலை அளவில் நிகழ்ச்சித்திட்டப்பிரிவுகளால் வேண்டப்படும் சகல நடைமுறைகளும் கைநூல்களும் தயாரிக்கப்பட்டு மக்கள் அமைப்புகள் என்பவற்றின் ஆலோசனைக்குழுக்களினால் அவை விவாதிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன. கொள்கைத்திட்டமிடல் அமுலாக்கல் அமைச்சினூடாக நம்பிக்கைப் பொறுப்பின் பொதுநிர்வாகத்திற்கு அவசியப்படும் நிதியினை அரசாங்கம் வழங்கியது. இதனைவிட 3 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்குச் சமமான பணத்தைத் திறைசேரி கடன் வழங்கல் அபாய நிதியத்திற்கு மாற்றம் செய்தது.

## மனித மூலவள அபிவிருத்தியும் நிறுவன ரீதியான அபிவிருத்தியும்

மனித மூலவள, நிறுவனரீதியான அபிவிருத்தி (H. R. I. D.) நிதியத்தின் மூலம் சமுதாய அணிதிரட்டல், சனசக்தி நன்மை பெறுபவர்களைச் சுயவேலை வாய்ப்பில் ஈடுபடுத்துவதற்கான பயிற்சி அளித்தல், செயற்திட்டங்களைத் திட்டமிடல், அமுலாக்கம், கண்காணித்தல் மதிப்பிடுதல் என்பவற்றில் பங்காளி அமைப்புக்களின் அங்கத்தவர்களுக்குப் பயிற்சியளித்தல், கடன் வழங்கு நிகழ்ச்சித்திட்டங்களை முகாமையிடல், போஷாக்கிற்கு ஆதரவாகத் தேவைப்படுபவற்றை வழங்குதல் என்பவற்றில் பங்காளி அமைப்புக்களின் ஆற்றலை ஆரம்பித்து வலுப்படுத்த நம்பிக்கைப்பொறுப்பு பெருமுயற்சி மேற்கொள்கிறது.

நம்பிக்கைப்பொறுப்பின் கடனுதவி, சமுதாயச்செயற்திட்டங்கள் என்பவற்றிற்கு மனித மூலவள அபிவிருத்தி ஆத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரவை நல்குவதற்கும் பங்காளி அமைப்புக்களிலும் சமுதாய அடிப்படையில் அமைந்த அமைப்புக்களிலும் நிறுவன அபிவிருத்தியை வலுப்படுத்துவதற்குமாக நம்பிக்கைப்பொறுப்பின் செயற்பாட்டுப்பிரிவுகளுடன் பரஸ்பரம் செயலில் ஈடுபடுவதற்கு தனது தொழில் உத்தியை வரையறுத்துக்கொள்வதே மனிதவளவள நிறுவன ரீதியான அபிவிருத்திப்பிரிவின் 1991 ஆரம்ப வேலையாக அமைந்தது. உலக வங்கி பங்குபற்றிய வறுமைத்தணிப்பு தொடர்பாக ஏற்பாடு செய்யப்பட்ட செயலமர்வுடன் இது தொடர்புபடுத்தப்பட்டது. நம்பிக்கைப்பொறுப்பின் ஒட்டுமொத்த இலக்கு, நோக்கங்கள், உத்திகள் என்பவற்றைப் பதவியினரும் உணர்ந்து கொள்வதற்கு அரச சார்பற்ற நிறுவன ஆலோசனைக்குழுச்செயலமர்வுகள் சந்தர்ப்பமளித்தன. இதன் மூலம் நம்பிக்கைப்பொறுப்பு பல்வேறு பிரிவுகளின் நடைமுறை நிகழ்ச்சித்திட்டங்கள் மீது அரச சார்பற்ற நிறுவன ஆலோசனைக் குழுக்களும் கலந்துரையாட வாய்ப்பு ஏற்பட்டது. பிரிவுகளினது பிரிவு மட்டத்திலமைந்த வழிகாட்டி நடவடிக்கைகள், மேம்பாட்டு, வெளிக்கள ஆதரவு மன்றங்களின் கலந்துகொள்ளுதல், கடனுதவி வழிகாட்டி கருத்தரங்குகளை ஒழுங்கு செய்தல் வழிநடாத்துதல் குழு அங்கத்தவர்களுக்கு 2 நாள் செயலமர்வுப்பயிற்சிகளை 12 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் ஏற்பாடு செய்தல் என்பவற்றை உள்ளடக்கும்.

சமுதாயச்செயற்திட்டங்களை அமுலாக்கும் வகையில் சமுதாய அடிப்படையிலமைந்த அமைப்புகளில் நிறுவன ரீதியான இயலுமையையும் ஆற்றலையும் ஏற்படுத்திக்கொள்வதையே வருடத்தின் பிற்பாதியின் பிரிவு முக்கிய நோக்காகக் கொண்டிருக்கிறது. சனசக்தி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் நலன் பெறுநர்களுடன் பணியாற்றுகையில் பங்குகொள்ளல் அபிவிருத்தி முறைகளில் அமைப்பு ரீதியான உத்திகள், உணர்ந்துகொள்ளும் ஆற்றல் என்பவற்றிற்கு முக்கியத்துவம் அளிப்பதை இது உள்ளடக்கும். இந் நடவடிக்கையானது மதிப்பீடு செய்தல், பயிற்சியளித்தல் போன்ற பணிகளின் பொருட்டு ஆலோசகர் குழு ஒன்றை உருவாக்க வேண்டிய அவசியத்தை ஏற்படுத்தியது. சமுதாய அடிப்படையிலான அமைப்புக்களின் வேலைத்திறனை உயர்த்தும் நோக்கிற்காக அடிப்படை வழிகாட்டல் அவர்களுக்கு வழங்கப்பட்டதுடன் அவர்களின் தேவையும் பயன்படுத்தப் படுகின்றது.

சனசக்தி நம்பிக்கைப்பொறுப்பின் கடனுதவி நிதியமானது கடன் உதவி அனுபவங்களை பங்காளி அமைப்புகளுக்கு வழங்குகின்றது. அத்தோடு வறியவர்கள் இக் கடனுதவிகளை சுயவேலை வாய்ப்பிற்காக ஆக்கபூர்வமாக உபயோகிக்கும் வகையில் சமூகத்திரட்டல் இயலுமையை மாற்றம் செய்தற்கும் ஏற்பாடு செய்கின்றது. கடனுதவி நிதிய நடைமுறைகளை நன்கு பழக்கப்படுத்திக் கொள்ளும் விதத்தில் அரசசார்பற்ற அமைப்புக்கள், வர்த்தக வங்கிகள், கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர், தேசிய இளைஞர் சேவைகள் கூட்டுறவு, பிராந்திய கிராமிய அபிவிருத்தி வங்கிகள், சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவு சங்கத்தின் சம்மேளனம் சமுதாய மட்டத்திலான அமைப்புக்கள் என்பவற்றுடன் தொடர்ச்சியாக கூட்டங்கள் நடாத்தப்படுகின்றன. ஆண்டின் போது நலன் பெறுனர்கள் போதிய அளவு சமூகத்திரட்டலை எய்திய பின் அவர்களுக்கு வழங்கப்படுவதற்கான 18 பங்காளி அமைப்புக்களுக்கு 121 4 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. மீள நிதியளிக்கும் அடிப்படையில் இந் நிதியினை அவர்கள் பெற்றுக் கொள்ள முடியும். இப்பங்காளி அமைப்புக்கள் 33 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் வேலை மேற்கொள்ள வேண்டுமென எதிர் பார்க்கப்படுகிறது. இவ்வாறு அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியின் மூலம் 1992 இன் போது ஏறக்குறைய 12 40 சுய வேலை வாய்ப்புத் திட்டங்கள் உருவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மேம்பாடும் வெளிக்கள ஆதரவும்

மேம்பாடு, வெளிக்கள ஆதரவுப்பிரிவினரால் ஏற்பாடு செய்யப்பட்ட பிரிவு மன்றங்களிலும் கடனுதவிப்பிரிவு பங்கு பற்றியது. மனிதமூலவள, நிறுவனரீதியான அபிவிருத்தி பிரிவினரால் வெளியூர்களில் நடாத்தப்பட்ட கருத்தரங்குகளில் இது பங்குபற்றியது கடனுதவி மதிப்பீட்டாளர்களும் மனிதமூலவள அபிவிருத்தியாளர்களும் உதவியாளர்களும் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் சனசக்தி நம்பிக்கைப்பொறுப்பு நிதியம் நலன்பெறுநர்களுடன் விழிப்புடன் பணியாற்றுவதற்காக வழிகாட்டிக் கருத்தரங்குகளும் தொடர்ச்சியாக நடாத்தப்படுகின்றன. பங்காளி அமைப்புக்களினால் வெளியிடப்பட்ட வேண்டுகோளுக்குப் பதிலளிக்குமுகமாக கடனுதவிக்காப்புறுதித்திட்டம் ஒன்றினைத் தயாரித்தது. இதன்படி ஆறு பாரிய அபாயங்களினால் தோல்வியடையக்கூடிய செயற்திட்டங்களைக் காப்புறுதி செய்தற்பொருட்டு ஒவ்வொரு நபருக்கும் ரூபா 180/- வீதம் பங்காளி அமைப்புக்கள் கொடுத்துதவும் கடனுதவி காப்புறுதி திட்டத்தின் கீழ் செயற்திட்டம் தோல்வியடையும் தறுவாயில் நிலுவையாகவிருந்த ரூபா 20,000/- வரையிலான கடன்களைப் பங்காளி அமைப்புகளுக்குக் காப்புறுதிக் காரர்கள் வழங்குவர்.

## சமுதாயச் செயற்திட்டங்கள்

பங்காளி அமைப்புக்களினால் தெரிவு செய்யப்பட்டு அவற்றிற்கு நிதி உதவி அளிக்கும் விதத்தில் 1991 இல் பல்வேறு சிறுதொழில் முயற்சித்செயற்திட்டங்கள் உருவாக்கப்பட்டன போதிய அளவு வேலை வாய்ப்பு இன்மையும் வருவாயை உருவாக்கவல்ல குறுங்கால வேலை வாய்ப்பு அபிவிருத்திச் செயற்திட்டங்களை ஏற்படுத்த வல்ல செயற்திட்டங்களுக்கு சமுதாய செயற்திட்ட நிதியத்தின் கீழ் நம்பிக்கைப்பொறுப்பினால் நிதியளிக்கப்படுகிறது. சனசக்தி நிகழ்ச்சித் திட்டத்தின் முதலாவது சுற்றில் 21 உதவிஅரசாங்க அதிபர் மாவட்டங்களில் 77 செயற்திட்டங்களை இப்பிரிவு ஆரம்பித்தது. அமுலாக்கற் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட செயற்திட்டங்களின் பெறுமதி 38.7 மில்லியன் ரூபா ஆகும்.

குறுங்கால வேலைவாய்ப்பையும் கிராமிய உள்ளக அமைப்பு அபிவிருத்தியும் ஏற்படுத்திக்கொள்ளவல்ல செயற்திட்டங்களை உருவாக்குவதே இப்பிரிவின் நோக்கமாகவிருந்தது. கிராமிய அபிவிருத்தியில் நீண்டகால நலன்களை ஏற்படுத்துவதற்கும், துணை வருவாயை ஏற்படுத்துவதற்குமான தன்மையை இச் செயற்திட்டம் கொண்டிருந்தன. வயலில் இருந்து சந்தைக்குச் செல்லும் வீதிகள் அமைத்தல், நீர்ப்பாசனத்திட்டங்களை புனரமைத்தல், சமூகத்திற்கான நீர்வழங்கல், கமத்தொழிலுக்கான கிணறமைத்தல், சந்தை அபிவிருத்திச் செயற்திட்டங்கள் என்பன அமுலாக்கப்பட்ட செயற்திட்டங்கள் ஆகும்.

தேசிய மட்டத்தில் அமைந்த பங்காளிகளினதும். சமுதாய அடிப்படையிலான அமைப்புக்களினதும் செயற்திட்ட உள்ளக அமைப்பு உருவாக்கற் தன்மையை முன்னேற்றுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. வறியவர்களுக்கு நீண்டகால நலன்களை ஏற்படுத்தவல்ல சமுதாய செயற்திட்டங்களை இனம் கண்டு கொள்வதே இதன் நோக்கமாகும். சமுதாய மட்டத்தில் தொழில்நுட்ப ஆற்றலுக்குத் தொழில்நுட்ப உதவியை இச் செயற்திட்டம் வழங்குகின்றது. இதன் பொருட்டு அரச, தனியார் துறை பொறியியல் ஆற்றல் பெருமளவில் உபயோகிக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போஷாக்கு

போஷாக்கிற்கான துணைப் பொருட்களை வழங்கி அதன் மூலம் எடை குறைந்த குழந்தைகள் பிறக்கும் பிரச்சினையைத் தீர்த்தும், தாய்மாரின் போஷாக்கு, சுகாதார நிலை என்பவற்றை முன்னேற்றியும் 5 வயதுக்குட்பட்ட பிள்ளைகள், கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்கள் என்பவர்களுக்கு உதவியளிப்பதற்கு போஷாக்குப் பிரிவை நம்பிக்கைப்பொறுப்பு அமைத்துக்கொண்டுள்ளது. செயற்திட்டத்தின் கீழ் ஆரம்பத்தில் முடிவு மேற்கொள்ளப்பட்ட போஷாக்கு நிகழ்ச்சித்திட்டமானது இனம் கண்டு கொள்ளப்பட்ட தொகுதிகளுக்குத் துணைபுரியும் ஏற்பாட்டை மாத்திரம் கொண்டு இருந்தது. எவ்வாறாயினும், இதனை மேலும் அர்த்தமுள்ளதாக அமுலாக்குவதன் பொருட்டு போஷாக்கு உத்தி விசாலிக்கப்பட்டது. குழந்தைகளின் எடை பார்ப்பதில் சமுதாய மட்டத்திலான தொழிலாளரை பயிற்றுவித்தல், விபரங்களைப்பெற்று அதன் மூலம் போஷாக்கு குறைந்த பிள்ளைகளை இனம் கண்டு கொள்ளுதல். போஷாக்கின்மைக்கான காரணத்தை இனம் கண்டு கொள்ளல் என்பவற்றை இது உள்ளடக்கும்.

இக்காலத்தின் போது 38 போஷாக்குத் தொண்டர்கள் தெரிவு செய்யப்பட்டனர். பிள்ளைகளின் எடையை எவ்வாறு கணிப்பது என்றும், வளர்ச்சி அட்டணையில் தகவல்கள் எவ்வாறு சேகரிப்பதென்றும் 33 பேருக்கு பயிற்சியளிக்கப்பட்டது. 0 - 5 வயதுடைய பாடசாலை செல்வதற்கு முன்னரான 827 பிள்ளைகளின் எடை கணிக்கப்பட்டது. அவர்களின் எடை, வயது போன்ற தகவல்கள் பால், வயது என்பவற்றைப்பொறுத்து பகுப்பாய்வு செய்யப்பட்டன. பயிற்றப்பட்ட போஷாக்குத் தொண்டர்களினால் எடை பார்க்கப்பட்டது. எடைபார்த்தல், புள்ளிவிபரங்களை சேகரித்தல், பகுப்பாய்வு செய்தல் என்பவற்றைக் குடும்ப சுகாதாரத்தொழிலாளர் கண்காணித்தனர்.

## கடன் நிதியப்பங்காளிகள்

* வரையறுக்கப்பட்ட செலான் வங்கி
* தேசிய இளைஞர்கள் சேவைகள் மன்றம்
* வரையறுக்கப்பட்ட சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுசங்கச் சம்மேளனம்
* மக்கள் வங்கி
* இலங்கை வங்கி
* வரையறுக்கப்பட்ட பினான்ஸ் கம்பனி
* கூட்டுறவு கிராமிய வங்கிகள்
* ஹம்பாந்தோட்டைப் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கி
* கண்டி பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கி
* நுவரெலியா பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கி
* வில்பொத்த காந்தா இதுறும் பரிஷாரமய
* ஹற்றன் நஷனல் வங்கி

மேற்படி கடன் நிதியப்பங்காளிகள் அமைப்புகளுக்கு 1991 ஆம் ஆண்டின் போது ரூபா 1,210 இலட்சம் மொத்தத் தொகை ஒதுக்கப்பட்டுள்ளது.


**அபிவிருத்தி அடைந்த இடம்பெயர் தொலைபேசி அமைப்பு**
**Advance Mobile Phone System - (AMPS)**

தொலைத்தொடர்புச் சேவையில் சர்வதேச ரீதியால் முன்னணியிலிருக்கும் அவுஸ்ரேலிய OTC நிறுவனம் இலங்கையில் முதலாவது அபிவிருத்தி அடைந்த இடம்பெயர் தொலைபேசி அமைப்பை மிகவிரைவில் நிறுவவுள்ளது. இதனால் செல்யூலர் (மின்கலம்) பாவனையாளர் நன்மையடைவர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.........

# இலங்கையின் திறந்த பொருளாதாரக் கொள்கையும் மரபுரீதியற்ற ஏற்றுமதிகளும்

வ. கலைக்குமரன்
(வர்த்தகப் பிரிவு)
(ஆண்டு 13)

## திறந்த பொருளாதாரக் கொள்கை அறிமுகம்

இலங்கை சுதந்திரம் அடைந்த காலத்திலிருந்தே தனக்குத் தேவையான பொருட்களை பெருமளவுக்கு இறக்குமதி செய்வதன் மூலம் பூர்த்தி செய்து வந்தது. இதற்குரிய அன்னியச் செலாவணியைப் பெருந்தோட்ட ஏற்றுமதித்துறை ஈடு செய்தது. எனினும் 1950களில் இலங்கையின் ஏற்றுமதிப் பொருட்களின் விலை வீழ்ச்சியடைந்து வர்த்தக மாற்றுவிகிதம் வீழ்ச்சியடைந்து நாட்டின் சென்மதி நிலுவை நெருக்கடி நிலைமைக்கு உட்பட்டது. இதனால் வெளிநாட்டுச் சொத்துக்கள் வீழ்ச்சியடைந்தது. இந்நிலையில் தொடர்ந்து இறக்குமதிகளைப் பேணமுடியாத இலங்கை இறக்குமதிகளை கட்டுப்படுத்த வேண்டிய அதே நேரத்தில் அவ்வாறன பொருட்கள் பலவற்றை உள்நாட்டு உற்பத்தி மூலம் பதிலீடு செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. இறக்குமதிகளை மேற்கொள்வதில் பல நெருக்கடிகளை எதிர்நோக்கிய அரசு பலதரப்பட்ட கட்டுப்பாடுகளையும் இறுக்கமடையச் செய்தது. இவ் இறுக்கத்தன்மை 1977இல் மிகவும் மோசமான நிலையை அடைத்தது.

இத்தகைய ஒரு பின்னணியிலேயே 1977ஆம் ஆண்டு புதிதாகப் பதவிக்கு வந்த அரசு திறந்த பொருளாதாரக் கொள்கையை முன் வைத்தது, ''நேரடிக்கட்டுப்பாடோ, கோட்டா முறைக்கட்டுப்பாடோ இன்றி இறக்குமதி வரிவிதிப்பதன் மூலம் வந்தளவு பொருட்களையும் ஏற்றுமதி, இறக்குமதி செய்யக் கூடியதாக இருப்பதே திறந்த பொருளாதாரக் கொள்கையாகும்'' இது பொருளாதாரத்தின் மீதான பலவகைக் கட்டுப்பாடுகட்கும் எதிரான தொரு எதிர்த் தாக்கல் என்றே வர்ணிக்கப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திறந்த பொருளாதாரக் கொள்கையின் முக்கிய அம்சங்கள்

1. வரையறுக்கப்பட்ட ஒரு சில பொருட்கள் மாத்திரம் இன்னமும் குறிப்பிட்ட அனுமதிப்பத்திர முறையின் கீழ் இருக்க ஏனைய யாவும் திறந்த பொது அனுமதிப் பத்திர முறையின் கீழ் வந்தன. இவ்வாறான பொருட்கள் மீதான நேரடிக் கட்டுப்பாடு அகற்றப்பட்டு அதற்குப் பதிலாக புதிய தீர்வை அமைப்பு ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டது.

2. அன்னியச் செலாவணி உரிமைச் சான்றிதழ் திட்டம் நீக்கப்பட்டு அதனுடன் இணைந்திருந்த இரட்டை விகித முறைக்குப் பதிலாக மீண்டும் ஒருமித்த மாற்றுவீத முறை அறிமுகப் படுத்தப்பட்டது.

3. 1960களின் முதல் அதிகரித்து வந்திருந்த விலைக் கட்டுப்பாடுகள் ஒரு சில அத்தியாவசியப் பொருட்கள் தவிர்ந்த ஏனைய பொருட்களைப் பொறுத்தவரை நீக்கப்பட்டன.

4. கைத்தொழில் மயமாக்கத்தைப் பொறுத்தவரை திறந்த பொருளாதாரக் கொள்கை நேரடியாக அன்னியச் செலாவணியை கவரும் செயன் முறைக்கு ஒரு முக்கிய இடத்தை வகித்தது.

5. தனியார்துறையால் கவரப்படாத மிகக் கூடிய மூலதனம் வேண்டப்பட்ட அல்லது குறைந்த இலாப அளவு கொண்ட கைத்தொழில்களில் மாத்திரம் பொதுத்துறை கவனம் செலுத்த வேண்டும் என்பதே நோக்கமாக இருந்தது.

6. ஏற்றுமதியை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் அன்னிய முதலீடுகளை வரவழைப்பதுடன் இணைந்திருந்த ஒரு அம்சம் ஏற்றுமதியை மேம்படுத்தும் நோக்குடன் உற்பத்தியில் ஈடுபடுவதாகும்.

## மரபு ரீதியற்ற ஏற்றுமதிகள்

இலங்கையின் ஏற்றுமதிப் பொருட்களை அவற்றின் தன்மை அடிப்படையில்;

(*i*) மரபுரீதியான ஏற்றுமதிகள்
(*ii*) மரபுரீதியற்ற ஏற்றுமதிகள்

என இருவகையாகப் பிரிக்கலாம். இதில் தேயிலை, இறப்பர், தெங்கும் அதனது உற்பத்திகளும் மரபுரீதியான ஏற்றுமதிகள் எனவும் இவை தவிர்ந்த ஏனையவை எல்லாம் மரபுரீதியற்ற ஏற்றுமதிகள் என பொதுவாகக் கருதிக்கொள்ளப்பட்டன: குறிப்பாக தைக்கப்பட்ட ஆடை, பெற்றோலியம், சிறு விவசாயப் பொருட்கள், இரத்தினக்கல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

மரபுரீதியற்ற ஏற்றுமதிகளில் சில இலங்கை சுதந்திரம் அடைவதற்கு முன்னர் இருந்தே ஏற்றுமதி நடைமுறைக்கு உட்பட்டிருந்த போதும் அவை மொத்த ஏற்றுமதிகளில் கொண்டிருந்த பங்கு மிகக் குறைவானதாகும். ஆனாலும் மரபுரீதியற்ற ஏற்றுமதிகள் 77இற்குப் பின்னர் அதிகரிக்கத் தொடங்கியது. 85, 87ற்குப் பின்னர் மொத்த ஏற்றுமதியில் முதல் நிலை வகிக்கும் அளவுக்கு இவ் ஏற்றுமதிகள் வளர்ச்சியடைந்தது. இதற்கு முக்கிய காரணம் கைத்தொழில் பொருட்களின் ஏற்றுமதி அதிகரித்தமையாகும். இக் கைத்தொழில் ஏற்றுமதியில் ஆடைகளின் ஏற்றுமதி தற்போது மொத்த ஏற்றுமதியில் முதலிடத்தை வகிக்கிறது.

## மரபுரீதியற்ற ஏற்றுமதி அபிவிருத்தி முயற்சிகள்

1982ஆம் ஆண்டில் ஏற்றுமதி அபிவிருத்திச் சபை அபிவிருத்தி கருதிய தேசிய அபிவிருத்தித் திட்டமொன்றைத் தயார் செய்தது. இத்திட்டம் 5 வருடங்களுக்கென உருவாக்கப்பட்டது மேலும் ஏற்றுமதி நோக்குள்ள வெளிநாட்டு முதலீடுகளை ஊக்குவிக்கும் நோக்குடன் கட்டுநாயக்கா முதலீட்டு ஊக்குவிப்புநிலையம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாபிக்கப்பட்டது. இதனை நிர்ணயிக்க கொழும்பு பாரிய அபிவிருத்திக் குழு அமைக்கப்பட்டமை, ஏற்றுமதி நோக்குள்ள செயல் திட்டங்களில் கட்டுப்பாடுகளை தளர்த்தியமை, முதலீடு செய்யும் நாடுகளுடன் முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தங்களையும் வரி நிவாரண ஒப்பந்தங்களையும் செய்தமை குறிப்பிடத்தக்கது.

1972 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட ஏற்றுமதியாளர்களுக்கான வரிச்சலுகை வழங்குவதற்கான திட்டம் 77இன் பின்னர் செயற்திறன் வாய்ந்ததாகக் காணப்பட்டது. பொருட்களை அபிவிருத்தி செய்தல், சந்தைப்படுத்தல் போன்றவற்றினை மத்தியவங்கி, ஏற்றுமதி அபிவிருத்திச் சபை, ஏற்றுமதி கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் போன்றன செய்து வருகின்றன. நிதி மூலதனம் சம்பந்தமாக பிரச்சனைகளை எதிர்நோக்கும் ஏற்றுமதியாளர், உற்பத்தியாளர்களுக்கு மீள் நிதியீட்ட மானியங்களை மத்தியவங்கிவழங்குகிறது மேலும் ஏற்றுமதியாளரை ஊக்குவிக்க ஏற்றுமதி அபிவிருத்திச்சபை ஜனாதிபதிவிருதுத்திட்டம், நன்கொடைத் திட்டம் போன்றவற்றை வழங்குகிறது.

## அபிவிருத்தி விளைவுகள்

ஏற்றுமதி அபிவிருத்தி செய்வதற்கென மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளின் மூலம் இலங்கை ஏற்றுமதி அமைப்பில் முன்னேற்றமான மாற்றங்கள் ஏற்படத் தொடங்கின. நீண்டகாலமாகப் பொருளாதாரம் எதிர்பார்த்திருந்த ஏற்றுமதி பல்முகப்படுத்தலானது ஏற்படுவதற்குரிய வாய்ப்பு 77இன் பின்னர் ஏற்பட்டது. 76 ஆம் ஆண்டில் பெற்றோலிய உற்பத்தி உட்பட மரபுரீதியான ஏற்றுமதிகள் 82%மாக இருந்தது. 86ஆம் ஆண்டில் 46%மாக வீழ்ச்சியடைந்தது. இதற்கான முக்கிய காரணம் ஏனைய ஏற்றுமதிகள் மீது அதிக கவனம் செலுத்தப்பட்டமையாகும். இவ் வீழ்ச்சியை ஈடுசெய்யும் வகையில் மரபுரீதியற்ற ஏற்றுமதிகளில் கைத்தொழிலின் பங்கு மிக வேகமாக உயர்வடைந்து செல்கின்றது.

1976 ஆம் ஆண்டில் 11%மாக இருந்த மரபுரீதியற்ற ஏற்றுமதிகள் 86 ஆம் ஆண்டில் ஏறக்குறைய 35%மாக உயர்ந்தது. இது தொடர்ந்தும் அதிகரித்துக் கொண்டு செல்வதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது. இத்தகைய கைத்தொழில் ஏற்றுமதிகளில் முக்கியமானதாக புடவைகளும் ஆடைகளுமாகும்.

## இலங்கையின் புடவைக் கைத்தொழில் ஏற்றுமதி

மொத்த ஏற்றுமதிகளில் புடவைக் கைத்தொழில்களின் பங்கு.

| ஆண்டு | 76 | 81 | 85 | 90 | 91 |
|---|---|---|---|---|---|
| மொத்த ஏற்றுமதி சதவீதம் | 1 | 14.6 | 22 | 31.6 | 32.4 |

இலங்கையின் மொத்த ஏற்றுமதி அமைப்பில் மிக வேகமாக வளர்ச்சியடைந்து வருவதும் முதலாவது இடத்தை வகிப்பதுமாக இப்புடவைக் கைத்தொழில் காணப்படுகின்றது. இது சுதந்திர வர்த்தக வலயத்தில் அதிகமாகக் காணப்படுகின்றது. 79இல் உருவாக்கப்பட்ட முதலீட்டு ஊக்குவிப்பு வலயம் அதிகளவில் கொண்டிருந்த முதலீடுகள் புடவைக் கைத்தொழிலைச் சார்ந்திருந்தன. 76இல் 70 மில்லியன் ரூபாவாக இருந்த ஆடைகளின் ஏற்றுமதி வருமானம் 87இல் 12897 மில்லியன் ரூபாவாக மிக அதிகளவில் வளர்ச்சியடைந்தது. அத்துடன் 86, 87களில் அதிக அன்னியச் செலாவணியை இலங்கைக்கு உழைத்துக் கொடுத்த தேயிலையின் பங்கினை விஞ்சியதுடன் அன்னியச் செலாவணியை சேமிக்கும் மிகப் பெரும் தனி ஒரு விடயமாக மாறியுள்ளது.

சுதந்திர வர்த்தக வலயத்தில் தைக்கப்பட்ட ஆடை உற்பத்தியிலே பெரும்பாலான முதலீடுகள் ஈடுசெய்யப்பட்டமைக்குக் காரணம தைக்கப்பட்ட ஆடைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைத்தொழில்களுக்கு ஊழியச் செறிவான தொழில்நுட்பமே அவசியமானதாகும். அதே நேரம் இலங்கையில் ஊழியம் மலிவானதாகக் காணப்படுகிறது:

## இலங்கையில் கைத்தொழில் துறையின் பங்கு

### 1. அன்னிய முதலீடுகளும் அன்னிய நிறுவனங்களின் ஊடுருவலும்

கைத்தொழில் நிறுவனங்களின் உடமையாளரைப் பொறுத்தவரை நேரடி அன்னிய முதலீடுகளுக்கு அதிகமிடமளிக்கப்பட்டிருந்தது. அதற்கு வசதியாக முதலீட்டு ஊக்குவிப்பு வலயங்கள் உருவாக்கப்பட்டன. இதற்குரிய வசதிகளை வழங்குவதற்கு சொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழு உருவாக்கப்பட்டுள்ளது. அத்துடன் அன்னிய முதலீட்டு ஆலோசனைக் குழு உருவாக்கப்பட்டுள்ளது. அத்துடன் அன்னிய முதலீட்டு ஆலோசனைக்குழு என்பதும் உருவாக்கப்பட்டிருந்தது. 1972-82 காலப்பகுதியில் அன்னிய நிறுவனங்களின் ஏற்றுமதிகள் 244%மாக அதிகரித்திருந்தன. இக்காலப்பகுதியில் மொத்தக் கைத்தொழில் ஏற்றுமதி இலங்கைக்குச் சொந்தமான நிறுவனங்கள் வளர்ச்சியடைந்ததைவிட அன்னிய நிறுவனங்களின் வளர்ச்சி உயர்வாகக் காணப்பட்டன. மொத்த ஏற்றுமதி அதிகரிப்பில் ஏறக்குறைய 57% அன்னிய நிறுவனங்களினாலே வழங்கப்பட்டன. இவ்வாறு வழங்கப்பட்ட அன்னிய முதலீடுகள் பெருமளவுக்கு புடவை உற்பத்தியில் ஈடுபடுத்தப்பட்டது. இதற்கு முக்கிய காரணம் இலங்கைக்கு புடவை உற்பத்தியிலிருக்கும் சிறப்பியல்பாகும்.

### 2. அன்னியச் செலாவணி

தாராளக் கொள்கை அறிமுகப்படுத்தப்பட்ட பின் கைத்தொழில் ஏற்றுமதியின் பெறுமதி நடைமுறை SDR பெறுமதிக்கேற்ப 77இல் 30 மில்லியனிலிருந்து 84இல் 354 மில்லியனாக அதிகரித்திருந்தது. 77 அளவில் அன்னியச் செலாவணி உழைப்பில் தேயிலை முக்கிய பங்கை வகித்தது. ஆனாலும் 86ற்குப் பின்னர் அன்னியச் செலாவணி உழைப்பில் மிகக் கூடுதலாக ஆடைகளின் ஏற்றுமதிகள் மூலம் பெறப்படுகின்றது. தற்போது பெருந்தோட்டத்துறை மூலம் கிடைக்கும் அன்னியச் செலாவணியை விட கைத்தொழில் ஏற்றுமதி மூலம் அதிகளவு அன்னியச் செலாவணி பெறக் கூடியதாக உள்ளது. இதற்கு முக்கிய காரணம் கைத்தொழில் சார் ஊக்குவிப்புக்களாகும்.

### 3. தொழில் வாய்ப்பு

இலங்கையின் கைத்தொழில் அமைப்பில் அங்கீகரிக்கப்படாத கைத்தொழில்கள் ஒரு பிரதான இடத்தை வகிக்கின்றது. இவை பல சிறிய கைத்தொழில்களை உள்ளடக்குவதுடன் ஊழியச் செறிவு மிகுந்தவை என்ற காரணத்தினால் அதிகளவு வேலை வாய்ப்புக்களை வழங்குகின்றது. 77ற்குப் பின்னர் கைத்தொழில் துறையிலான தொழில் வாய்ப்புக்களில் உயர்வான போக்கு காணப்படுகின்றது. 70, 77களில் ஒழுங்கு செய்யப்பட்ட கைத்தொழில்களில் 2.8% வளர்ச்சியையே வேலை வாய்ப்பில் காட்டுகின்றது. ஆனால் 78, 82 காலப்பகுதியில் 7.6%மாக அதிகரித்துக் காணப்பட்டது. 1982ஆம் ஆண்டு கைத்தொழில் துறையில் இருந்த மொத்த ஊழியப்படை 77இல் இருந்ததை விட 44% அதிகமாகக் காணப்பட்டது. 1977ஆம் ஆண்டு 56,000 வரையிலிருந்த அரச கைத்தொழில்களிலான ஊழிய எண்ணிக்கை 80களில் 70,000 வரை உயர்ந்து காணப்படுகின்றது.

1986ஆம் ஆண்டு முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்திலான வேலை வாய்ப்புக்கள் 32,340இல் இருந்து 46,617ஆக 29%மாக அதிகரித்திருந்தது. இதில் 82%மானவை துணி, ஆடைகள், தோற்பொருள் என்பவற்றிலாகும். அதேபோல வலயத்துக்குப் புறம்பாக வெளிநாட்டவரால் தொடங்கப்பட்ட கைத்தொழில்களில் 86இல் 26,769 பேர் வேலை வாய்ப்பைப் பெற்றிருந்தனர், இதில் 65% துணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடைக் கைத்தொழிலிலேயே வேலை வாய்ப்பு பெற்றிருந்தனர்.

## முடிவுரை

இலங்கையின் ஏற்றுமதி வர்த்தகம் குறிப்பிடக் கூடியளவிற்கு எதிர்பார்த்த வெற்றியினை தந்ததெனக் கொள்ள முடியாது. பதிலாக சென்ற காலங்களைப் போலவே நாடுமுகம் கொடுத்த நெருக்கடிகளுக்குத் தீர்வைகாணும் வகையில் எடுக்கப்பட்ட நடவடிக்கையினால் ஏற்பட்ட உயர்வுகளாகவே இவை காணப்பட்டன. கைத்தொழிலின் வளர்ச்சியானது ஒரு நிலையான பாதையில் முன்னேறத் தவறி விட்டது. அவை தாராண்மைக் கொள்கையின் அமுலாக்கத்தைத் தொடர்ந்து ஏற்பட்ட வளர்ச்சிவீத அதிகரிப்பானது. உண்மையில் பொருளாதாரத்தின் நீண்டகால வளர்ச்சியை புலப்படுத்துகின்றது என்பதை அறுதியிட்டுக் கூறமுடியாது. அதற்குப் பதிலாக கொள்கை மாற்றத்தால் உண்டான பொருளாதார நன்மைகளை அனுபவிப்பதற்கான ஒரு குறுகியகால அசைவென்றே கூறமுடியும்.

புடவைக் கைத்தொழிலை எடுத்து நோக்கின் அதன் ஏற்றுமதி வருமானம் அதிகரித்துக் கொண்டு சென்றாலும் அதன் தேறிய வருமானம் குறைவாக உள்ளது. அதாவது இது தேயிலையை விஞ்சிவிட்டாலும் தேறிய அன்னியச் செலாவணி வருமானத்தில் இது முன்னேற்றமடையவில்லை. ஏனெனில் தைக்கப்பட்ட ஆடைக்கு தேவையானமூலப்பொருட்கள், இடைத்தரப் பொருட்களின் பெரும்பகுதி இறக்குமதி செய்யப்படுகின்றமையாகும். மேலும் ஐக்கிய அமெரிக்கா, கொங்கொங் ஆடைகளின் இறக்குமதிக்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளில் இலங்கையின் ஆடைக் கைத்தொழிலின் ஏற்றுமதி ஒரு தளர்வை ஏற்படுத்துகின்றது, இதனால் மிகை உற்பத்திகளை ஏற்றுமதி செய்யப் புதிய சந்தை வாய்ப்புக்களைத் தேடவேண்டியுள்ளது.

77, 79 காலப்பகுதியில் அங்கீகரிக்கப்பட்ட கைத்தொழில்களின் தொழில்வாய்ப்புக்கள் 7%யினால் அதிகரித்து அங்கீகரிக்கப்படாத சிறு கைத்தொழில்களில் அவை 16%யினால் வீழ்ச்சியடைந்தன. கைத்தறி, துணி, நெசவு என்பவற்றில் மாத்திரம் இந்தக் காலப்பகுதியில் 40,000 பேர் வரை வேலை வாய்ப்பை இழந்திருக்கலாமென மதிக்கப்படுகிறது. எனவே கைத்தொழில் துறை புதிதாக வேலை வாய்ப்புக்களை ஆக்கியது என்பதை விட ஏற்கனவே நிலவிய வாய்ப்புக்களாக மறுபங்கீடு செய்தது என்பதில் கூடியளவிற்கு உண்மையாகும். 77ற்கு பிற்பட்ட காலப்பகுதியில் தொழிலாளர்களுக்கான மெய் வேதனம் குறைவடைந்து செல்வதைக் காணக்கூடியதாக உள்ளது. அது மாத்திரமின்றி தொழிலாளருக்கான மெய்க்காட்டிய பெறுமதியும் குறைந்து செல்ல முட்பட்டுள்ளது எனவே செல்வந்தர் மேலும் செல்வந்தர்களாகவும் வறியவர் மேலும் வறியவராவதற்கும் வழிவகுக்கின்றது.

எனவே பொருளாதாரம் முழுவதையும் பாதிக்கின்ற அன்னியச் செலாவணிப் பிரச்சனைக்கும் வேலை இல்லாப் பிரச்சனைக்கும் நிரந்தரமான பரிகாரம் ஒன்றைக் காணும் வகையில் ஏற்றுமதி அமைப்பில் மாற்றத்தினை ஏற்படுத்துவது அவசியமாகும். இவ் அமைப்பு தேறிய அன்னியச் செலாவணியை மீதப்படுத்தக் கூடியதாகவும் தேவையான மூலப் பொருட்களை தன்னகத்தே கொண்டுள்ளதாகவும் இருத்தல் வேண்டும்.

> இருப்பு தொடர்பான செலவுகளை இழிவுபடுத்தும் நோக்கில் தற்போது இருப்புக்களை வைத்திருக்காது, நிறுவனம் தேவைக்கு ஏற்ப உரிய நேரத்தில் அவற்றைப் பெற்றுக் கொள்கின்றது. இது JIT (Just In Time) என அழைக்கப்படுகிறது. இதன் மூலம் இருப்பு பேணும் செலவினை பெருமளவிற்கு குறைக்க முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச உலகும் சோவியத் யூனியனின் வீழ்ச்சியும்

**வீ. மணிவண்ணன்**
ஆண்டு 13 C
கலைப்பிரிவு

ஆசியாக் கண்டத்திலே பெரிய நிலப் பரப்பைக் கொண்டதும் உலகிலேயே பெரும் வல்லரசுகளில் ஒன்றாகக் காணப் பட்ட சோவியத் யூனியன் இன்று சின்னா பின்னம் அடைந்து நாலா திசைகளிலும் பிரிந்து சென்றதைக் கண்டு உலக மக்கள் பெரும் அதிர்ச்சியில் ஆழ்ந்து சிந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்நிலையில் சோஷலிஸம் என்ற சொற்பதமே நிலை குலைந்த நிலையிலே உள்ளது. இதன் பிளவு உலகிலே ஏகாதிபத்தியத்தின் தன்னாதிக்கத்தை நிலைநிறுத்தியுள்ளதென்றே கூறலாம். சோவியத் யூனியனின் சிதைவிற்கான மறைமுக காரணம் அமெரிக்க ஏகாதிபத்தியம் என்றே கூறலாம். சோவியத் யூனியனை வரலாற்று ரீதியாக நோக்குவோமாயின் அதன் சிதைவிற்கான காரணத்தை அறிந்து கொள்ளலாம்.

ரஷ்யா 1917க்கு முற்பட்ட காலங்களிலே மன்னராட்சியுடைய ஒரு நாடாகவே காணப்பட்டது. இவ் ஆட்சி கூடுதலாக முதலாளித்துவ படிநிலையின் முதல் நிலையான நிலப்பிரபுத்துவ ஆட்சி முறைக்கு ஒப்பான ஆட்சி போன்றே அமைந்து காணப்பட்டது. இங்கு மன்னராட்சி ஒரு தனிப்பட்ட வர்க்கத்தின் நலனுக்காக ஆட்சிப் பரிபாலனத்தை நடாத்தி சென்றுள்ளது. அதாவது பணம் படைத்தவர்களின் நலன்களைப் பாதுகாப்பதிலும் அதனை முன்னேற்றுவதிலுமே மன்னனுடைய ஆட்சி அமைந்து காணப்பட்டது. இந்த ஆட்சிப் பரிபாலனத்தைக் கைப்பற்றிய ஒவ்வொரு மன்னரும் ஒரு கன்னிச்சையான சர்வாதிகார போக்கிற்கிணங்கவே ஆட்சியை நடாத்திச் சென்றனர். இவ்வாறான மன்னர்களுடைய ஆட்சித்துறையிலே மன்னனுடைய அளவு கடந்த சர்வாதிகாரப் போக்கை கட்டுப்படுத்தக் கூடிய எத் துறையும் ஆட்சிப் பரிபாலனத்திலே காணப்படவில்லை ரஷ்யாவின் கடைசி மன்னனான ஜார் நிகலாயவைக் என்பவனுடைய ஆட்சி மிகவும் கொடூரத் தன்மை நிறைந்ததாகக் காணப்பட்டது. இவ்வாட்சியில் மக்கள் சொல்லொணாத் துன்பத்தை அனுபவிக்க நேரிட்டது இதனால் மக்கள் ஒவ்வொருவரது மனதிலும் ஆட்சித்தன்மையின் வெறுப்புணர்வு பிரதிபலித்தது. இவ்வாட்சியை முற்றாகத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகர்த்தெறிய தலைப்பட்டார்கள். லெனின் தலைமையில் அவரின் வழிநடத்தலின் கீழ் பெருந்தொகையான மக்கள் அப்போது நடைமுறையில் இருந்த ஆட்சியை தகர்த்தெறிய முற்பட்டார்கள். அது 1917ல் வெற்றியில் முடிந்தது. இதனைத் தொடர்ந்து லெனின் நடைமுறையில் இருந்த எமன்ஷிவிக் கட்சிக்கு எதிராக போல்ஷிவிக் கட்சியை அமைத்துக் கொண்டதோடு செம்படை என்னும் படை அமைப்பினையும் உருவாக்கிக் கொண்டார். இது பாட்டாளி மக்களின் ''சோஷலிஸ'' ஆட்சி அமைந்ததற்கான முதலாவது வெற்றி ஆகும்.

இதனைத் தொடர்ந்து முதலாம் உலக மகாயுத்தம் இடம்பெற்றது. இதன் பின் விளைவாக சில நாடுகள் ரஷ்யாவுடன் இணைந்து கொண்டன. மேலும் லெனின் பாட்டாளி மக்களுடன் ''சோஷலிஸ'' சோவியத்தைக் கட்டியெழுப்பும் பணியில் மும்முரமாக ஈடுபட்டார். லெனினுடன் ஸ்டாலினும் இணைந்து 1922ம் ஆண்டு சோவியத் யூனியன் என்னும் அமைப்பினை உருவாக்கி கொண்டதோடு அந் நாட்டு ஆட்சிக்கான அரசியலமைப்பையும் தயாரித்துக் கொண்டனர் இவ்அரசியலமைப்பில் பாட்டாளி மக்களுடைய நலனைக்கருத்திற் கொண்டு அவர்கள் எல்லா விதத்திலும் சுதந்திரமாகவும் சமத்துவமாகவும் வாழக்கூடிய ஒரு அரசியல் யாப்பைத் தயாரித்தார்கள். ஆனால் இங்கு மக்களுக்கு பொருளாதார உரிமை வழங்கப்படவில்லை. பொருளாதார அமைவு அரசாங்க சொத்து வடிவிலேயே இருந்தது. பொருளாதார உரிமை மறுத்ததற்கு லெனின் பின்வருமாறு காரணம் கூறினார். அனைத்து மக்களிடையேயும் பொருளாதார சுதந்திரம் தவிர்ந்த ஏனைய அனைத்தும் சுதந்திரமாக அனுபவிக்க வழிவகுக்கப்பட்டுள்ளது. பொருளாதார உரிமை மறுக்கப்பட்டு ஏனைய அனைத்திலும் சமத்துவம் வழங்கப்பட்டுள்ளது. சோஷலிசக் கொள்கையைக் கடைப்பிடிக்கும் இந்நாட்டில் பொருளாதார உரிமை வழங்கப்படுமேயானால் அது மீண்டும் ஏகாதிபத்திய தன்னுரிமைக்கு இட்டுச் சென்றுவிடும் என்றார். ஆதலால்தான் பொருளாதார உரிமை மறுக்கப்பட்டு ஏனைய அனைத்திலும் சமத்துவம் வழங்கப்பட்டுள்ளது என்றார். இவ்வாறாக பாட்டாளி மக்களுடைய ஒரு ஆட்சியாகவே இது அமைந்து சென்றது. லெனினால் அமைக்கப்பட்ட போல்ஷிவிக் கட்சியின் வழிநடத்தலுக்கு அமையவே ஆட்சிப்பரிபாலனம் அமைந்து சென்றது. கட்சியின் தலைவரே நாட்டின் தலைவர் ஆவார். எனவே அங்கு ஜனாதிபதி ஆட்சி முறைமையோ அல்லது பிரதமர் ஆட்சி முறைமையோ காணப்படவில்லை. எனவே கட்சியின் தலைவரே ஆட்சித் துறையின் தலைவர். தலைவரின் வழிநடத்தலுக்கு அமையவே கட்சி அங்கத்தவர்கள் ஆட்சிப் பரிபாலனத்தை நடாத்திச் சென்றார்கள். இவ்வாறான ஒரு ஆட்சி முறையிலே ஏகாதிபத்திய வர்க்கம் அதாவது முதலாளித்துவ வர்க்கத்தை நசுக்கும் பாணியில் பாட்டாளி மக்கள் ஆட்சி அமைந்ததனால் அங்கு ஏகாதிபத்தியம் தலையெடுக்க முடியவில்லை. 1924ல் லெனினின் மறைவு ஏற்பட்டது.

லெனின் மறைவினைத் தொடர்ந்து கட்சியின் தலைவராக ஸ்ராலின் தலைமை வகித்து ஆட்சிப் பரிபாலனத்தை நடாத்திச் சென்றார். ஸ்ராலின் ஆட்சியில் இருக்கின்றபோது தொடர்ந்து பாரிய படுகொலைகளை சோஷலிசத்துக்கு எதிரான சக்திகள் நடாத்தினார்கள். ஸ்ராலின் ஆட்சியில் இருக்கின்ற போது தனக்கு ஏற்பட்ட நெருக்கடியை சமாளிப்பதற்காக செம்படை என்னும் இராணுவ அமைப்பை பரந்த அளவில் விரிவுபடுத்தியதோடு உள்நாட்டு அமைப்பிலும் அதனை நிறுவனமயப்படுத்தக் கூடிய நிலையினை வளர்ப்பதில் வெற்றி கண்டார். இந்நிலையில் இராணுவத்தின் படைப்பல அதிகரிப்பு நடைமுறையில் இருந்த கம்யூனிசக் கட்சியிலும் ஆதிக்கத்தைச் செலுத்துவதோடு கட்சியின் ஆட்சிப் பரிபாலனத்தில் எடுக்கும் முடிவுகளையும் இராணுவம் கட்டுப்படுத்தியது. இதன் காரணமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராணுவம் எடுக்கும் முடிவுகளுக்கும்கட்சி எடுக்கும்முடிவுகளுக்கும்முரண்பாடுகாணப்பட்டது. எனவே இது பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்ற நிலையில் இருந்து மாறுபட்ட இராணுவ சர்வாதிகார தன்மை உடையதாக காணப்பட்டது. ஸ்ராலினால் நிறுவனமயப்படுத்தப்பட்ட இராணுவ அமைப்பே அவருடைய நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தியதனால் இராணுவ தளபதியாக இருந்த ட்ரொஸ்கியை படைத்தளபதியில் இருந்து விலக்கி தனது கட்சிக்காரர்களைக் கொண்டு மறைமுகமான முறையில் கொலை செய்தார்.

இவ்வாறாக சோவியத் யூனியனில் சோஷலிஸம் வளர்ச்சி அடைந்து சென்றுகொண்டிருக்கின்ற காலத்தில் 1936ல் மீண்டும் ஒரு முறை அரசியலமைப்பு மாற்றியமைக்கப்பட்டது. இதில் 1ம் உலக மகாயுத்தத்தின் பின் ரஷ்யாவுடன் இணைந்த நாடுகளை குடியரசாக இணைத்துக் கொண்ட சோவியத் யூனியன் கூட்டாட்சி முறைக்கு அமைவாக ஆட்சியை நடாத்தி வந்தாலும் ஒற்றையாட்சி தன்மையை கூட்டாட்சியிலும் இடம்பெறக்கூடிய வகையில் ஒரு கலப்பான அரசியலமைப்பை தயாரித்தது. அதாவது இங்கு சோஷலிஸம் என்ற பண்புக்கமைய சேர்ந்த குடியரசுகள் ஒவ்வொன்றும் தமது விருப்பத்தின் பேரில் பிரிந்து செல்லவும் யாப்பில் அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது. அத்துடன் அயல் நாடுகளுடன் குடியரசுகள் தூதரகத் தொடர்பு கொள்ளவும் உரிமை வழங்கப்பட்டது. ஆனால் அவை அன்று ஏட்டளவில் மட்டுமே காணப்பட்டது. நடைமுறையில் காணப்படவில்லை. இவ்வாறாக சோவியத் யூனியன் அரசியல் பொருளாதார கலாச்சார வளர்ச்சியில் சென்று கொண்டிருப்பதைக் கண்ட உலக ஏகாதிபத்திய நாடுகளுக்கிடையே பெரும் அதிர்ச்சி ஏற்பட்டது. இவ்வாறு வளர்ந்து வருகின்ற காலத்தில் இரண்டாம் உலக மகாயுத்தம் ஆரம்பமானது. இவ் யுத்தத்தில் ஜேர்மன், இத்தாலி, ஜப்பான் போன்ற நாடுகள் முதலாளித்துவத்திற்கு எதிரான யுத்தத்தில் ஈடுபட்ட போது பிரித்தானியா, அமெரிக்கா, பிரான்ஸ் போன்ற நாடுகளினால் யுத்தம் சோவியத் யூனியனையும் அதனைச் சார்ந்த கிழக்கு ஐரோப்பிய நாடுகளையும் நோக்கி திசை திருப்பப்பட்டது. இவ் யுத்தத்தை எதிர்பாராத சோவியத் யூனியன் நாட்டு மக்களின் அபிவிருத்திக்கு பயன்படுத்த வேண்டிய மூலதனம் முழுவதையும் இரண்டாம் உலக மகாயுத்தத்தில் செலவிட்டது. இதன் காரணமாக சோவியத் யூனியன் பாஸிச, நாஜிஸ வாதிகளின் போரிலே வெற்றியைப் பெற்றாலும் பொருளாதார ரீதியில் முழுக்க முழுக்க பலவீனப் படுத்தப்பட்டது. ஏனெனில் பொருளாதாரத்திற்கு பயன்படவேண்டிய மூலதனங்கள் அனைத்தும் ஜேர்மனிக்கு எதிரான யுத்தத்திற்கு பயன்படுத்தியமையே ஆகும். இது சோவியத் யூனியனை பொருளாதார ரீதியில் பின்னடையச் செய்தது.

இரண்டாம் உலக மகாயுத்தத்தைத் தொடர்ந்து பல நாடுகள் ஐரோப்பிய சர்வதிகாரத்திலிருந்து தப்பிக் கொள்ளவும் சோவியத் யூனியன் தனது பலத்தையும், பாதுகாப்பையும் கருத்திற் கொண்டு இணையும் நாடுகளை அங்கத்துவ குடியரசாக இணைத்து மொத்தம் பதினாறு குடியரசுகளைக் கொண்ட உலகில் உள்ள வல்லரசில் ஒன்றாக பரிணமித்துக் கொண்டது. பின்னர் சோவியத் யூனியனில் இருந்த காரேலோ பின்லியக் குடியரசு 1956ல் அகற்றப்பட்டது. அப்பகுதிகள் ரஷ்ய சோவியத்துக் கூட்டுச் சோஷலிஸக் குடியரசுடன் (R. S. F. S. R.) இணைக்கப்பட்டது. 1953ம் ஆண்டு ஸ்ராலின் காலமானதைத் தொடர்ந்து மாற்றத்திற்கான கொள்கைகள் முன்னிலைக்கு வந்தன. ஸ்ராலின் மறைவைத் தொடர்ந்து 1955ம் ஆண்டு வரை பதவியில் இருந்த இடைக்கால ஆட்சியாளர்களான புல்கானின், மலன்கோவ் ஆகியோர் உடனடிச் சூழலைச் சமாளிப்பதில் அக்கறை செலுத்தினர். இவர்களின் பின் குருசேவ் பதவிக்கு வந்தார். ஸ்ராலினை அம்பலப் படுத்தல கொம்யூனிஸக் கட்சியை ஜனநாயகமாக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல் என்ற இரு கொள்கையின் அடிப்படையில் மிக்கோயான் குழுவினர் குருசேவுக்கு ஆதரவு அளித்தனர். இதனை ஒப்புக்கொண்டு இக் கொள்கையுடையவர்களின் ஆதரவையும் பெற்றுப் பதவிக்கு வந்த குருசேவ் முதலாவது கொள்கையாக ஸ்ராலினை அம்பலப்படுத்தல் என்பதை நிறைவேற்றினாரே தவிர கட்சியை ஜனநாயகமயப்படுத்தக் கூடியளவு மாற்றங்கள் நிகழவில்லை.

குருசேவின் பின்பு பிரஸ்நேவ் 1964ம் ஆண்டு பதவிக்கு வந்தார். ஸ்ராலின் மீண்டும் சோவியத்தில் உறுதிப்படுத்தப்பட்டார். மாற்றங்கள் சோவியத் யூனியனுக்குள்ளோ அன்றி சோஷலிஸ முகாமைக்குள்ளே நிகழவில்லை. சோஷலிஸ முகாம் இரண்டாக உடைந்தது. 1959தான் குருசேவ் காலத்தில் உடைந்த சீன சோவியத் உறவு பிரஸ்னேவ் காலத்தில் மீண்டும் விரிவடைந்தது. 'சோஷலிச முகாம்' இரண்டாக உடைந்ததைத் தொடர்ந்து முதலாளித்துவ முகாமுடனான போட்டி பலவீனம் அடைந்தது. சோஷலிஸ அரசுகள் தம்மை ஒரு முகாமாக அமைத்து முகாமுக்கான பொதுவான பொருளாதார உறவையும், வளர்ச்சியையும் ஈட்ட முடியவில்லை. இவ் உறவு விரிசலானது கைத்தொழில், தொழில் நுட்பமுன்னேற்றத்திற்கு பின்னடைவை ஏற்படுத்தியது. மேற்குலகுடன் அதாவது அமெரிக்காவுடன் ஒப்பிடுகையில் சோவியத் யூனியனுடைய பொருளாதாரம், கைத்தொழில், தொழில் நுட்பம், உற்பத்தித்திறன் குறைந்த தரத்திலேயே இருந்தன. ஆனால் முதலாளித்துவ உலகமான மேற்குலகப் பொருளாதாரம், கைத்தொழில், தொழில்நுட்பம், உற்பத்தித்திறன் என்பவற்றில் முன்னோக்கி நகர்ந்து கொண்டு இருந்தது. குறிப்பாக தகவல் விஞ்ஞானம், தகவல் தொழில்நுட்பம் என்பவற்றுடன் சோவியத் யூனியனால் போட்டியிட முடியாது இருந்தமை. முதலாளித்துவ நாடான அமெரிக்காவில் ஆயிரம் மனிதர்கள் செய்யும் வேலையை ஒரு இயந்திர மனிதன் செய்யக் கூடிய தொழில்நுட்பம் முன்னேற்றம் அடைந்திருந்தது. இதைவிட அமெரிக்கா ஏகாதிபத்தியத்திற்கு உட்பட்டு இருக்கும் ஜப்பான் கூட தொழில் நுட்பத்தில் முன்னணியில் நிற்கிறது. ஏனெனில் அங்கு இயந்திர மனிதனை இயந்திர மனிதன் செய்யக் கூடிய வகையில் தொழில்நுட்பம் முன்னேறியுள்ளது. ஜப்பானிய ரொஷிபா கொம்பனியினது தயாரிப்பானது அமெரிக்க தயாரிப்பைவிட ஏழு மடங்கு சுரம் வாய்ந்ததாக காணப்படுகிறது. அமெரிக்காவுடன் போட்டியிடக்கூடிய பொருளாதார வல்லரசாக ஜப்பான் உள்ளது. ஜப்பானுக்கு மனித வளம் குறைவு. அதாவது சனத்தொகை குறைவு. சனத்தொகையும் இருக்குமானால் அமெரிக்காவால் முதன்மையான வல்லரசு என்ற நிலையினை அடைய முடியாமல் இருக்கும். எனவே தான் அமெரிக்கா அரசியல் ரீதியான தந்திரத்தினால் ஜப்பானை தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்து பொருளாதார ரீதியில் அதாவது வளர்ச்சியை தடை செய்கின்றது. என்றாலும் ஜப்பானது வளர்ச்சி பற்றி அமெரிக்காவிடம் அச்சமுண்டு. ஜப்பான் மனிதவளமுடைய நாடான சீனாவுடன் இணையுமாயின் அது தனக்கு பாதகமாக அமையும் என்பதில் அமெரிக்கா கண்ணும் கருத்துமாக இருக்கிறது.

இவ்வாறாக சோவியத் யூனியன் அனைத்திலும் மேற்குலகுடன் ஒப்பிடுகையிலே பின்தங்கிய நிலைக்கு சென்றமைக்கான காரணம் அங்கு ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்ட ஒவ்வொரு ஆட்சியாளனதும் நடவடிக்கையே ஆகும். சோவியத் யூனியனில் ஆட்சிக்கு வந்த லெனின் தவிர்ந்த ஒவ்வொரு ஆட்சியாளனும் ''சோஷலிசம்'' என்ற போர்வையில் சர்வாதிகார ஆட்சியையே அமைத்துச் சென்றார்கள். இவ்வாறான ஆட்சிமுறையில் இரும்புத்திரை கொள்கையே பயன்படுத்தப்பட்டது. அதாவது சோவியத் யூனியனில் வாழ்ந்த மக்களுக்கு வெளியுலகு பற்றி எதுவுமே அறியாத ஒரு நிலையிலேயே காணப்பட்டார்கள். இவ்வாறாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்சி அமைந்து வரும் காலகட்டத்தில் பொருளாதார வீழ்ச்சியுடன் கூடிய வறுமை நிலை அங்கு நிலவியது. சோவியத் யூனியனும், கிழக்கு ஐரோப்பாவும் பொருளாதார, கைத்தொழில், தொழில் நுட்பம் என்பவற்றில் முதலாளித்துவ சக்திகள் அடைந்த வளர்ச்சிக் கட்டத்தின் அடிப்படையைக் கூட கண்டறிய தவறியமையே ஆகும். இதற்குக் காரணம் சோவியத் யூனியனையும் வெளியுலகையும் பிரித்து நின்ற இரும்புத் திரையே. இதன் வெளிப்பாடாகவே கொப்பச்சேவும் அவரால் அறிமுகப்படுத்தப்பட்ட பெரஸ்ரொயிகாவும் அதனைச் செயற்படுத்த கிளாஸ் நோட்ஸ்சும் சோவியத் யூனியன் மக்கள் கண்களில் தென்பட்டன.

அதாவது 1985ம் ஆண்டு கொப்பச்சேவ் கட்சியின் பொது செயலாளராக வந்ததைத் தொடர்ந்து மாற்றம் கருக்கொள்ளத் தொடங்கியது. பெரஸ்ரொய்கா என்ற பெயரில் இவர் எழுதி முன்வைத்த நூல் 1987ல் உலக அரங்கில் முதன்மை பெறத்தொடங்கியது. பெரஸ் ரொய்கா ஏன் கொண்டுவரப்பட வேண்டி ஏற்பட்டது என்பதற்கான விளக்கமளிக்கையில் கொர்ப்பச்சேவ் பின்வருமாறு கூறினார்: "ஐந்து ரொட்டித்துண்டுகளை வைத்துக் கொண்டு இருபதாயிரம் யூதர்களுக்கு உணவளிக்கக்கூடிய வல்லமை யேசுநாதரிடம் இருந்தது. ஆனால் அப்படிப்பட்ட வல்லமை எம்மிடம் இல்லை" என்றார். இவர் திறந்த பொருளாதாரத் தன்மை கொண்ட மறுசீரமைப்புக் கொள்கையை முன்வைப்பதற்கான காரணம் மக்களின் அன்றைய அவலநிலையே. அதாவது சோஷலிசத்தின் தாய் என வர்ணிக்கப்பட்ட அந்நாட்டில் அன்று மக்கள் ஒரு வேளைச் சோற்றுக்கே வழியில்லாத கொடிய வறுமையில் வாடியதோடு உணவுப் பஞ்சம் தலைவிரித்தாடியது. வைத்தியசாலைகளில் மருந்து இல்லை. பல மணி நேரம் காத்து நின்று பாணை வேண்டிய பரிதாப நிலை சோவியத் யூனியனில் அன்று நிலவியது. அத்துடன் மக்களின் அன்றாட தேவையைப் பூர்த்தி செய்யும் பொருட்கள் சந்தையில் இல்லை; தொழிலாளர்களுக்கு ஊதியம் கொடுக்க திறைசேரியில் பணமும் இல்லை. இந் நிலைமையைச் சமாளித்து வறுமையைப் போக்குவதற்கு கொர்ப்பச்சேவ் எடுத்த முயற்சியிலே பெரஸ் ரொய்கா மறுசீரமைப்புக் கொள்கை ஆகும். இம் மறுசீரமைப்புக் கொள்கை இன்று உலகையே மறுசீரமைத்து விட்டது.

இவ்வாறு கொர்ப்பச்சேவால் முன்வைக்கப்பட்ட மறுசீரமைப்புக் கொள்கை தமக்கு ஆபத்தானது என அமெரிக்கா எண்ணியது. இக் கொள்கையை முன்வைத்ததனால் கொர்ப்பச்சேவ் மேலைத்தேச நாடுகளில் சிலரால் சமூக ஜனநாயகப் புரட்சியாளன் என அழைக்கப்பட்டார். கொர்ப்பச்சேவ்வால் முன்வைக்கப்பட்ட இக்கொள்கை தமது ஏகாதிபத்தியத்திற்கு அச்சுறுத்தலாக அமையுமா என பரிசோதித்து அதற்கான மாற்று நடவடிக்கையில் ஈடுபட வேண்டிய பொறுப்பு அமெரிக்காவிற்கு இருந்தது. இதன் காரணமாக அமெரிக்கா கொம்யூட்டரின் உதவியுடன் நாட்டிலுள்ள புத்தி ஜீவிகளையும் இணைத்து பென்ரகன் நடத்திய ஆய்வில் கொர்ப்பச்சேவ் முன்வைத்துள்ள பெரஸ்ரொய்கா வெற்றி அளிக்குமானால் 2010 ஆண்டளவில் சோவியத் யூனியன் பெரிதும் முன்னேறிவிடும் என்றும் அது அமெரிக்காவை வெல்லக்கூடிய ஒரு நிலையை அடைந்துவிடும் என்றும் கொம்யூட்டரின் உதவியுடன் கண்டறியப்பட்டது. எனவே சோவியத் யூனியனைச் சிதைப்பதன் மூலம் அதனுடைய எதிர்காலத் தாக்கத்தில் இருந்து தப்பிக் கொள்வதோடு முதலாளித்துவ ஏகாதிபத்தியத்தினை தொடர்ந்து நிலைநிறுத்த செய்யலாம் என அமெரிக்கா எண்ணியது. அமெரிக்காவின் மறைமுக நடவடிக்கையாக சோவியத் யூனியனின் ஒரு லட்சத்து நாற்பதாயிரம் நிரந்தர அங்கத்தவர்களைக் கொண்ட கம்யூனிசக் கட்சியிலும் அமெரிக்க உளவுப் படையான C.I.A. யின் மறைமுகமான ஊடுருவலையும் ஏற்படுத்திக் கொண்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு அமெரிக்காவின்நடவடிக்கை சந்தர்ப்ப வாதத்தை நோக்கியதாகவே காணப்பட்டது. எத்தருணத்தில் சோவியத் யூனியன். தன்னிடம் அடிபணிகின்றதோ அத்தருணத்தை சாதகமாக பயன்படுத்தி தனது நோக்கத்தை நிறைவு செய்திட வேண்டும் என்ற எண்ணம் அமெரிக்காவிடம் காணப்பட்டது. அதற்கு சாதகமாக அமைவதாகவே கொர்ப்பச்சேவின் செயற்பாடுகளும் நடவடிக்கைகளும் அமைந்தன. சோவியத் யூனியனில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியைப் போக்குவதற்காக கொர்ப்பச்சேவ் உலக நாடுகளிடம் கையேந்தி பிச்சை கேட்கும் நிலைக்குத் தள்ளப்பட்டார். இந்நெருக்கடியைப் போக்குவதற்காக கொர்ப்பச்சேவ் உலக நாடுகளிடம் நிதியுதவியை எதிர்பார்த்து அதிலும் அமெரிக்காவிடம் கூடுதலான நிதியுதவியாக 2,500 அமெரிக்க டொலர்களை கடனுதவியாகவும் அதில் 100 டொலர்களை மனிதாபிமான முறையில் தந்துதவும் படியும் வேண்டி நின்றார். இதனைச் சாதகமாகப் பயன்படுத்திய அமெரிக்கா சோவியத் யூனியனிலுள்ள பொருளாதார நெருக்கடியைப் போக்குவதானால் அங்கு ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடியை தீர்த்து வைக்க வேண்டும் என்று நிபந்தனை விதித்தது. அதற்கு உடன்பட்ட கொர்ப்பச்சேவை ஒரு கைப்பொம்மையாக பாவித்து தன்னிடமிருந்த உள்ளார்ந்த ரீதியான திட்டத்தை கொர்ப்பச்சேவின் மூலம் அமுல்படுத்தியது. அவ்வாறே கொர்ப்பச்சேவ் முன்வைத்த உலக அமைதிக்கான சமாதான திட்டங்களும் அணு ஆயுத குறைப்பு பற்றிய கருத்துகளும் அமெரிக்கா நோக்கிய அழைப்புக்களும் ஐரோப்பாவிலும், முழுஉலகத்திலும் கொர்ப்பச்சேவை உலக சமாதானத்தின் தூதனாகக் காட்டியது. கொர்ப்பச்சேவ் ஒரு வகையில் உலகின் அமைதி, பாதுகாப்பு, சமாதானம், பரஸ்பரம், அன்னியோன்னியம் போன்றவற்றின் நவீன இரட்சகராயும் உலகிற்கு காட்சியளித்ததனால் சமாதானத்திற்கான நோபல் பரிசினை மேற்குலக நாடுகளிடமிருந்து பெற்றுக்கொண்டார்.

பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்கு அமெரிக்காவிடம் நிதியுதவி கேட்ட போது அமெரிக்கா அதனை மறுக்கவில்லை. ஏனெனில் அதனை மறுக்குமானால் உலக சமாதானத்திற்கான எதிரியாக அமெரிக்கா நிலைநிறுத்தப்படும் என எண்ணியது. எனவே கொர்ப்பச்சேவால் முன்வைக்கப்பட்ட கொள்கையை ஏற்று அதனை உச்ச கட்டத்திற்கு தள்ளுவதன் மூலம் சோவியத் யூனியனை பிளவுபடச் செய்யலாம் என அமெரிக்கா எண்ணியது. அவ்வாறே கொர்ப்பச்சேவின் கொள்கை ஏற்கப்பட்டது. இக் கொள்கைஏற்கப்பட்டதன் நிபந்தனையாக சோவியத் யூனியனின் அரசியலில் பின்வருவனவற்றை மேற்கொள்ளுமாறு கொர்ப்பச்சேவ் வற்புறுத்தப்பட்டார். அவையாவன நாட்டில் ஜனநாயக ரீதியான மாற்றங்களைக் கொண்டு வர வேண்டும் என்றும் மேலும் படைக்குறைப்பு, படை வாபஸ் போன்ற கொள்கைகளை கொர்ப்பச்சேவ் முதலில் அமுல்படுத்திக் காட்ட வேண்டும் என்றும் வற்புறுத்தியதோடு மட்டுமல்லாது 'சோசலிசம்' என்ற பண்புக்கமைய ஒவ்வொரு குடியரசையும் சுயவிருப்பில் பிரிந்து போகவும் உரிமை வழங்குவதோடு அவற்றின் சுயநிர்ணய உரிமைப்படி அங்கீகரிக்க சொல்லியும் கேட்டுக் கொண்டது. சோவியத் யூனியனுக்குத் தேவைப்பட்ட பிரதான விடயம் அபிவிருத்திக்கான உதவி; அவ் உதவியைப் பெறுவதற்காக கொர்ப்பச்சேவ் பல கோடி டொலர் பணத்தால் இரண்டாவது உலக மகாயுத்தத்தில் ஜப்பானிடம் இருந்து கைப்பற்றிய மூன்று தீவுகளையும் மீண்டும் ஜப்பானிடம் ஒப்படைத்துவிட முடியுமென இரந்து கேட்டார்.

இவரின் இவ்வாறான நடவடிக்கைகளால் இவர் கம்யூனிஸக் கட்சியின் சீற்றத்துக்கு உள்ளாக வேண்டி ஏற்பட்டது. இதனைத் தொடர்ந்து இவரால் கொண்டு வரப்பட்ட பெரஸ்ரொய்கா மறுசீரமைப்பு திட்டத்தின் மூலம் வழங்கப்பட்ட அளவு கடந்த சுதந்திரத்தைப் பயன்படுத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பால்டிக் பகுதியைச் சேர்ந்த லித்வேனியா, லத்வியா, எஸ்தோனியா ஆகிய மூன்றும் தனித்தனியாகப் பிரிந்து சென்றன. பல உலக நாடுகள் இவற்றை அங்கீகரித்தன. ஏகாதிபத்திய எதிர்ப்பு, சோஷலிஸத்தைப் பாதுகாப்பதும், வளர்ப்பதும் எனக்கூறி சோவியத் யூனியனின் தலைமையில் அமைக்கப்பட்ட ''வார்சோ'' என்னும் அணியான இராணுவக் கூட்டு கலைக்கப்பட்டது. இவ்வாறாக இவ்வணி கலைக்கப்பட்டதும் இக் கூட்டின் பலத்தினை நம்பியிருந்த நாடுகளிடையேயும் மற்றும் சோவியத் யூனியனிலிருந்த குடியரசுகளுக்கிடையேயும் பதட்டம் நிலவியது. மேலும் பதட்டம் நிலவியமைக்கான முழுக்காரணம் அமெரிக்க இராணுவக் கூட்டமைப்பான ''நேட்டோ''வுடன் ஒன்று சேருவோம் என கொர்ப்பச்சேவ் கூறியதுமேயாகும். இதனைத் தொடர்ந்து இதுவரை பாதிக்கப்படாத குடியரசுகளிடமிருந்தும் பிரிவினைக் கோரிக்கைகள் வந்தன. முதலில் செயலில் இறங்கிய உஸ்பெக்இஸ்தான் ''வார்ச்சோ'' இராணுவக் கூட்டமைப்பு கலைக்கப்பட்டதும் அவ் இராணுவத்தில் ஒரு பகுதியை தன தாக்கி கொண்டதுடன் K. G. P. யான உளவுப்படையையும் தன்னகத்தே வைத்துக் கொண்டது. இவ்வாறு நடக்கும் போது சோவியத் யூனியன் சிதறுவதைத் தடுக்க முடியாது எனத் தோன்றுகிறது. தான் அதிபர் பதவியிலிருந்து இராஜினாமா செய்துவிடப் போவதாக கொர்ப்பச்சேவ் மிரட்டினார்.

இவ்வாறாக குடியரசுகள் செல்வதைத் தடுத்து நிறுத்த வக்கில்லாத கொர்ப்பச்சேவ் போல்டிக் குடியரசுகள் தவிர்ந்த பன்னிரெண்டு குடியரசுகளையும் கொள்கை ரீதியில் பிணைத்து இறைமையுள்ள சோவியத் சம்மேளனம் என்ற அமைப்பினை உருவாக்கும் பேரணையை முன்வைத்தார். கிறம்ளினில் அதாவது சுப்றீம் சோவியத்தில் குவிக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தைப் பரவலாக்கி குடியரசுகளுக்கு வழங்கும் அதேவேளை பன்னிரெண்டு குடியரசுகளும் ஒரு குடையின் கீழ் இயங்க வழி சொல்லக்கூடிய ஒரு அரசியல் திட்டத்தையும் அறிவித்தார். இந்த திட்டத்தை ஆராய்ந்து முடிவெடுக்க கூட்டப்பட்ட மகாநாட்டிற்கு உக்றேன் உட்பட ஏழு குடியரசுகள் சமுகமளிக்கவில்லை. இதனால் இத்திட்டம் தோல்வியில் முடிந்தது. ஐந்து கோடியே முப்பது லட்சம் மக்களைக் கொண்ட உக்ரேன் விவசாய வளம் கொண்ட ஒரு நாடு. இந் நாடு சோவியத் யூனியனில் ரஷ்யாவுக்கு அடுத்த இரண்டாவது பெரிய குடியரசாக திகழ்ந்தது. இதில் செப்ரெம்பர் 15ல் நடந்த கருத்துக் கணிப்பு பிரிவினைக்கு ஆதரவு தெரிவித்தால் கொர்ப்பச்சேவின் கதை முடிந்திருக்கும். சோவியத் யூனியன் சிதறினால் அனைத்து குடியரசுகளிடமிருந்தும் இடம் பெற்ற ஒரு லட்சத்து நாற்பதினாயிரம் நிரந்தர அங்கத்தவர்களைக் கொண்ட கட்சியும் அழிந்து போகும் என்பது எதிர்பார்க்கக்கூடியதே. இதனாலேயே கட்சியின் பொதுச் செயலாளர் பதவியிலிருந்து கொர்ப்பச்சேவ் ராஜினாமாச் செய்தார். இக்கட்சிக்கு எதிரானவர் கூட இவ்வாறு நடக்குமென எதிர்பார்க்கவில்லை. இவ்வாறே ரஷ்யா தவிர்ந்த ஏனைய குடியரசுகள் ஒவ்வொன்றும் பிரிந்து சென்றதுடன் ஐக்கிய நாடுகள் சபையின் அங்கீகாரத்தையும் உலக நாடுகளின் அங்கீகாரத்தையும் பெற்றதுடன் ஒவ்வொரு நாடும் தமக்குத் தமக்கென ஒவ்வொரு ஜனாதிபதியையும்தெரிவு செய்து கொண்டது. இதனால் தற்போது ஜனாதிபதி இல்லாத நாடு உண்டு. ஆனால் நாடு இல்லாத ஜனாதிபதி என்ற பெருமைக்குரியவராக கொர்ப்பச்சேவ் காணப்பட்டார்.

அமெரிக்காவை இராணுவ ரீதியாக எதிர்கொள்ளக் கூடிய வலிமை சோவியத் யூனியனுக்கேயுண்டு. ஆனால் ஏனைய வலிமைகள் சோவியத் யூனியனில் இல்லாமையே பிளவுபடக் காரணமாய் அமைந்தது. பெரஸ்ரொய்கா மறுசீரமைப்பு திட்டம் சோவியத் யூனியனில் அறிவிக்கப்பட்ட போது முதலில் அமெரிக்கா திகைத்தது. அந்நேரத்தில் சலசலப்பைக் கண்டு அஞ்சாத ஜனாதிபதியான ஜோர்ஜ் புஷ் காணப்பட்டமையால் அவர் அத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திட்டத்திற்கு மேலான ஒரு திட்டத்தை வகுத்து இத் திட்டத்தை மழுங்கடிக்கச் செய்தார். சோவியத் யூனியனை சின்னா பின்னம் அடையச் செய்துவிட்டார். இது அமெரிக்கா அரசியல் ஸ்திரப்பாடு மிக்க நாடெனக் காட்டியது. இதனைத் தான் முன்பே லெனின் கூறியிருந்தார். அதாவது உலகத்தில் ஏகாதிபத்தியம் இருக்கும் வரை ஒரு நாட்டிலும் சோஷலிஸம் தடையின்றி வளரமுடியாது என்றார். மாக்ஸிசம், எதிர்காலத்தில் அமைய இருக்கும் சமவுடமை பற்றி பின்வருமாறு குறிப்பிட்டது அதாவது எதிர்காலத்தில் அமைய இருக்கும் சமவுடமைச் சமூகத்தில் மனிதன் விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சியினால் தனது தேவைக்கு மிஞ்சிய உற்பத்தியை செய்துவிடுவான் என்றும் பொருட்களின் நிறைவில் அங்கு அனைவருக்கும் போதிய பங்கீடு நிகழும் என்றும் இதனால் போட்டியற்ற பொதுவுடமைச் சமூகம் நிலவ முடியும் என்று கூறுகிறார். ஆனால் அது பொய்த்துப் போகவில்லை அவ்வாறே சமவுடமை நாடான சோவியத் யூனியனில் மேலே கூறப்பட்ட முன்னேற்றம் காணப்பட்டாலும் அங்கு உற்பத்திப் பொருட்கள் சமமாக சோவியத் யூனியனின் 15 குடியரசுகளிடையேயும் பங்கிடப்படவில்லை. இதற்கு கல்டோர் என்பவர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். சோவியத் யூனியன் தன்னை சோஷலிஸம் எனக் காட்டியதே தவிர சோஷலிஸத்துக்குரிய அரசியல் பொருளாதாரத்தை நடைமுறையில் சரியாக கைக்கொள்ளவில்லை என்று கூறுகின்றார்.

அரசியல் அறிஞர்கள் சோவியத் பிளவின் விளைவால் ஏற்படக்கூடிய பின் விளைவுகளை எதிர்வு கூறலாக கூறியுள்ளனர். அவையாவன இதன் பிளவால் சோவியத் யூனியனில் இருந்து பிரிந்து சென்றுள்ள ஐந்து இஸ்லாமியக் குடியரசுகளும் மத்திய ஐரோப்பாவிலுள்ள ஏனைய இஸ்லாமிய நாடுகளுடன் இணையுமாயின் அது அமெரிக்காவின் படைப்பலத்தை விட பன்மடங்கு பலங் கொண்ட வல்லரசாக உலகில் தோன்றும் என்பதில் ஐயமில்லை என்றும் அவ்வாறு இஸ்லாமிய குடியரசுகள் இஸ்லாமிய நாடுகளுடன் இணையுமாயின் அது அமெரிக்காவிற்கு பெரும் அச்சுறுத்தலாக அமையும். அத்துடன் இவ்வாறு பிரிந்துள்ள ஒவ்வொரு குடியரசுகளும் நாடுகளாக அங்கீகரிக்கப்பட்டு விட்டதனால் அவை தம்மை உலக நாடுகளிடமிருந்து பாதுகாத்து கொள்ளவும் பலம் பொருந்திய நாடுகளாக இராணுவ ரீதியான பலத்தை அடைந்துக் கொள்ளும் என்றும் அவ்வாறே பொருளாதாரத்தையும் அமைத்துக் கொள்ளுமாயின் அது பொருளாதாரரீதியிலும் தன்னிறைவு அடையும் என்பதில் ஐயமில்லை. அவ்வாறே இராணுவ, பொருளாதார ரீதியிலும் முண்ணணியில் நிற்கும் போது அவை ஒவ்வொரு நாடுகளிடமும் இருந்து தொழில் நுட்பத்தையும் பெற்று தொழில் நுட்பரீதியிலும் முன்னணியில் நிற்கும். அவ்வாறே ஏனையவற்றிலும் முன்னணியில் நிற்குமிடத்து அவை பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் நோக்குடன் மீண்டும் கொர்ப்பச்சேவின் தலைமையில் ஒன்று சேரவும் விரும்பலாம். அவ்வாறு ஒன்று சேருமிடத்து அது அமெரிக்காவிற்கு சகல ரீதியிலும் அச்சுறுத்தலாக அமையும். இவை எதிர்காலத்தில் ஒன்று சேரும் என்று கூறுவதற்கு மிகவும் சிறப்பான காரணம் ஒன்று கூறலாம். சோவியத் யூனியனின் 107 இனத்தையும் 11 சிறு இனத்தையும் கொண்ட ஒரு பல்லின நாடு அங்கே இறுதியாக இருபத்தேழரைக் (27 1/2) கோடி இறுதியாக எடுத்த குடிசன மதிப்பீட்டின் மூலம் வாழ்ந்தார்கள் என்பது அறிய முடிந்தது. அதிலும் இன்று ரஷ்யாவில் பதினேழு கோடி மக்கள் வாழ்கின்றார்கள். ஆகவே கூடுதலான கம்யூனிஸ்டுகள் ரஷ்யாவில் வாழ்கிறார்கள். அவர்கள் ஒரு வேளை கூட்டுச்சேர விரும்பலாம். ஆனால் கம்யூனிஷத்தை கடைப்பிடிக்காமல் ஒன்று சேர இடமுண்டு. இவ்வாறே சோவியத்தின் மறுசீரமைப்புத் திட்டமான மெஸ்ரொய்கா உலகினை சீர்குலைத்தது போல் மீண்டும் மறுசீரமைக்கலாம் என அரசியல் அவதானிகள் எதிர்வு கூறியிருக்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துப் பண்பாட்டில் பெண்களின் நிலைப்பாடு

கா. பிரேமாஜனி
ஆண்டு 13 E
கலைப்பிரிவு

இல்லறத்தை நல்லறமாக நடத்த வேண்டிய பெண் எப்படி வாழ வேண்டும் என்பதை இந்து தர்மம் விளக்குகிறது. ''கார்வேஷதாசி, சரனேஷ மந்திரிஷவேவ தரித்திரி, போத்யேஷ மாதா, ரூபேஷ லக்ஸ்மி, சயனேஷ வேஷா, சமதர்ம பக்தா என்கிறது சுலோகம் இச்சுலோகத்தின் கருத்து யாதெனில் பெண் எனப்படுபவள் சேவை செய்வதிலே தன்னை அடிமையாக அர்ப்பணிக்கின்றாள். மதியூட்டும் மதிநலம் கொண்ட மந்திரியாக விளங்குகின்றாள், வேதகாலம் தொட்டே பெண்களை கிருகலக்ஸ்மி என்பார்கள். அவள் உருவிலே திருவுடையவளாக உதவுகின்றார். கொண்டிழுத்து குடும்பம் நடாத்தும் பாங்கில் பொறுமைக்கோர் பூமாதேவியாகி அனைவர் குறை குற்றங்களையும் பொறுத்து குற்றவேள் செய்கின்றாள் களைத்த உடலுக்கு தெம்பூட்டி சோர்ந்த மனதிற்கு மகிழ்வூட்டி ஆதரவு செய்வதில் அன்னையாகவும் மஞ்சத்தில் கணிகை மகளாகவும் மகிழ்வூட்டுபவளே மாதரசியாவாள் என விளம்புகின்றது.

''தற்காத்து தற்கொண்டாற்
பேணி - தகைசான்ற
சொற்காத்து சோர்விலாள் பெண்''

என்று பகர்கின்றார் வள்ளுவர் பெருந்தகை. இவ்வுலகத்தை தோற்றுவித்து ஆதிபரம் பொருளே தன்னில் பாதியாக பெண்ணை இணைத்து வாழ்வில் பெண்ணின் பெரும் பங்களிப்பை உணர்த்தி விட்டார்: இதற்கு மேல் பெண் எனப்படுபவள் மேற்கொள்ள இலட்சணங்கள் அனைத்தோடும் காலத்தோடு ஒட்டிய நோக்கில் கணவனின் வருவாய்க்குள் வாழ்வை நடாத்தி இல்லாள் அகத்திருக்க இல்லாதொன்றில்லை எனும் வாக்குக்கு விளக்கமாக போதுமென்ற மனதைப் பொன்போலப் பெற்ற பெண்ணே பெண்ணாவாள்.

''இருந்து முகந்திருத்தி ஈரொடு
பேன்வாங்கி
விருந்து வந்ததென்று விளம்ப
ஆடினாள்
பாடினாள் ஆடிப்பழந்தாம்
கூடினாள் ஓடேட்டத்தான்''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று ஔவையார் குறிப்பிடும் பெண்ணும் உருவத்தால் பெண்ணேயாவாள் அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு எனும் அருங்குணங்களோடு பொறுமை, அன்பு, பணிவு, இரக்கம் ஆகிய குணவியல்பு களைத் தன்னகத்தே கொண்டவளே பெண் என்று பெருமையோடு கூறத்தக்க வளாவாள்.

## சமூகத்தில் பெண்களின் பங்களிப்பு

தன்னைத் தேய்த்து வாசனையையும் குளிர்ச்சியையும் நல்கும் சந்தனம் போல வும், தான் குறைந்து கொண்டே ஒளி கொடுத்துக் கொண்டிருக்கும் மெழுகு வர்த்தி போலவும் இல்லக விளக்காக விளங்குகின்றார்கள் பெண்கள். வீரர்கள், தீரர்கள், வித்துவான்கள், மகாமேதைகள், ஆராச்சியாளர்கள், கவிஞர்கள் போன்ற பல்லாயிரமான அறிஞர்கள் தோன்று வதற்கு பெண்ணே மூலகாரணமாக அமை கிறாள். வீரசிவாஜியைப் பெற்றெடுத்த வளும், மகாத்மா காந்தியை வளர்த் தெடுத்தவளும் அன்னையே ஆவார்கள். இன்று எல்லோராலும் போற்றப்படும் விஞ்ஞானி எடிசன் பாலர் பாடசாலையில் கல்வி கற்கும் காலத்தே அவரைக் கற்பித்த ஆசிரியர் ஏசியவிதம் பிடிக்காமையால் வீட்டிலே கல்வியறிவோடு ஆய்வாளருக் குரிய சிந்தனை வளத்தையும் பெருக்கிக் கற்பித்தவர் அவரின் அன்னையே ஆவார்.

பல்வேறு நெருக்கடிகள் சூழ்ந்த இன் றைய காலசட்டத்திலே கணவனுடன் சரி நிகர் சமானமாகத் தானும் பொருள் தேடி வருவாய்க்கும் வாய்ப்பளிக்கிறாள். வேலைக்குச் செல்லும் பெண்களென்றால் அவர்கள் வீட்டுக் கடமைகளைப் புறத் தெரிந்தவர்களல்லர். வேலைக்குச் செல்லும் ஆண்மகன் வீடு திரும்பியதும் தேநீர் அருந்தி, பத்திரிகை வாசித்தல், நண்பர் களுடன் உரையாடல் போன்றவற்றில் பொழுதைக் கழிக்கின்றான். ஆனால் அலுத்துக் களைத்து வீடு திரும்பிய பெண் ணால் அப்படியிருக்க முடிவதில்லை. அவள் வீடு திரும்பியவுடன் கணவனுக்கும் தன்னை எதிர்நோக்கி நிற்கும் பிள்ளை களுக்கும் ஆவண செய்து நித்திரையில் கூட நிம்மதி உண்டென்ற நிலையின்றி உழன்றும் தன்னை எதிர்நோக்கும் கடமை களை தனது குடும்பத்திற்காக சுமை களைச் சுமையென்று கருதாது மனமகிழ் வோடு, மனத்துணிவோடு செயலாற்றி அமைதியடைகின்றாள், மாதரசியவளே எனக்கூறின் மிகையாகாது.

அத்துடன் நின்றுவிடாது,

''இல்வாழ்வான் என்பான்
இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றில் நின்ற துணை''

இல்வாழ்வான் இன்முகத்தோடு இல் வாழ்வானாக ஒழுகுதற்கு இல்லத்தரசியின் இன்முகம் வேண்டும். பொதுவாக அறங் கள் அனைத்தையுமே இல்வாழ்வானுக் காக இல்லத்தரசியே ஆற்றக் கடமைப் பட்டவளாகின்றாள். திரைகடலோடித் திரவியம் தேட அவன் முனையும் பொழுது அறவழியொழுகி அறத்தைச் சம்பாதித்து கொடுத்து இம்மைக்கும், மறுமைக்கும் இன்பத்தை தேடுபவள் இல்லத்தரசியே. இதனால் தான் ''மங்கையராகப் பிறந் திடவே நல்ல மாதவம் செய்திட வேண்டு மம்மா'' என்று கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை பாடி மகிழ்கின்றார்.

## குடும்பத்தில் பெண்களின் பங்களிப்பு

''மனைத்தக்க மாண்புடையவளாகித்
தற்கொண்டாள்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை''

இல்லறத்துக்கு வேண்டிய நற்குணங் களான துறவிகளைப் போற்றுதல், விருந் தினரை உபசரித்தல், வறியவர்கள் மேல் இரக்கம் காட்டுதல் முதலான நற்செய்கை களால் இல்லத்துக்கு ஒளியேற்றி மக்க ளைப் பெற்று மாண்புடன் நற்குண, நற்செயல்களுடன், நல்லறிவுள்ள மக்க ளாக வளர்த்தெடுத்து சமூக அந்தஸ்தில் நல்லவர், நல்லறிஞர் போற்றும் வண்ணம் வளர்த்தெடுப்பதில் பெண் பெரும் பங்கு வகிக்கின்றாள். அவ்வளவில் அவள் கடமை முடியவில்லை. அன்பும், பண்பும் நிறைந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைத்துனியாக யாவரிடமும் வேறுபாடோ, பக்கச் சார்போ இன்றி இன்முகத்துடன் பழகும் இயல்பு கொண்டவளாக தனது பிள்ளைகள், மருமக்கள் என்ற வேறுபாடின்றி தனது மகள்மாரின் கணவன்மாரையும், மகன்களின் மனைவிமாரையும் தன் பிள்ளைகள் போன்று வேறுபாடின்றி அவர்களுக்கு அனுபவத்தால் ஏற்பட்ட அறிவு முதிர்ச்சியுடன் கூறவேண்டிய புத்திமதிகளைக் கூறி நல்வழி நடாத்தும் பாங்கும் பெண்களிடம் அமைந்து விட்டால் பெண்ணிற் பெருந்தக்க யாவுள எனும் கூற்று அவளுடன் பொருந்தி அவள் கணவனுக்கு ஏறுபோல் வீறுநடை கொடுத்து இல்வாழ்க்கையை விளங்கச் செய்கின்றாள் பெண்.

இத்தகு மாண்புகளைக் கடந்து தன்குலப் பெருமையையே பேசிக்கொண்டு கணவனுடன் எதிர்வார்த்தையாடி பொறுமையின்றி பிள்ளைகளையும் துன்புறுத்தி அயலவருடன் வீண் குதர்க்கம் பேசி இல்லறக் கடமைகளை தவிர்த்து புறவேலைகளில் ஈடுபடும் பெண்ணானவள் ஒருவனுக்கு அட்டமத்துச் சனி தொடர்ந்தாலொப்ப வாழ்க்கையைச் சீரழிப்பவள். ஆகையினாலேதான் ஆன்றோர்கள், ஆவதும் பெண்ணால், அழிவதும் பெண்ணால் எனக் குறிப்பிட்டுள்ளனர்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வநிலையடையவேண்டுமானால் வளர்த்தக்காள் வாழ்க்கையைத் துணை பெற்றவனுக்கே அதுசாரும். இல்வாளிடத்தே நற்குண நற்செய்கைகள் இல்லையாயின் அழகு, செல்வம் முதலான பிற சிறப்பியல்புகள் பல இருந்தாலும் அவ்வாழ்க்கை மாட்சிமை அற்றதே. ஆகவே பெண்களின் பங்களிப்பு வாழ்வின் முக்கிய அம்சமாகும்.

## சமய வளர்ச்சியில் பெண்களின் நிலை

நின்ற சீர் நெடுமாறன் கொழுத்தக் கொண்டு கொண்டது விடாது தானும் சமணத்தைத் தழுவி அந்நிலைக்கு அந்நாட்டு மக்களையும் வழி நடத்திய பொழுது நாட்டையும் அரசனையும் சமண படுகுழியில் விழாது காத்தவர் மங்கையர்க்கு அரசியாகிய மங்கையற்கரசியார் அன்று மங்கையற்கரசியார் இல்லாவிட்டால் சைவம் தாழ்ந்து சமணம் மேலோங்கி நிலைபெற்றிருக்கும். அடுத்து சேக்கிழரால் புகழ்ந்து பாடப்பெற்ற இருகண்களில் ஒன்றாகிய அப்பர் சுவாமிகள் தருமசேனர் என்ற பெயரோடு சமணசாமியாராக மாறிய பொழுது திலகவதியாரின் வேண்டுதலினால் அல்லவா விபூதியும் பஞ்சாட்சர மந்திரமுமோதி திருநாவுக்கரசராக மேன்மையுற முடிந்தது. சிவபெருமானால் "அம்மையே வருக" என அழைக்கப் பெற்றவரான காரைக்காலம்மையாரும் சளைத்தவரல்லரே. மேன்மை கொள் சைவ நீதியை நிலையாகக் கணவனுக்கும் ஏனையோருக்கும் புலப்பட வாழ்ந்து காட்டிய பெருமைக்குரியவர். இத்துடன் அடியவர்க்கு அமுதூட்டும் இயற்கைக்கு வாய்த்த பத்தினி அவர். அறம் வழுவா முறையில் சைவம் தளைத்தோங்க அறஞ்செய்தமாதரசியாவார். அடியார்கள் அறவழியில் மேன்மைகொள் சைவநீதி நிலை பெறச் செய்தற்கு அவர்களது தர்மபத்தினிகளே காரணம் எனக் கூறின் மிகையாகாது.

இனி இன்றைய நிலைப்பாட்டை நோக்குவோம். காதிலே தோடு, கழுத்திலே தாலி, முகத்திலே மஞ்சள், குங்குமப் பொலிவோடு எங்கள் பண்பாட்டோடு விளங்கும் பெண்ணானவள் மேன்மை கொள் சைவ நீதியை நிலைப் பெறச் செய்யும் கண்ணானவள் எனக் கூறின் மறுப்பாருண்டோ எங்கள் இல்லங்களில் இருளகற்றி ஒளியேற்றும் மாதரார் மனம் வைத்தால் எங்கள் சமயம் அழியுமா? அழிக்கத்தான் முடியுமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழில் பிற மொழிச் சொற்கள்

ம. சாந்திமலர்
ஆண்டு 13 E
கலைப்பிரிவு

தமிழில் பிற மொழிக் கலப்பினால் மொழியின் தூய்மை கெடும் ஆகையால் தனித் தமிழாக இயங்க வேண்டுமென்பது ஒரு சாராரின் கொள்கையாகும். பிற மொழிச் சொற்கள் தமிழில் கலப்பதனால் மொழி வளம் பெறும். ஆகையால் பிற மொழிச் சொற்கள் கலப்பது நலம் பயக்கும் என்பர் வேறொரு சாரார்.

புதிய புதிய கருத்துக்களும் எண்ணங்களும் தோன்றும் போதெல்லாம் அப் புதிய கருத்துக்களையும், எண்ணங்களையும் விளக்குவதற்காக புதிய புதிய சொற்கள் தோன்றுகின்றன. இவ்விதமான மொழிகள் வளர்ந்து கொண்டேயிருக்கின்றன. ஒவ்வொரு மொழியிலும் வேற்று மொழிச் சொற்கள் கலப்பது இயற்கையாகவே ஏற்படுகிற நிகழ்ச்சியாகும். இருக்கு வேதம் போன்ற பழைய வடமொழியிலும் திராவிட மொழிச் சொற்கள் சில காணப்படுகின்றன. என்று மொழி ஆராய்ச்சி வல்லுநர்கள் கண்டறிந்திருக்கிறார்கள். பேச்சு வழக்கில் இல்லாமல் இலக்கிய வழக்கில் மட்டும் இருந்த பிற்காலத்து வடமொழியாகிய சமஸ்கிருத மொழியிலும் திராவிட மொழிச் சொற்கள் பல காணப்படுகின்றன என்றால் பேச்சு வழக்கில் நடைமுறையில் வழங்கி வருகிற மொழிகளில் பிறமொழிச் சொற்கள் புகாமல் இருக்கமுடியுமா? தேவைப்படுகிற சில சொற்களை வேற்று மொழியிலிருந்து ஏற்றுக் கொள்ள வேண்டுமேயல்லாமல் மனம்போனபடி பிறமொழிச் சொற்களை ஏற்றுக் கொள்ளுவது தவறு. அது மொழிக்குத் தீமை பயப்பதாகும். ஒரு மொழியில் பிறமொழிச் சொற்கள் கலப்பதென்றால் அக்கலப்பு இயற்கையாக நிகழ வேண்டியதல்லாமல் செயற்கையாகப் புகுத்துவதன்று. ஒரு பாஷையில் வேற்று மொழிச் சொற்கள் இயற்கையாகப் புக வேண்டுமேயல்லாமல் செயற்கையாகப் புகுத்தப்படக் கூடாது. அப்படிப் புகும் போது அந்தப் புதுச்சொல் எந்தப்பாஷையில் கலக்கிறதோ அந்தப் பாஷையின் இயல்புக்குத் தக்கபடி சில மாறுதல் பெறப்படுகிறது. சிறுபான்மை உருமாறாமலேசேர்வதுண்டு எல்லா மொழிகளுக்கும் உள்ள பொதுவான இந்த இயற்கைமுறை தமிழ் மொழிக்கும் பொருந்தும்.

தமிழ் பேச்சு வழக்கிலுள்ள உயிருள்ள மொழி கிரேக்க பாஷையும், இலத்தீன் பாஷையும், பாளி பாஷையும் பேச்சு வழக்கில் இருந்த காலத்திலிருந்து நெடுங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலமாக வழங்கி வருகிற பழையமொழி தமிழ், எனவே தமிழ் மொழியில் வேற்று மொழிச் சொற்கள் முக்காலத்திலும், இடைக் காலத்திலும், பிற்காலத்திலும் கலந்திருக்க வேண்டும். இந்த உண்மையைப் பழந்தமிழர் அறிந்திருந்தார்கள், அறிந்திருந்தபடியால்தான் தாங்கள் எழுதிய இலக்கண நூல்களில் பிறமொழிச் சொற்கள் கலப்பதற்கும் இலக்கணம் வகுத்தார்கள். பிறமொழிச் சொற்களுக்குத் ''திசைச் சொற்கள்'' என்று பெயரிட்டார்கள். திசைச் சொல் என்பது நாடுகளிலிருந்து செந்தமிழில் வந்து வழங்கும் சொற்களாகும். ஆதியிலிருந்து பதின்மூன்று செந்தமிழ் நிலங்களுள் தமிழ் நாடொழிந்த ஏனைய பன்னிரண்டும் இன்று கொடுந்தமிழ் நிலமாகவே காட்சியளிக்கிறது. இவை ஒரு காலத்தில் செந்தமிழ் வழங்கும் நாடுகளாகவே இருந்துள்ளன. பின்னர் பல்வேறு காரணங்களினால் இவை திரிபுபட்டு தமிழ் அல்லாத மொழிபேசும் பிரதேசங்களாக மாறின. அவ்வாறு மாறிய பிரதேசங்களில் வழங்கும் சொற்களை நாம் தமிழ் இலக்கியங்களில் பாவிக்கும் போது அவை திசைச் சொற்களாயின. கொடுங்கோல் நாடுகளான தென்பாண்டி நாட்டில் பசுவைப்பெற்றம் என்றும் சோற்றை சொன்றி என்றும் அழைப்பர். குட்டநாட்டில் தாயை தள்ளை என்பர். குடநாட்டில் தந்தையை அச்சன் என்பர். கற்கா நாட்டில் வஞ்சகரை கையர் என்பர். வேநாட்டில் தோட்டத்தை தடகிழார் என்பர். பூமி நாட்டில் சிறுகுளத்தை பாழி என்பர். பன்றிநாட்டில் வயலை செய் என்பர். அருவா நாட்டில் சிறுகுளத்தை கேணி என்பர். அருவா வடதலை நாட்டில் புளியை எகின் என்பர். சீதவநாட்டில் தோழனை எனுவன் என்பர். மலைய நாட்டில் நல்ல தண்ணீரை வெள்ளம் என்பர். சோழ நாட்டில் நாயை ஆய் என்பர். மேற்கூறிய பன்னிரண்டு நாடுகளையும் விட சிங்களம். சோனகம், சாலகம். சீனம், துருவம், குடகம், கெங்கணம். கன்னடம், கொல்லம், தெலுங்கம், கலிங்கம், வங்கம், கங்கம், மகதம், கடாரம், கௌடம், குசலம் போன்ற நாடுகளிலிருந்து வழங்கும் சொற்களும் திசைச் சொற்களாகவே கருதப்படும்,

''செந்தமிழ் நிலஞ்சேர் பன்னிரு
நிலத்திலும்
ஒன்பதிற்று இரண்டினில் தமிழ்
ஒழி நிலத்திலும்
தம் குறிப்பினவே திசைச்
சொல் என்பர்''

திசைச் சொல் அல்லாத வடமொழிச் சொற்கள் தமிழில் புகுமானால் அவை எவ்வாறு உருமாறவேண்டும் என்பதற்கும் இலக்கணம் எழுதினார்கள்.

கி. மு. மூன்றாம் நூற்றாண்டிற்குப் பின்னர் பாகதமொழிச் சொற்கள் தமிழில் கலந்தன. பாலி, சூரசேனி ஆகிய பாகத மொழிகளைப் பேசிய பௌத்த சமண சமயத்தார்கள் மத சம்பந்தமாக தமிழருடன் தொடர்பு கொண்டபோது அவர்கள் மூலமாக அக்காலத்தில் பாதகமொழிச் சொற்கள் சில தமிழில் கலந்தன. இவ்வாறு பாதகமொழிகள் தமிழ்நாட்டுடன் தொடர்பு கொண்ட சரித்திர வரலாற்றுண்மையை அறியாத பிற்காலத்தவர் இப் பாதக மொழிச் சொற்களை வடமொழி சிதைவு என்று கூறினர். வரலாறு அறிந்தவர் பாதக மொழிச்சொற்கள் நேரடியாகத் தமிழில் கலந்தவை என்பதையும் அவை வடமொழிச் சிதைவு அல்ல என்பதையும் நன்கு அறிவார்கள். முதன் முதலாகத் தமிழில் கலந்த திசைச் சொற்கள் பாதகமொழிச் சொற்கள் என்பதில் ஐயமில்லை. ஆரியத்துக்கும் தமிழிற்கும் பொதுவான எழுத்துக்களும் ஆரியத்திற்கே உரியதான சிறப்பெழுத்து திரிந்த எழுத்தாலும் இவ்விரண்டு தன்மையாலும் செந்தமிழ்ச் சொல் போன்று வடதிசையிலிருந்து வந்து செந்தமிழில் வழங்கும் சொற்களே வடசொல் எனப்படும். கிரேக்கர்களின் தொடர்பினாலே தமிழில் சில கிரேக்க மொழிச் சொற்கள் கலந்தன. சுருங்கை எனும் சொல்லும் கிரேக்க மொழிச்சொல் இச் சொல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''பெருங்குள மருங்கில் அருங்கைச் சிறுவழி
இரும்பெரு நீத்தம் புகுவது போல''

என்னும் ''அருங்கை வீதி மருங்கிற்போடு'' என்னும் மணிமேகலை, சிலப்பதிகாரக் காவியங்களில் வருகின்றது. நீரினால் நாழிகையை அளக்கும் கருவிக்குக் கன்னல் என்பது பெயர்.

''கோமகன் கோயில் குறுநீர்க் கன்னலின்
யாமங் கொள்பவர் எந்தொலி யரவமும்''

என்று மணிமேகலையில் வருகிறது. இச் சொற்கள் தமிழ்ச் சொற்கள் போலக் காணப்பட்டாலும் உண்மையில் இவை கிரேக்க மொழிச் சொற்களிலிருந்து பெறப்பட்டவையாகும்.

சங்க காலத்துக்குப் பிறகு ஆழ்வார்கள், நாயன்மார்கள் காலத்திலே வடமொழிச் சொற்கள் தமிழிலே கலப்புற்றன. அவை பெரும்பாலும் சமய சார்பான சொற்கள். இவ் வடசொற்கள் தமிழ்மொழிஅமைப்புக்கேற்ப உருத்திரிந்து விளங்கின. பின்னர் கி. பி. பதினைந்தாம் நூற்றாண்டில் ஐரோப்பாக் கண்டத்திலிருந்து போர்த்துக்கீசரும், அவர்களுக்குப்பிறகு ஆங்கிலேயரும் பிரெஞ்சுக்காரரும் நமது நாட்டிற்கு வியாபாரத்தின் பொருட்டு வந்தார்கள். அக்காலத்தில் ஐரோப்பியர்கள் போர்த்துக்கீச பாஷையைத் தமது பொது மொழியாக நமது நாட்டில் வழங்கி வந்தார்கள். எனவே ஏறக்குறைய நானூறு ஆண்டுகள் போர்த்துக்கீச பாஷை நமது நாட்டில் வாணிக மொழியாக வழங்கி வந்தது. அதன் காரணமாக சில போர்த்துக்கீச மொழிச் சொற்கள் தமிழில் கலந்தன. பீங்கான், மேசை, கதிரை (நாற்காலி) வாங்கு (விசிப்பலகை) அலுமாரி, கடுதாசி, சாவி, சன்னல், பீப்பா, ஆயா, துப்பாக்கி, ஆசுப்பத்திரி, சப்பாத்து, அலுப்பநேத்தி (குண்டூசி) முதலிய சொற்கள் போர்த்துக்கீச மொழிச் சொற்களாகும். இவை போன்ற ஏறக்குறைய நூறு போர்த்துக்கீசச் சொற்கள் உள்ளன. இவைகளில் பெரும்பாலும் இப்போது வழக்கிழந்துவிட்டன. மிகச்சில சொற்கள் மட்டும் வழங்குகின்றன. முகம்மதிய ஆட்சிக் காலத்தில் அரபிமொழிச் சொற்களும் உருதுமொழிச் சொற்களும், பாரசீக மொழிச் சொற்களும் தமிழில் கலந்தன. அசல், அத்து, அமல், கலால், கைது, கச்சேரி, தயார், நகல் பைசல், வக்கீல், வக்காலத்து, ஜாஸ்தி முதலியவை அரபிச் சொற்கள். இவை தமிழில் வழங்கப்படுகின்றன. இவையன்றி இன்னும் பல அரபிச் சொற்களும் உள்ளன. அம்பாரம், குமாஸ்தா, சிப்பந்தி, கமார், பந்தோபஸ்து, பேஷ், வாபஸ், ஜோர் முதலிய சொற்கள் பாரசீகச் சொற்கள். இலாகா, டாணா, தபால், துக்கடி, பட்டுவாடா முதலியவை இந்துஸ்தானிச் சொற்கள், இவற்றைவிட பல இந்துஸ்தானிச் சொற்கள் தமிழில் கலந்து வழங்குகின்றன. கி. பி. பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஆங்கிலேயரின் ஆட்சி நமது நாட்டில் ஏற்பட்டிருந்த வேளையில் பல ஆங்கிலச் சொற்கள் தமிழில் கலந்தன. ஆபீஸ், காப்டன், கோர்ட்டு, காபி, சம்மன், பேனா, பென்சில், பேப்பர், றோட், மோட்டார், பஸ், ரயில்வே, பொலீஸ், ஸ்கூல், காலேஜ், ஹோட்டல், சோப்பு முதலியவை ஆங்கிலச் சொற்கள். இவ்வாறு தமிழிலே பிறமொழிச் சொற்கள் கலந்து காணப்படுகின்றன. தமிழில் மட்டுமல்ல; உயிருள்ள பேச்சில் வழங்கி வருகின்ற எல்லா மொழிகளிலும் அப்பாஷைச் சொற்கள் கலந்துள்ளன. பெரும்பாலும் இவை பேச்சு வழக்கில் மட்டும் கலந்துள்ளன. இலக்கியத்தில் புகுந்த பிற மொழிச்சொற்கள் மிகச் சிலவே. தூய கன்னடம், தூயதெலுங்கு, தூயமலையாளம், தூய துருவம் போன்ற திராவிட மொழிச் சொற்கள் தமிழுடன் கலப்பதனால் தமிழ்மொழியின் தூய்மை கெடாது. ஏனெனில் இவையெல்லாம் ஓரினமொழிகள், ஆனால் திராவிட இனமல்லாத வேற்று மொழிச் சொற்கள் தமிழில் புகும் போது அவை தமிழின் இயற்கைக்கு ஏற்றவாறு மாறுதலடைந்து கலந்திருக்க வேண்டும். அப்படி இல்லையானால், மொழியின் இயற்கையும் அழகும் குறையும். இதனால்தான் அயல்மொழிகள் தமிழில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலக்கும் போது இன்னின்னபடி மாறுதல் பெற வேண்டும் என்று தமிழ் இலக்கணம் வகுத்தார்கள். ''தேவையில்லாத அயல் மொழிகளைச் சேர்க்காதே: இன்றியமையாமல் வேண்டியுள்ள அயல்மொழிச் சொற்களை எடுத்துக் கொள்'' என்பதே தூயதமிழ் வேண்டுவோர் கருத்தாகும்.

இப்பொழுது பிறமொழிச் சொற்கள் அதிகமாகத் தமிழில் கலக்கவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இப்பொழுது உலகம் சுருங்கிவிட்ட காரணத்தால் இரும்புப்பாதை, நீராவிக்கப்பல், ஆகாய விமானம் முதலிய போக்குவரத்துச் சாதனங்களும், டெலிபோன். தந்தி, ரேடியோ முதலியவைகளும் தூரத்தையும், நேரத்தையும் மிச்சப்படுத்துகின்றன. மாதக் கணக்கான தூரத்தில் இருந்தநாடுகளும், தேசங்களும் இப்பொழுது நாட்கணக்கில் மணிக்கணக்கில் சுருங்கிவிட்டன. உலகத்திலுள்ள எல்லாநாட்டாரும், விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் ஒருவருக்கொருவர் தொடர்பு கொள்கிற நிலை ஏற்பட்டுவிட்டது, அதன்பயனாக புதிய புதிய கருத்துக்களையும் எண்ணங்களையும் பெறுகிறோம். அதாவது புதிய புதிய சொற்களைப் பெறுகிறோம். இந்தச் சூழ்நிலையில் இருந்து தமிழும் தமிழரும் தப்பித்துக் கொள்ள முடியாது. ஒதுங்கிக் கிடந்தாலோ முன்னேற முடியாது. மேல் நாடுகள் எல்லாம் இப்பொழுது விஞ்ஞானத்தில் வெகுதூரம் முன்னேறிவிட்டன. கீழ்நாடுகள் எல்லாம் இப்பொழுது மேல்நாட்டின் விஞ்ஞானத்தை எட்டிப் பிடிக்க விரைவாக முயற்சி செய்கின்றன. மேல் நாட்டுடன் சமமாக இருக்க வேண்டுமானால் கீழ் நாடுகள் வெகு வேகத்தோடு முன்னேற வேண்டும். இவ்வாறு முன்னேற வேண்டுமானால் மேல்நாட்டு விஞ்ஞானங்களும் கீழ் நாட்டுமொழிகளில் இடம்பெற வேண்டும். அதாவது விஞ்ஞானக்கலைச் சொற்கள் கீழ்நாட்டுப் பாஷைகளில் புகவேண்டும். தமிழ்மொழியிலும் விஞ்ஞானக்கலைச் சொற்கள் ஏராளமாகத் தேவைப்படுகின்றன. ஆகவே விஞ்ஞானம் வளம்பெற்றுள்ள மேல் நாட்டு மொழிகளிலிருந்து கலைச்சொற்கள் நமக்கு இன்றியமையாமல் தேவைப்படுகின்றன. விஞ்ஞானக் கலை நூல்கள் ஆங்கிலம், பிரெஞ்சு, ஜேர்மனி, ருஷியம் போன்ற மேல்நாட்டு மொழிகளிலே எழுதப்பட்டுள்ளன. விஞ்ஞானம் வளர்ந்த நாட்டில் உள்ள விஞ்ஞானக் கலைச் சொற்களை அங்கிருந்தே நாம் பெற்றுக் கொள்வது தான் அறிவுடமை: அப்படி எடுக்கப்படும் விஞ்ஞானச் சொற்களை தமிழ் மரபுக்கு ஏற்றபடி அமைத்துக்கொள்ள வேண்டும்,

தமிழில் பிறமொழிச்சொற்கள் தேவை. ஆனால் குப்பை கூளங்கள் அல்ல. இன்றியமையாத மிகத் தேவையானவைகளாகவுள்ள வேற்று மொழிச் சொற்கள் தேவை. அதிலும் தமிழ் மரபுக்கேற்றபடி அமைந்த விஞ்ஞானச் சொற்கள் மிக மிகத் தேவை. தமிழ்மொழியின் தனி இயல்பு கெடாதபடி ஒவ்வொருவரும் கண்ணுங்கருத்துமாக அதைப் பாதுகாக்க வேண்டும். ஏனெனில் திராவிட இன மொழிகளில் தமிழ்மொழி ஒன்றே முதன்மையானதாய் இயற்கைத் தன்மை முகடாததாய் இருந்து வருகிறது. ஏனைய திராவிட மொழிகளாகிய கன்னடம், தெலுங்கு, மலையாளம் ஆகியவை தேவைக்குமேல் அளவுகடந்து சமஸ்கிருத மொழிச் சொற்களை மலையாளம் ஆகியவை தேவைக்கு மேல் அளவு கடந்து சமஸ்கிருத மொழிச் சொற்களை ஏராளமாக எடுத்துக் கொண்டபடியால் அவற்றின் தனித்தன்மை கெட்டுவிட்டது. அந்தப் பாஷைகளைத் திராவிட மொழிகளின் சிறப்பு மொழிகளாக உலகம் கருதவில்லை, தமிழ்மொழி அத்தகையதன்று' திராவிட இனமொழிகளில் தமிழ்மொழி ஏற்றவும் பழைய இலக்கிய வளமுடையது மட்டுமன்று; அதன் தனித் தன்மையும். தனிஇயல்பும் கெடாது இருந்து வருகிறது, தமிழின் தொன்மை இயல்பு கெடுமானால் உலகத்திலே தனித்திராவிட மொழியே இல்லாமற் போகும். ஆகவே தமிழின் இந்தத் தனிச் சிறப்பை ஒவ்வொரு தமிழனும் சிந்தித்து அதைக் கண்ணுங்கருத்துமாகப் போற்றிப் பாதுகாக்க வேண்டும். கண்டபடியெல்லாம் தேவையற்ற பிறமொழிச் சொற்கள் கலவாதபடி பார்த்துக் கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புள்ளி விபரவியல்

**B. ஜெயகரன்**
*ஆண்டு 13*
*வர்த்தகப் பிரிவு.*

## புள்ளி விபரம் என்றால் என்ன ?

தொன்மைக் காலத்திலிருந்தே ஒவ்வொரு கிராமமும் எத்தனை மக்களைக் கொண்டது. அவர்களது கல்வித்தரம் யாது? அவர்களுக்கு வேண்டியளவு உணவு உடை ஆகியவற்றைக் குறித்தும் பல விபரங்களையும் சேகரித்து வைத்திருந்தனர். புள்ளிவிபரவியல்முறை இக்காலத்திற்கு புதுமையானது ஒன்றல்ல. பழங்காலந் தொட்டே நடைமுறையில் இருந்து வந்த ஒன்றாகும். ஆனால் இக்காலத்தில் இப் புள்ளி விபரவியலறிவு போற்றப்படுவதற்குக் காரணம் மக்கட்தொகைப் பெருக்கமும், ஒவ்வொரு மனிதனுக்கும் உரிய தேவைகள் சராசரியாக நிறைவேற்றப் படுவதற்கான வாய்ப்பைக்காணும் ஆர்வமுமேயாம்.

ஒரு நாட்டின் சனத்தொகையைச் சரியாக அறிந்து கொள்வது மட்டுமன்றி உணவு, உடை, உறையுள் ஆகிய அடிப்படைத் தேவைகளை எந்த அளவிற்கு எல்லோருக்கும் அளிக்கமுடியும் என்றறிய புள்ளிவிபரவியல் உதவுகின்றது. கிராமம், மாவட்டம், நாடு என்று படிப்படியாக நலன்களைப் பெருக்கும் பொருளாதாரத் துறையில், கைத்தொழில் முதலிய பல்வேறு துறைகள் புள்ளிவிபரவியலின் துணையின்றி எதனையும் இயக்க முடியாது என்ற நிலை இன்று நிலவி வருவதைக் காணலாம். மேலும் கல்வி, உளவியல், விவசாயம், வர்த்தகம் மருத்துவம் போன்ற பல்வகைத்துறைகளிலும் சிறப்பான விளைவுகளைப் பெறப் புள்ளி விபரவியல் இன்றியமையாதது ஒன்றாகும்.

## புள்ளி விபரவியலின் வரையறைகள்

பொளிலி என்பவர் புள்ளிவிபரவியலை "எண்ணிக்கையின் அறிவியல்" எனக் கூறுகின்றார். புள்ளி விபரவியலில் பெரிதும் எண்ணிக்கை முறைகளைப் பயன்படுத்தினாலும் அவற்றோடு அதன் பணி முடிவதில்லை. பல்வேறு துறைகளிலும் சேகரிக்கப்பட்ட எண்ணிக்கை விபரங்களைக் கொண்டு மேலும் பல்வகை ஆய்வுகளும், சோதனைத்திட்டங்களும் மேற்கொண்ட பிறகே புள்ளிவிபரவியலில் முறைகளின் விழுமிய முடிவுகள் பெறப்படுகின்றன.

மேலும் எண்ணிக்கை முறைகளைப் பயன்படுத்த முடியாத சில துறைகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிப்பீடுகளைக் கொண்டே செயற்படுகின்றோம். எனவே இவ்வரையறை சிறந்ததென கொள்ளமுடியாது. "புள்ளி விபரவியல் மதிப்பீடுகளையும், நிகழ்தகவுகளையும் கொண்டதொரு அறிவியலாகும்." என கோடின்ரன் என்பவர் கூறியுள்ளார். இவை இரண்டும் புள்ளி விபரவியலின் இரு பெரும் பணிகளை மட்டும் குறிப்பன ஆதலால் இவ்வரையறை முழுமையானதொன்று;

யூல் என்பவர் புள்ளிவிபரவியலை "எண்ணற்ற காரணங்களால் குறிப்பிடக் கூடியளவு பாதிக்கப்பட்டுள்ள எண்ணிக்கை விபரங்களைக் கொண்டது" என வரையறுத்துள்ளார். இவ்வரையறை புள்ளி விபரவியலின் ஓர் தனிப்பண்பை வலியுறுத்துகிறது. சேகரிக்கப்படும் புள்ளி விபரங்கள் பல்வேறு காரணிகளால் பெருமளவு பாதிக்கப்படுவதால் ஒரு குறிப்பிட்ட காரணியால் மட்டும் ஏற்படக் கூடிய மாற்றத்தை அளக்க, மற்றக் காரணிகளின் மூலம் ஏற்படும் மாற்றத்தைக் கட்டுப்படுத்த வேண்டியுள்ளது. எனவே மற்ற அறிவியல்களைப் போன்று சோதனைக் கூட்டங்களில், திறனான கட்டுப்பாட்டிற்குள் இயங்கும் ஆராய்ச்சிகளை புள்ளிவிபரவியலில் மேற்கொள்ளவியலாது.

இது போன்று புள்ளிவிபரவியலின் விளக்கம் காண பல்வேறு அறிஞர்கள் வரையறைகளை வழங்கியுள்ளனர். எனினும் சீக்கிரஸ் என்பவரின் வரையறை இதன் தன்மைகள், பணிகள் அனைத்தையும் ஓரளவு சுருக்கச் சொல்லி விளங்க வைக்கும் திறன் படைத்ததென பலராலும் ஒப்புக்கொள்ளப்படுகின்றது. இவரின் வரையறையின்படி புள்ளி விபரங்கள் எண்ணற்ற காரணங்களால் பெருமளவு பாதிக்கப்பட்ட, கூடிய போதியளவு திருத்தத்துடன் சேகரிக்கப்பட்டு அல்லது மதிப்பிடப்பட்டு எண் வடிவில் எடுத்துக் கூறக் கூடிய முன் கூட்டியே தீர்மானிக்கப்பட்ட ஒரு நோக்கத்தோடு முறையான வழியில் சேகரிக்கப்பட்டு, ஒன்றோடு ஒன்று தொடர்பு உடையனவாக வைக்கக்கூடிய விபரங்களின் பெரும் தொகுதியாகும்;

## புள்ளி விபரவியலின் தன்மைகள்

1. புள்ளி விபரங்கள், விபரங்களின் பெரும் தொகுதி ஆகும். ஒரு குறிப்பிட்ட மாணவனின் மதிப்பெண்ணோ, தொழிற்சாலையில் பணி புரியும் தனிப்பட்ட ஒருவரின் வருமானமோ புள்ளி விபரம் ஆகாது.

2. புள்ளி விபரங்கள் எண்ணற்ற காரணங்களால் குறிப்பிடத்தக்க அளவு பாதிக்கப்படுகின்றன. எடுத்துக்காட்டாக ஒரு மருந்தின் சக்தியானது, மருந்து நோயாளியின் உடலுக்குள் பொருந்தும் தன்மை, காலம் தவறாது உட்கொள்ளும் முறை, வெட்பதட்டநிலை, நோயாளியின் உணவின் தன்மை, போன்ற பல காரணங்களால் பாதிக்கப்படுகின்றது.

3. புள்ளி விபரவியலில் காணப்படும் விபரங்கள் அனைத்தும் எண் வடிவில் தான் கூறப்பட வேண்டும். எடுத்துக்காட்டாக, விசைப்போட்டியில் மிகச் சிறந்தது, சாதாரணமானது, குறைந்தது என்று நடுவர்கள் தீர்ப்புக் கூறுவதற்குப் பதிலாக, மதிப்பெண்களை வழங்கி அவற்றின் சராசரியைக் கொண்டு முடிவுக்கு வருதல். புள்ளிவிபரங்களின் அடிப்படையில் அமைதல் ஆகும்.

4. விபரங்களை மதிப்பிடும் போதோ அல்லது சேகரிக்கப்படும் போதோ சூழ்நிலைக்குத் தக்கவாறு ஒரு குறிப்பிட்ட அளவு திருத்தத்தை பெற்றுத்தர வேண்டும். இறக்குமதி புள்ளி விபரங்களில் தங்கத்தின் அளவுகளைத் தரும்போது, கிராமை திருத்தமாகக் கூறுகின்றோம். இது போன்று இரும்பு போன்றவற்றின் அளவுகளை திருத்தளவில் கூறத் தேவையில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. புள்ளி விபரங்கள் ஒழுங்கான திட்டமிடப்பட்ட முறையில் சேகரிக்கப்படல் வேண்டும்.

6. புள்ளிவிபரவியல் ஆராய்ச்சிகள் நடத்தப்பட முன்பே அவற்றின் நோக்கம் சரிவரத் தீர்மானிக்கப்படல் வேண்டும்.

7. புள்ளி விபரங்கள் ஒன்றோடு ஒன்று ஒப்பிடும் வகையில் பொருத்தமாக அமைதல் வேண்டும்.

## புள்ளி விபரவியலின் சிறப்பு

1. கையாளுவதற்கு மிகவும் கடினமான எண்ணற்ற புள்ளி விபரங்களை ஒரு எளிய குறிப்பிட்ட, பாகுபடுத்தப்பட்ட வடிவில் எடுத்துக்கூறுவதற்குப் புள்ளி விபரவியல் உதவுகின்றது. ஒரு கல்லூரியில் புதிய வகுப்பில் சேர்வதற்கு வரும் 2000 விண்ணப்பங்களில் காணப்படும் மதிப்பெண்களை அப்படியே எடுத்து எழுதி கிடைக்கும் 2000 எண்களைக்கொண்டு எத்தகைய முடிவுக்கும் வர இயலாது. இதனையே மதிப்பெண்களின் அடிப்படையில் 450 இற்கு மேல் 400-450, 350-400, 300-350, 300 இற்கு கீழ் எனப்பல பிரிவுகளாகப் பிரித்து, அட்டவணைப்படுத்துவதன் மூலம் மாணவரின் தரத்தை நன்கு புரிந்து கொண்டு அதற்கேற்ப கல்லூரியில் வெவ்வேறு துறைகளில் இடம்தர முடியும்.

2. மக்களின் பொது அறிவுத்திறமை பெருக புள்ளி விபரவியல் பெரிதும் உதவுகின்றது. பொதுவாகப் பல்வேறு துறைகளில் உள்ள விபரங்களைப் பற்றி அறிந்து கொள்ள மக்கள் பெரிதும் ஈடுபாடு காட்டுவதில்லை. ஆனால், இவற்றையே நன்கு பகுக்கப்பட்ட பட்டியல்களிலே எடுத்துக் காட்டினால் அவற்றை அறிந்து கொள்வதில் பெரிதும் ஆர்வம் காட்டுகின்றனர்.

3. புள்ளி விபரவியல் விபரங்களை ஒப்பிடுவதற்கான வழிகளைத் தருகின்றது. பல்வகைச் சராசரிகள், விகிதங்கள், வரைபடங்கள், விளக்கப்படங்கள் இவற்றின் மூலமாக விபரங்களை எழுதி ஒப்பிடமுடிவதோடு அவற்றை சரியான கோணத்தில் இடையிட்டு முடிவு காணவும் முடிகின்றது.

4. புள்ளி விபரவியல். மாறிகளுக்கு இடையே உள்ள தொடர்பைக் கண்டறிய உதவுகின்றது. எடுத்துக்காட்டாக, உற்பத்தி விலைவாசி, மக்கட் பெருக்கம், வேலையில்லாத்திண்டாட்டம் முதலியவை ஒன்றோடு ஒன்று தொடர்பு உடைய மாறிகளின் இடையே உள்ள உடன் தொடர்புகளைக் கணக்கிடுவதோடு ஒரு மாறியின் மதிப்பு தரப்பட்டு இருக்கும் போது மற்றொன்றின் மதிப்பீட்டை அறியவும் வழிகோலுகின்றது.

5. புள்ளி விபரங்களின் அடிப்படையில் சரியான முடிவுகளுக்கு வருவதற்கு புள்ளி விபரவியல் உதவுவதால் இதனை 'எண்களின் தர்க சாஸ்திரம்' என்று கூறலாம். கடந்த கால புள்ளி விபரங்களை பகுத்தாய்வுக்கு உட்படுத்தும் போது, வருங்காலத்தில் அவற்றின் மதிப்புக்களை ஓரளவு திருத்தமாக மதிப்பிட முடியும். எடுத்துக்காட்டாக ஒரு தொழிற்சாலையின் இலாபங்களின் காலந் தொடர் வரிசையின் போக்களவைகளை அறிவதன் மூலம் கடந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தின் வரலாறு கொண்டு எதிர் காலத்தைப் பற்றி முன் கூட்டியே அறிந்து திட்டமிட வழி கோலுகின்றது.

## புள்ளி விபரவியலின் குறைகள்

1. எண்ணிக்கையில் வலியுறுத்தக்கூடிய விபரங்களை மட்டுமே புள்ளி விபரவியலில் கருத முடியும். அறிவுத்திறன், உடல்நலம் பயன்பாடு நட்பு, அழகு போன்ற பண்புகளை நேரடியாக ஆய்வு செய்ய புள்ளி விபரவியல் பயன்படாது. இது மாணவரது அறிவுத்திறனை ஒப்பிடவேண்டுமானால், எண்வடிவில் அவர்களது அறிவுக் கூர்மை எண்களையோ அல்லது 10 தேர்வுகளில் அவர்கள் பெற்ற மதிப்பெண்களின் சராசரிகளையோ ஒப்பிட்டு பார்த்துத்தான் கூறமுடியும்.

2. தொகுதியின் சராசரி மதிப்பில் மட்டுமே புள்ளி விபரவியல் கவனம் செலுத்துகின்றது. இந்நிலையில் தனிப்பட்ட மதிப்புக்களின் சிறப்புத் தன்மைகள் வெளிப்பட முடியாது. எடுத்துக்காட்டாக ஒரு நகர்ப் பகுதியில் வாழ்வோரது சராசரி மாத வருமானம் அங்கு வாழும் ஒரு சில பெரும் செல்வர்களால் ரூபா 350/- ஆக உயரலாம். ஆனால் அதே பகுதியில் மாதம் ரூபா 50/- இற்கு கீழும் வருமானம் உடைய 4 குடும்பங்கள் இருக்கலாம்.

3. புள்ளி விபரவியல் மற்ற அறிவியல்களைப் போன்று திருத்தமானது அன்று. பல்வேறு காரணங்களால் பாதிக்கப்படும் விபரங்களை ஆய்வு செய்வதன் மூலம் இதன் முடிவுகள் பெறப்படுவதால் சோதனைச்சாலையில் குறிப்பிட்ட கட்டுப்பட்ட நிலைகளில் நடத்தக்கூடிய இரசாயனவியல் ஆய்வுகளின் முடிவுகளைப்போல் திருத்தமான முடிவுகளைப் பெற முடியாது. புள்ளி விபரவியல் கூற்றுக்களை முற்றிலும் சரியான கூற்றுக்களாக கொள்ளாது சிறந்த மதிப்பீடாகத்தான் எடுத்துக்கொள்ள வேண்டும்.

4. கூறுகளைத் தேர்ந்தெடுத்து அவற்றை ஆராய்வதன் மூலம் அவற்றை எடுக்கப்பட்ட முழுமைத் தொகுதியின் பண்புகளைப்பற்றி மதிப்பிடுகின்றோம். நாம் தேர்ந்து எடுக்கும் கூறுகள் ஒருதலைச்சார்புடையனதாயின் முடிவுகள் சரியானவையாயிரா.

## புள்ளி விபரவியல் ஆய்வின் முதற்படி விபரங்களைச் சேகரித்தல் ஆகும்

விபரங்களைப் பெறுவதற்கு நன்கு திட்டமிடப்பட்ட அமைப்பை ஒவ்வொரு ஆய்வாளரும் பின்பற்ற வேண்டும். சேகரிக்கப்பட்ட விபரங்களைப் பொறுத்தே புள்ளி விபரவியல் ஆய்வின் வெற்றி அமைந்தால் விசாரணையில் ஏற்படக் கூடிய பல்வேறு சிக்கல்களையும் முன் கூட்டியே அறிந்து, அவற்றிற்கான தீர்வுகளையும் காணுதல் வேண்டும். ஒரு விசாரணையை மேற்கொள்ளும் போது முக்கிய கட்டங்கள் பின்வருமாறு.

I. விசாரணையைத் திட்டமிடல்.
II. வினாப்பட்டியலைத் தயாரித்தல்;
III. கூறைத் தேர்ந்தெடுத்தல்;
IV. விபரங்களைச் சேகரித்தல்;
V. சேகரித்த விபரங்களைச் சரிபார்த்து முறைப்படி அமைத்தல்.
VI. விபரங்களைப் பாகுபாடு செய்து அட்டவணைப்படுத்தல்.
VII. பட்டியல்களிலும் விளக்கப்படங்களிலும் விபரங்களை எடுத்துக் கூறுதல்;
VIII. விபரங்களை ஆராய்ந்து விளக்கம் காணுதல்;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசாரணையின் நோக்கம் முன் கூட்டியே திட்டவட்டமாக தீர்மானிக்கப்படுவதோடு, எவற்றைக் கொள்ள வேண்டும். எவற்றைத்தள்ள வேண்டும் என்பதையும் ஆய்வாளர் நன்கறிந்து இருந்தால் காலம், பணம் விரயமாவதைத் தடுப்பதோடு சரியான தகவல்களையும் பெற முடியும். விசாரணையின் நோக்கத்தை வரையறுத்தவுடன் தேவையான விபரங்கள் எவ்வாறு சேகரிப்பது எனத் தீர்மானிக்க வேண்டும். இதில் தேவையான விபரங்களை முதன் முதலாக விசாரணை நடத்திய சேகரித்தல் முதல் நிலை முறை எனவும், ஏற்கனவே வேறு விசாரணைகளுக்காக சேகரிக்கப்பட்ட பதிவேடுகள், வெளியீடுகள் என்பவற்றைப் பயன்படுத்துவதால் இரண்டாம் நிலை முறை எனவும் அழைக்கப்படும், இவற்றைவிட அரசுகளால் சட்டத்தின் வாயிலாக ஆணையிடப்பட்டு மக்களிடம் விபரங்களைப் பெறும் விசாரணைகள் மற்றும் விசாரணையில் அடங்கிய ஒவ்வொரு நபரிடமிருந்தும் விபரங்களைப் பெறும் முழுக் கணிப்பு முறை நேரடியாக ஆய்வாளரை நியமித்துத் தகவல் பெறுதல் போன்றவற்றின் மூலம் தகவல்களைப் பெற்றுக் கொள்ளமுடியும்.

### சார்புடைய பிழையும், சார்பற்ற பிழையும்

அளக்கும் கருவியில் உள்ள பிழையாலோ அல்லது ஆய்வாளரின் ஒரு தலைச் சார்புடைய தன்மையாலோ சேகரிக்கப்படும் விபரங்கள் சார்புடைய பிழையைக் கொண்டுள்ளன. எடுத்துக் காட்டாக மாணவர்களின் திறமையைக் காணும் போது ஒவ்வொரு ஒரு கிலோ கிராமுக்கும் ஒரு கிராம் குறைவாகக் காட்டக்கூடிய ஓர் எடைபார்க்கும் இயந்திரத்தைப் பயன்படுத்தினால் 50 கிலோ கிராம் எடை உடைய மாணவனுக்கு 50 கிராம் குறைவாகக் காணப்படும். இவ்வாறு ஒவ்வொரு அளவிலும் எடைக்குறைவு காணப்படுவதால் சார்புடைய பிழைகள் மேல் நோக்கியோ அல்லது கீழ் நோக்கியோ வளர்த்துக் கொண்டே செல்லும். எனவே இத்தகைய பிழைகளை அறவே நீக்க முற்பட வேண்டும். பெரும்பாலும் பெண்கள் தங்கள் வயதைக் குறைத்துக் கூறுவது, மக்கட் கணிப்பின்போது வயதைப் பூர்த்தி செய்யப்பட்ட பூர்த்தியான ஆண்டுகளில் கூறுவது, அதிகாரிகள் தங்களுக்குத் தேவையான உதவியாளரின் எண்ணிக்கையைக் கூறும் போது சிறிதளவு தேவைக்கு அதிகமாகவே கூறுதல் போன்றவை சார்புடைய பிழைக்கு எடுத்துக்காட்டாகும்.

ஒருதலைச் சார்பற்றபிழை ஒன்றுடன் ஒன்று ஈடுசெய்து இறுதியில் சிறிதளவே உண்மையான மதிப்பிலிருந்து கணக்கிடப்பட்டுள்ள மதிப்பு மாறும் வகையில் அமையும் விபரங்கள் சார்பற்ற பிழைகள் எனப் படும். எடுத்துக்காட்டாக முழு எண் மதிப்புகளை கணக்கிடும் போது 3.2 என்பதை 3 எனக் கொள்ளும் போது 0.2 ஐ விட்டு விடுகின்றோம். ஆனால் அது போலவே 4.8 என்பதை 5 எனக் கொண்டு 0.2 ஐ கூட்டி விடுகிறோம். எனவே பிழைகள் ஓரளவு ஒன்றை ஒன்று ஈடு செய்து விடுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாணி கல்வி நிலையம்

## சுன்னாகம்

**க. பொ. த. உயர்தரம் : கலை, வர்த்தக, விஞ்ஞான வகுப்புக்கள்**
**11ம், 10ம், 09ம் ஆண்டுக்கான வகுப்புக்கள்**
**புலமைப்பரிசில் பரீட்சைக்கான வகுப்புக்கள் நடைபெறுகின்றன.**

திரு. ச. தேவதாஸ்
( B. Com - Dip in Ed )
*இயக்குனர்*

இசையிலே மிதந்திட எதையுமே மறந்திட

# Fainaz Music Corner (Pvt) Ltd.

துல்லியமான ஒலித் தெளிவு
நவீன முறை இசைப்பதிவு
C D யிலிருந்து கெசட்டுகளுக்குப் பாடல் பதிவு செய்ய
நாடிச் செல்லுங்கள்

மீண்டும் மீண்டும் செல்லத்தூண்டும்
கண்டோர் மயங்கும் காட்சிக்கூடம்

**FAINAZ MUSIC CORNER ( PVT ) LTD.**

53 2/2, Lucky Peradise,
Second Floor
Keyzer Street,
Colombo - 11.

40 1/5, Galle Road,
Wellawatte,
Colombo - 6.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறித்த தவணையில், உரிய டிசைன்களில்,
அழகுக்கு அழகு செய்யும், தரமான அழகிய
22 KT தங்க நகைகளுக்கு நீங்கள்
நாடவேண்டிய சிறந்ததோர் ஸ்தாபனம்

நியூ அர்ச்சனா ஜுவலர்ஸ்

இல. 157 A, செட்டியார் தெரு,
கொழும்பு – 11.

வாழ்க! வாழ்க!

வணிக மன்றம்.

வணிக தீபம் மலர் சிறப்புற

எமது நல்லாசிகள்.

நலன் விரும்பி
கண்டியான்

குமரன் அச்சகம் 201, டாம் வீதி, கொழும்பு-12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org